# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 034 வள்ளுவர் ஆண்டு: 2045 மார்கழி 14, செவ்வாய்க்கிழமை 30.12.2014


**வானிலை**
மேகமூட்டமான வானிலை காணப்படும் மாலை, இரவு, வேளை மழை பெய்யக் கூடும்.

## தபால்மூல வாக்களிப்பு இன்று இறுதிநாள்

யாழ்ப்பாணம், டிசெ.30
ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு இறுதிநாள் இன்றாகும். இதுவரையில் வாக்களிக்காதவர்கள் இன்றைய தினம் தத்தமது மாவட்டத்தின் மாவட்டச் செயலகத்தில் வாக்களிக்க முடியும் என்று தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனவரி மாதம் 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ளது. இதற்குரிய தபால்மூல வாக்களிப்பு கடந்த 23 ஆம், 24 ஆம் திகதிகளில் இடம்பெற்றது. அத்துடன் கடந்த 26 ஆம் திகதி பொலிஸார் மற்றும்

பக்.25

## தேர்தல் வன்முறைகள் நாளாந்தம் 20க்கு மேல்

யாழ்ப்பாணம், டிசெ. 30
ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிவரும் நிலையில் நாளாந்தம் 20 இற்கு மேற்பட்ட தேர்தல் வன்முறைகள் குறித்த முறைப்பாடுகள் பதிவாகின்றன. நேற்று மட்டும் 31 மீறல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதோடு, இதுவரையான தேர்தல் வன்முறைகளாக 626 சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே நேற்றுத் தெரிவித்துள்ளது.

தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் தேர்தல் பரப்புரைக்காக மிக அதிகளவிலான அரச சொத்துக்களைச் சட்ட விரோதமாகப் பயன்படுத்துகின்றனர். அவ்வாறு இதுவரை 146 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. சட்டவிரோத தேர்தல் பரப்புரை

பக்.19

## தமிழ்க் கூட்டமைப்பின் ஆதரவு மைத்திரிக்கே

### உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்று வெளியாகும்

யாழ்ப்பாணம், டிசெ. 30
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்கவுள்ளது. இது தொடர்பான உத்தியோகபூர்வ முடிவு, அந்தக் கட்சியின் தலைவர் இரா. சம்பந்தனால் கொழும்பில் இன்று நடத்தப்படும் ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அறிவிக்கப்படவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில், ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் தமது நிலைப்பாட்டை பகிரங்கப் படுத்தியிருந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் மௌனம் சாதித்து வந்தது.

மருத்துவ சிகிச்சைக்காக இந்தியாவுக்குச் சென்றிருந்த அந்தக் கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன்நாடுதிரும்பிய பின்னரே முடிவு அறிவிக்கப்படும் என்று கூறப்பட்டு வந்தது.

பக்.19

# ஆதரவை எனக்கு தாருங்கள்



### கூட்டமைப்பை அழைக்கிறார் மைத்திரி

மட்டக்களப்பு, டிசெ. 30
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனியும் காலம் தாழ்த்தாமல் எமக்கு ஆதரவு வழங்கவேண்டும். சகல மக்களுக்கும் பொது எதிரணியுடன் இணைந்துள்ள நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பொது எதிரணியுடன் இணைந்து கொள்ள வேண்டும் – இவ்வாறு பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்தார்.

வடக்கு – கிழக்கு தமிழ் மக்களுக்கும், தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் நான் ஒரு வேண்டுகோளை விடுக்கின்றேன். இன்னும் காலம் தாழ்த்தாமல் எனக்கு ஆதரவு வழங்கி

பக்.21

## வடக்கில் இன்று பொது எதிரணி பரப்புரை

யாழ்ப்பாணம், டிசெ. 30
பொது எதிரணி ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பங்கெடுக்கும் பரப்புரைக் கூட்டங்கள் வடக்கின் மூன்று மாவட்டங்களில் இன்று நடைபெறவுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னமும் 9 நாள்கள் உள்ள நிலையில், வடக்குக்கான தேர்தல் பரப்புரையை பொது எதிரணி இன்று முதன் முறையாக நடத்தவுள்ளது. இந்தப் பரப்புரை நடவடிக்கைக்காக, பொது எதிரணி ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனநாயகக்கட்சியின் தலைவர் சரத்பொன்சேகா, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர்

பக்.21

## மஹிந்தவுக்காக களமிறங்கினார் சல்மான்



கொழும்பு, டிசெ.30
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆளுங்கட்சியிலிருந்து ஒவ்வொருவராக எதிர்கட்சிக்குத் தாவிக்கொண்டிருக்கும் நிலையில், தனது பரப்புரை நடவடிக்கைக்காக ஆகப்பிந்திய யுக்தியாக இந்திய சினிமாவின் பொலிவூட் நட்சத்திரங்களான நடிகர் சல்மான் கான் மற்றும் நடிகை ஜெகலின் பெர்னாண்டஸ் ஆகியோரை ஜனாதிபதி

பக்.25

## வடக்கில் வெள்ளத்தால் 83 ஆயிரம் பேர் பாதிப்பு

"கிழக்கு மாகாணத்தில் 8 லட்சத்து 29 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அதிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 4 லட்சத்து 93 ஆயிரம் பேரும், அம்பாறை மாவட்டத்தில் 2 லட்சத்து 89 ஆயிரம் பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்."

யாழ்ப்பாணம், டிசெ. 30
வடக்கில் தொடரும் கடும் மழை காரணமாக பாதிக்கப்பட்ட, இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை 83 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. நேற்றுவரை 23 ஆயிரத்து 582 குடும்பங்களைச் சேர்ந்த 83 ஆயிரத்து 153 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 7 ஆயிரத்து 233 குடும்பங்களைச் சேர்ந்த 25 ஆயிரத்து 741 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

பக்.25

## தமிழர்களுக்கு எதிராக என்னால் ஒருபோதும் செயற்பட முடியாது

### ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 30
தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலுக்கும், இலங்கை அரசுக்கும் தொடர்பு இல்லை. தமிழர்களுக்கு எதிராக என்னால் செயற்படவே முடியாது. – இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

பக்.25



## ஐ.நாவுக்கு பதிலடி: உள்ளக அறிக்கை தயாராகின்றது

கொழும்பு, டிசெ.30
காணாமல்போனோர் தொடர்பிலும், மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாகவும் விசாரணைகளை முன்னெடுத்துவரும் ஜனாதிபதி ஆணைக்குழு தனது அடுத்தகட்ட அமர்வை ஜனவரி 23,24,25,26 ஆகிய திகதிகளில் கிளிநொச்சியில் நடத்தவுள்ளது.
இந்த உள்ளக விசாரணைக் குழு

பக்.25



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுர்த்தி பயனாளிகளுக்கு அதிகரித்த கொடுப்பனவை உடன் வழங்க அழுத்தம்

## கொழும்பு அரசிலிருந்தாம்

யாழ்ப்பாணம், டிசெ. 30

சமுர்த்திப் பயனாளிகளுக்குரிய அதிகரித்த கொடுப்பனவை எதிர்வரும் ஜனவரி மாதம் தேர்தலுக்கு முன்னராகவே வழங்குமாறு சமுர்த்தி அதிகாரிகளுக்கு கொழும்பு அரசால் அழுத்தம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் செழிப்பான இல்லம் திட்டத்தின் கீழான இரண்டாம்கட்டக் கொடுப்பனவையும் உடனடியாக வழங்குமாறு பணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

ஜனவரி மாதம் 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ளது. அதற்கான பரப்புரைகளும் தற்போது சூடுபிடித்து வருகின்றன. இந்த நிலையில் அரச வளங்கள் தேர்தலுக்குப் பயன்படுத்தும் சம்பவங்களும் அதிகரித்து வருவதாக, சகல தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களும் சுட்டிக்காட்டி வருகின்றன. இருப்பினும் தொடர்ந்தும் அரச வளங்கள் தேர்தல் பரப்புரை நடவடிக்கைக்காகப் பயன்படுத்தப்படுவது நிறுத்தப்படுவதாக இல்லை.

அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் சமுர்த்தி பயனாளிகளுக்கு அதிகரித்த கொடுப்பனவு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனை உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக் கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதத்திற்குரிய சமுர்த்திக் கொடுப்பனவும், அந்த மாதத்தின் இரண்டாம் வாரத்திலேயே வழங்கப்பட்டு வந்தது. ஆனால் அதிகரித்த புதிய கொடுப்பனவை, ஜனவரி மாதம் 2 ஆம் திகதி வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அந்தக் கொடுப்பனவுகளை வழங்குமாறு பணிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், சமுர்த்தி திட்டப் பயனாளிகளுக்கு செழிப்பான இல்லம் திட்டத்தின் கீழ் முதற்கட்ட கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. இதன் இரண்டாம் கட்ட கொடுப்பனவையும் வழங்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற–5)

## 3ஆம் திகதி வரை வாக்காளர் அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம், டிசெ. 30

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையைக்கருத்தில்கொண்டு, வாக்காளர் அட்டை விநியோக நடவடிக்கை எதிர்வரும் 3 ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஜனவரி மாதம் 8 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான, வாக்காளர் அட்டை விநியோகம் கடந்த 22 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன், நாளையுடன் வாக்காளர் அட்டை விநியோகம்முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனாலும் நாட்டில் நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக தபால் திணைக்களத்தால், மக்களுக்கான வாக்காளர் அட்டை முழுமையாக விநியோகித்து முடிக்க முடியா போனது. இதனால் கால நீடிப்பு தேவை என்று தேர்தல்கள் திணைக்களத் திடம் கோரிக்கை விடுக்கப் பட்டிருந்தது. இதற்கமைய எதிர்வரும் 3 ஆம் திகதி வரையில் வாக்காளர் அட்டை விநியோகம் இடம் பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–5)

## விதைநெல் விநியோகம் நாளை

கிளிநொச்சி, டிசெ.30

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளின் விதை நெல் கொள்வனவுக்காக வழங்கப்படவிருந்த கொடுப்பனவு நாளை புதன் கிழமை வழங்கப்படவுள்ளதாக மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாதிக்கப்பட்ட விவசாயிகள் விதை நெல் கொள்வனவுக்கான கொடுப்பனவுகள் சனிக்கிழமை வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதில்பெயர் பட்டியலில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக குறித்தகொடுப்பனவுநிறுத்தப் பட்டதுஎன்றும் இந்தக்கொடுப்பனவுகள் நாளை புதன் கிழமை வழங்கப்படவுள்ளதாகவும் மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார். (வ–55)

## மஹிந்தவுக்கு எதிராக குற்றப் பிரேரணை

– சோபித தேரர் தெரிவிப்பு

இலங்கையர் அனைவரும் கௌரவமளிக்கவேண்டிய தேசிய கீதத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் பரப்புரைக்காகப் பயன்படுத்துகின்றார் எனத் தெரிவித்த நீதியான சமூகத்துக்கான மக்கள் இயக்கத்தின் ஏற்பாட்டாளர் கோட்டே நாகவிகாராதிபதி வண. மாதுலுவாவே சோபித தேரர், அதற்கு எதிர்ப்பு தெரிவித்து அரசமைப்புக்கமைய ஜனாதிபதி மஹிந்தவுக்கு எதிராக குற்றப் பிரேரணை கொண்டுவர முடியும் என்றும் தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்தி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேர்தல் பரப்புரையில் ஈடுபடுகின்றமையால், ஜனாதிபதித் தேர்தல் நீதியானதாக இடம்பெறாது. சுதந்திரமாக தமக்கு வாக்களிக்க முடியாது என்று மக்கள் பெரும் அச்சத்தில் உள்ளனர். எனவே, தமக்கு இருக்கின்ற அதிகாரங்களைப் பயன்படுத்தி நீதியான தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணையாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார். (ற–சி)

## தேர்தலை நடத்துவதா? 3ஆம் திகதியே முடிவு

தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 30

ஜனவரி 8 ஆம் திகதி தேர்தலை நடத்துவதா இல்லை ஒத்திவைப்பதா என்பது தொடர்பில் எதிர்வரும் 3 ஆம் திகதி முடிவு தெரிவிக்கப்படும் என்று தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இயற்கை இடரால் நாட்டில், பெரும்பாலானோர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் 8 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறுமா என்ற சந்தேகம் வலுப்பெற்றுள்ளது. இதுவரை 10 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களில் சுமார் 7 லட்சம் பேர் வாக்களிக்க தகுதிபெற்றவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் ஜனவரி மாதம் 3 ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் பிரதேச செயலாளர்கள், தேர்தல் கடமைகளை பொறுப்பேற்றுள்ள அதிகாரிகளுடன் கண்டியில் நடைபெறவுள்ள கலந்துரையாடலையடுத்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தற்போது நிலவும் சீரற்ற வானிலை காரணமாக ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பில்இதுவரை எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய குறிப்பிட்டுள்ளார். (ற–5)

## எனது கணவரை கொன்று விடாதீர்

நிவங்கா சோலங்காராச்சி மனைவி அரசிடம் கண்ணீருடன் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 30

எனது கணவரை கொலை செய்ய வேண்டாம் என்று ஆளுங் கட்சியிலிருந்து பொது எதிரணிக்குத் தாவிய, முல்லேரியா பிரதேச சபையின் தலைவர் பிரசன்னசோலங்காரச்சியின்மனைவி நிவங்கா சோலங்காரச்சி அரசிடம் கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு, கண்ணீருடன் இதனைத் தெரிவித்தார்.

'தயவு செய்து எனது கணவரை கொலை செய்ய வேண்டாம் என்று அரசிடம் கெஞ்சிக் கேட்கின்றேன். நான் தற்போது ஓர் கர்ப்பிணி' என்று கூறி நிவங்கா சோலங்காராச்சி செய்தியாளர் சந்திப்பில் தேம்பித் தேம்பி அழுதார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் தேர்தலில் போட்டியிட்ட சோலங்காரச்சி, முல்லேரிய பிரதேச சபையின் தலைவராக இருந்தார். ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், சோலங்காராச்சி பொது எதிரணிக்கு தாவினார். இந்த நிலையில் கடந்த சில தினங்களாகதன்னை இனந்தெரியாதோர் பின்தொடர்வதாக, சோலங்காராச்சி தெரிவித்திருந்தார். அத்துடன் தன்னை கொலை செய்வதற்கானமுயற்சிகள் இடம்பெறுவதாகத் தெரிவித்து அவர் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ற–5)

## மைத்திரிக்கு நெருங்கிய றோ தலைவர் அழைப்பு

இலங்கையின் கோரிக்கையை அடுத்து புதுடில்லி நடவடிக்கை

பொது எதிரணி வேட்பாளருடன் நெருங்கிய தொடர்பை பேணிய, இந்தியப் புலனாய்வு அமைப்பான றோவின் இலங்கைக்கான தலைவர் கே.இளங்கோ இந்தியாவுக்கு திருப்பி அழைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இலங்கை அரசின் கோரிக்கைக்கு அமையவே, புதுடில்லி இந்த முடிவை எடுத்துள்ளதாக, கொழும்பு ஆங்கில ஊடகமான சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில், றோ அதிகாரியாக கே.இளங்கோ பணியாற்றி வந்தார். அண்மையில் இவரது சேவைக்காலம் நீடிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுடன், குறித்த அதிகாரி நெருங்கிய தொடர்பை பேணியுள்ளார்.

இது தொடர்பில் இலங்கை அரசு, புதுடில்லிக்குப் போட்டுக் கொடுத்துள்ளது. இதனையடுத்து அவரைப் புதுடில்லிக்குத் திரும்புமாறுஇந்தியபாதுகாப்புஅமைச்சு உத்தரவிட்டுள்ளது. இதற்கமைய இவர் இந்தியாவுக்கு அவசர அவசரமாக திரும்பிச் சென்றுள்ளதாக, குறித்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–5)

## மைத்திரி கூட்டத்தில் கூட்டமைப்பு இல்லை

யாழ்ப்பாணம், டிசெ. 30

வடக்கில் பொது எதிரணியால் இன்று மேற்கொள்ளப்படவுள்ள பரப்புரை நடவடிக்கைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கெடுக்காது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வரும் நிலையில், பொது எதிரணி வடக்கில் இன்று பரப்புரை நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளது. இன்றைய தினம் மன்னார் நகரசபை மைதானம், வவுனியா கலைமகள் விளையாட்டு மைதானம்,நல்லூர்கிட்டுப்பூங்காவில் பரப்புரைக் கூட்டங்கள் பொது எதிரணியால்நடத்தப்படவுள்ளது. இந்தக் கூட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சித் தலைவர்களோ, அதன் பிரதிநிதிகளோ பங்கெடுக்க மாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கூட்டமைப்பு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற முடிவை இன்று அறிவிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால், பொது எதிரணியின் இன்றைய பரப்புரைக் கூட்டத்தில் கூட்டமைப்பு பங்கெடுக்காது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது. (ற–5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** எதிரிகள் வகையில் அசட்டையாக இருத்தல் கூடாது. புதிய முதலீடுகளின் போது ஆலோசனைகள் அவசியம். முயற்சிகளின் பேரில் புதிய ஒப்பந்தங்கள் கைபெழுத்தாகும். பொருளாதார ரீதியாக சிறப்பாக இருக்கும்.

**இடபம்:** குடும்ப ஒற்றுமைக்காக விட்டுக் கொடுத்துப்போக வேண்டியிருக்கும். உடல்நலத்தைப் பொறுத்தவரையில் பித்தம் மயக்கம் தொடர்பான பிரச்சினைகள் வரலாம். குழந்தைகள் நலன் சிறப்பாக இருக்கும்.

**மிதுனம்:** நீண்ட நாள்களாக இருந்து வந்த பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள். பின்தங்கிய நிலையிலிருப்பவர்கள் முன்னேற்றப் பாதையில் செல்வார்கள்.

**கடகம்:** வீண் விவாதங்களைத் தவிர்க்கவும். பிரிந்திருந்த குடும்பம் ஒன்று சேரும். முயற்சிகளின் பேரில் சுபகாரியங்கள் தங்கு தடையின்றி நடைபெறும். ஒருமுறைக்கு இருமுறை விசாரித்து வாங்குவது நல்லது.

**சிங்கம்:** உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அதிகமாக உழைக்கவேண்டியிருக்கும். சற்று முயற்சி எடுத்தால் பதவி உயர்வு உங்களை வந்து சேரும். எதிர்பார்த்திருந்த பணி இடமாற்றம் உங்களை வந்து சேரும்.

**கன்னி:** உங்கள் முயற்சிக்கு தகுந்த பலன்கள் வந்தே தீரும். காரிய அனுகூலமும் நற்சுகமும் பொருளாதார மேம்பாடும் உண்டாகும். நன்மைகள் கிடைக்கும். மதிப்பு மரியாதை கூடி செல்வாக்கு அதிகரிக்கும்.

**துலாம்:** உங்களைப் பற்றி உங்கள் குடும்பத்தினர் புரிந்து கொண்டு அனுசரணையாக நடந்து கொள்வர். ஏதேனும் ஒரு காரணத்தால் குடும்பத்தைவிட்டுப் பிரிந்து சென்றவர்கள் ஒன்று சேருவார்கள்.

**விருச்சிகம்:** சளி மற்றும் மார்புத்தொல்லை வரலாம். கவனம் தேவை. உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும். உடன்பணி செய்வோர், மேலதிகாரிகள் ஆகியோரிடம் மிகுந்த நல்ல பெயர் ஏற்படும்.

**தனுசு:** சம்பள உயர்வு கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கும். சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பார்கள். வேலை இல்லாமல் தவித்தவர்களுக்கு தகுந்த சம்பளத்துடன் சிறந்த வேலை கிடைக்கும்

**மகரம்:** எந்தப் பிரச்சினையையும் சந்தித்து முறியடிக்கும் வல்லமையைப் பெறலாம். காரியத்தடைகள் நீங்கி அனுகூலம் பிறக்கும். மதிப்பு மரியாதை சுமாராகவே இருக்கும்.

**கும்பம்:** வீண் விவாதங்களைத் தவிர்க்கவும். குடும்பத்தின் தேவைகள் பூர்த்தியாகும். சிலர் தொழில் நிமித்தமாக குடும்பத்தை விட்டுப் பிரிய நேரிடலாம். தூரத்தில் இருக்கும் உறவினரால் நன்மை ஏற்படும்.

**மீனம்:** உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். ஆனாலும் வருமானத்தில் எந்தக் குறையும் இருக்காது. உடன் பணிபுரிவோரிடம் அனுசரணையாக நடந்து கொள்ளவும். சிலர் எதிர்பாராத இடமாற்றத்தை சந்திக்கலாம்.

## இன்றை பேஸ் புக் தத்துவம்

ஒரு கேள்விக்கு மிக நீண்டதொரு விளக்கத்தை ஒருவர் சொல்கிறார் என்றால், அதன் விடையில் அவருக்கே சில சந்தேகம் உள்ளதென்று பொருள்...




# ஆச்சரியமான அமேசன்





உலகில் உள்ள காடுகளிலேயே மிகப் பெரியதும் அடர்த்தியானதும் அமேசன் காடு தான். அங்கு உற்பத்தியாகும், நதிகளின் ராணி என்று அழைக்கப்படும் அமேசன் நதி 6 ஆயிரத்து 712 கிலோ மீற்றர் நீளம் கொண்டது.

இந்த மாபெரும் நதியினை சூழ்ந்திருக்கும் அமேசன் காடு பிரேஸில், கொலம்பியா, வெனிசுலா உள்பட 8 நாடுகளை எல்லைகளாக கொண்டுள்ளது.

உலகப் பறவை இனங்களில் மூன்றில் ஒரு பங்கு, உலகில் உள்ள ஒரு கோடிக்கும் மேலான உயிரினங்களில் அதாவது தாவரம், விலங்கு, பூச்சி போன்றவற்றில் அமேசன் காடுகளில் மட்டுமே 50 லட்சத்துக்கும் மேல் இருக்கின்றன. 2 ஆயிரத்து 500 வகை மீன்கள், ஆயிரத்து 500 வகை பறவைகள், ஆயிரத்து 800 வகை வண்ணத்துப்பூச்சிகள், 200 விதமான கொசுக்கள் என பல்லுயிர் பெருக்கத்தின் முக்கிய இடமாக அமேசன் அமைந்துள்ளது.

இங்கு உருவாகும், அமேசன் நதி பிறக்கும் இடத்தில் இருந்து, சுமார் ஆயிரத்து 100 துணை நதிகளை தன்னோடு இணைத்துக்கொண்டு கடலில் சென்று சேருகிறது.

# சின்னத்திரை நடுவர் சினிமாவில்



விஜய் தொலைக்காட்சியின் சூப்பர் சிங்கர் இசை நிகழ்சியில் நடுவராக இருக்கும் சவுமியா, சினிமாவில் நடிக்க ஆரம்பித்துள்ளார்.

இசையமைப்பாளரும், சின்னத்திரை நிகழ்ச்சித் தொகுப்பாளருமான ஜேம்ஸ் வசந்தன் இயக்கும், வானவில் வாழ்க்கை என்ற திரைப்படத்திலேயே நடிக்கச் சம்மதித்துள்ளார் சவுமியா. கர்நாடக இசைப் பாடகியான சவுமியா, சூப்பர் சிங்கர் இசை நிகழ்ச்சியில் நடுவராகப் பங்கெடுத்து, மக்கள் மனதில் இடம் பிடித்திருந்தார்.

இந்த நிலையில் அவரைத் தேடி சினிமா வாய்ப்பு வந்தது. முதலில் அதனை மறுத்த அவர், பின்னர் கதையின் தன்மையைப் புரிந்து கொண்டு நடிக்க சம்மதம் தெரிவித்திருக்கின்றார். படத்தில் கதாநாயகியின் தாயாராக நடிக்கவுள்ளார். மகளை பெரிய பாடகியாக்க வேண்டும் என்ற நோக்குடன் செயற்படும் தாயாக படத்தில் நடிக்க இருக்கின்றார்.

## கொஞ்சம் சிரிங்க பாஸ்...

ரவி : என் காதலியிடம் காதலைச் சொன்னேன். எனக்கு ஐந்து ரூபாதான் வீணாகியது. அவள் தான் பாவம். அவளுக்கு ஐநூறு ரூபா வீணாகிவிட்டது.

ராஜா : எப்படி உனக்கு ஐந்து ரூபா...? அவளுக்கு ஐநூறு ரூபா வீணாகியது...?

ரவி : எனக்கு 'ஐ லவ் யூ' என்று சொல்லி ஒரு பூ மட்டும்தான் கொடுத்தேன். அது வீணாகி விட்டது. ஆனால் அவளுக்குத்தான் அவளது செருப்பு பிஞ்சிடிச்சு...

(பயப்புள்ள அடிவாங்கினதுக்கு எப்படி பில்டப் கொடுக்கிறான் பாரு...)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்திகள்

# 4,229 வீடுகளில் டெங்குத் தரிசிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.30

யாழ்.மாநகரப் பகுதியில் கடந்த வாரம் இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு நடவடிக்கையின்போது 4ஆயிரத்து 229 வீடுகள் தரிசிக்கப்பட்டுள்ளதாகச் சுகாதார பகுதியினர் தெரிவித்தனர்.

இந்த டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகள் கடந்த 18ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை இடம்பெற்றது.

இந்த விழிப்புணர்வு செயற்பாடுகளில் மாநகர பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பொது மக்களின் வீடுகள், பொது இடங்கள் போன்றவை சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இந்தச் சோதனையின்போது 4ஆயிரத்து 229 வீடுகள் தரிசிக்கப்பட்டன. இவற்றில் 358 வீடுகளில் டெங்கு பரவுவதற் கான சூழல் காணப்பட்டன. அதில் 10 வீட்டு குடியிருப்பாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பிரதேசத்தில் தற்போது டெங்கின் தாக்கம் அதிகரித்துச் செல்கின்றது.

டெங்கை உடனடியாக கட்டுப்படுத்துவதற்காக விழிப்புணர்வுச் செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த விழிப்புணர்வு நடவடிக்கையில் பொதுச் சுகாதாரப் பகுதியினருடன் மாநகர பணியாளர்கள், பொலிஸார், கிராம உத்தியோகத்தர்கள் , பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

டெங்கின் தாக்கம் அதிகமாக காணப்படும் நல்லூர், வண்ணார்பண்ணை, நாவாந்துறை பிரதேசங்களில் இந்த விழிப்புணர்வுச் செயற்பாடுகள் இடம்பெறும் என்று சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர். (த–17)

## வெங்காயம் வெள்ளத்தில்

யாழ்ப்பாணம்,டிசெ.30

தற்போது தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழையினால் வலி.கிழக்குப் பிரதேசத்தில் பயிரிடப்பட்ட வெங்காயப் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கூடுலாகத் தாழ்ந்த விவசாய நிலங்களில் பயிரிடப்பட்ட வெங்காயப் பயிர்கள் தற்போது பெய்து வரும் மழையினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

சிறுப்பிட்டி, நவக்கிரி, அச்செழு, புன்னாலைக்கட்டுவன், ஊரெழு போன்ற பகுதிகளில் பயிரிடப்பட்ட வெங்காயப் பயிர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே கடந்த ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் பெய்த கன மழையினாலும் வெங்காயப் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கிப் பாதிக்கப்பட்டன.

வெங்காயச் செய்கைக்கு ஏற்ற காலம் தற்போது இல்லாத போதும் அதையும் மீறி விவசாயிகள் சிலர் இந்தச் செய்கையில் ஈடுபட்டதால் அவை மழையால் பாதிக்கப்பட்டதாக விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, வெங்காயத்தின் விலையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. முன்னர் கிலோ 80 ரூபாவாக விற்கப்பட்ட சின்ன வெங்காயம் தற்போது 100 ரூபாவுக்கு மேல் விற்கப்படுகின்றது. (த–17)



சுன்னாகம் றோட்டரக்ட் கழகத்தின் ஏற்பாட்டில் குடாநாட்டில் அதிகரித்து வரும் செயற்கை உரப்பாவனை மற்றும் நீர்மாசடைதல் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் சைக்கிள் பவனி ஒன்று கடந்த வாரம் நடத்தப்பட்டது.

சாவகச்சேரியில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்த சைக்கிள் பவனி தெல்லிப்பழை வரை நடைபெற்றது. (த–14)

## நீர் நிலைகளில் தவறி விழுந்து உயிரிழப்போர் அதிகரிப்பு

தென்மராட்சி,டிசெ.30

அண்மைய காலநிலை மாற்றத்தினால் நாடளாவிய ரீதியில் நீர் நிலைகளில் நீர்மட்டம் உயர்ந்து வருவதால் அவற்றினுள் தவறி வீழ்ந்து உயிரிழப்போரின் எண்ணிக்கையும் தினமும் அதிகரித்து வருகின்றது.

அந்த வகையில் சாவகச்சேரியில் நேற்றும் முதியவர் ஒருவர் கிணற்றில் தவறி வீழ்ந்து உயிரிழந்தார்.

சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியைச் சேர்ந்த கந்தப்பு பாலசுப்பிரமணியம் (வயது–74) என்னும் முதியவரே கிணற்றில் தவறி வீழ்ந்து உயிரிழந்தவராவார்.

நேற்று அதிகாலை இயற்கைக் கடன் கழிப்பதற்காகக் கிணற்றில் நீர் எடுக்கச் சென்றபோது கிணற்று மேடை சறுக்கியதில் அவர் கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாகச் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் கொடிகாமத்தில் முதியவர் ஒருவர் பொதுக் கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

(த–9)

## குளித்துக்கொண்டிருந்த பெண்ணை படம் பிடித்த இளைஞருக்கு மறியல்

தென்மராட்சி,டிசெ.30

கொடிகாமம் பகுதியில் கிணற்றில் குளித்துக் கொண்டிருந்த பெண்ணை கையடக்கத் தொலை பேசியில் வீடியோ படம் பதிவு செய்த இளைஞரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

பெண் குளிக்கும் காட்சியை மறைந்திருந்து வீடியோ எடுத்துக்கொண்டிருந்த போது அவ்வழியே சென்ற நபரால் குறித்த இளைஞர் பிடிக்கப்பட்டுக் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

இந்த இளைஞரைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் பதில் நீதிவான் முன்னிலையில் முற்படுத்திய போது எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

கடந்த மாதம் மட்டுவில் பகுதியில் குளித்துக் கொண்டிருந்த 45 வயது குடும்பப் பெண்ணின் அவயவங்களை வீடியோ எடுத்த அந்தப் பகுதி இளைஞர், அதனைப் பெண்ணிடம் காட்டித் தகாத உறவுக்கு வருமாறும், இல்லையேல் பெண்ணின் திருமணமான மகளிடம் காட்டுவதுடன் இணையத்திலும் பிரசுரிக்கப் போவதாகவும் பயமுறுத்தியுள்ளார்.

இதனால் அச்சமடைந்த குடும் பப் பெண் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறையிட்டார். பொலிஸார் இந்த இளைஞரை கைதுசெய்து கடந்த மாதம் முற்படுத்தியபோது விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப் பட்டது. (த–9)

## சீரற்ற காலநிலையால் மீன்பிடி பெரும் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 30

தற்போது நிலவி வரும் சீரற்ற காலநிலையால் மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடியைக் கைவிட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு மற்றும் தீவுப் பகுதி உள்ளடங்கலாக ஆழ்கடலுக்குச் சென்று மீன் பிடிப்பதைக் கூடுதலான மீனவர்கள் தவிர்த்துள்ளனர்.

சீரற்ற காலநிலை, காற்றுடன் கூடிய கடல் கொந்தளிப்பால் மீன்பிடித்தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. ஆழ்கடல் மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதால் கடலுணவுகளின் விலை அதிகரித்துள்ளது.

குறிப்பாக யாழ்.நகரை அண்டிய கொட்டடி ,குருநகர், நாவாந்துறை, பாஷையூர், கொழும்புத்துறை போன்ற மீன் சந்தைகளில் கடலுணவுகளின் விலைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. (த–17)

## பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படமாட்டா

### மஹிந்த திட்டவட்டம்

தேசிய பாதுகாப்புக் காரணங்களுக்காக உயர்பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படமாட்டாது. அம்பாந்தோட்டையிலும், கொழும்பிலும் உயர் பாதுகாப்பு வலயங்கள் காணப்படும் போது வடக்கில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்களை மட்டும் எவ்வாறு அகற்றுவது. இவ்வாறு கேள்வி எழுப்பினார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

ஹங்வெல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

மக்கள் பேஸ்புக் போலிப் பிரசாரங்களுக்கு ஏமாந்துவிடக் கூடாது. பேஸ்புக் சமூக வலைத்தளத்தின் ஊடாக ஆட்சி மாற் [illegible] பட்டு வருகிறது. வெறுமனே மாற்றம் அவசியம் தேவை என்பதனை விடவும் எதற்காக மாற்றம் தேவை என்பது முக்கியமானது. முன்னாள் லிபிய அதிபர் முஹம்மர் கடாபிக்கு நேர்ந்ததே தமக்கும் நேரும் என சிலர் குறிப்பிட்டு வருகின்றனர். இலங்கை மக்களின் ஆதரவு இருக்கும் வரையில் எவராலும் என்னைத் தோற்கடிக்க முடியாது. நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி யுத்தம் முடிவுறுத்தப்பட்டது. அதனையே மக்கள் விரும்பினர்.

வடக்கில் இராணுவ பிரசன்னத்தை குறைக்குமாறு சில தரப்பினர் கோரி வருகின்றனர். தேசிய பாதுகாப்பு காரணங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படமாட்டாது. – என்று ஜனாதிபதி தெரிவித்தார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரையோர மக்கள் வெள்ளத்தில் தவிப்பு

## மழை தொடர்ந்தால் நிலைமை மேலும் மோசமாகும் அபாயம்

யாழ்ப்பாணம், டிசெ. 30
தற்போது நிலவி வரும் சீரற்ற காலநிலை, தொடர் மழை ஆகியவற்றால் யாழ். நகரை அண்டிய கரையோரப் பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.
கடந்த மாத இறுதியில் பெய்த மழையினால் கரையோரப் பகுதியில் தாழ்ந்த பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின. இதனால் இந்தப்பகுதியில் குடியிருக்கும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இதிலிருந்து அவர்கள் மீள்வதற்குள் மழை தொடர்ந்தும் பெய்து வருவதால் தாழ்ந்த இடங்கள் மீண்டும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.
வசந்தபுரம், சூரியஒளி, நித்திய ஒளி, பொம்மைவெளி, மீனாட்சிபுரம் போன்ற பகுதிகளில் உள்ள மக்களின் வீடுகளுக்குள் தொடர்ந்தும் வெள்ளம் தேங்கி அங்கு பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது.
அங்கு வசிக்கும் சிறுவர்கள், முதியவர்கள் எனப் பலரும் வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.
கிணறுகளுக்குள்ளும் வெள்ளம் நிரம்பியுள்ளதால் அங்கு பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்படும் அபாயம் உள்ளது.
"கடந்த இரண்டு மாதங்களாக வெள்ளத்துக்கு மத்தியிலேயே நாங்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்த தாழ்ந்த பகுதிகளை கிரவல் மண்ணால் நிரப்பிச் சீர் செய்து தருமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை" என அந்த மக்கள் கூறினர். (த-17)



## கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு எதிராக நோட்டீஸ்

கரணவாய், டிசெ.30
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர், வடமாகாண சபை அமைச்சர் ஆகியோருக்கு எதிரான சுவரொட்டிகள் வடமராட்சிப் பகுதியில் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வடமாகாண சபை விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆகியோரின் புகைப் படங்கள் தாங்கிய சுவரொட்டிகளே ஒட்டப்பட்டுள்ளன.
யாழ்.மக்கள் என்று உரிமை கோரப்பட்டுள்ள இந்தச் சுவரொட்டிகளில் இரணைமடுவில் மேலதிக நீரை யாழ்.மக்களுக்குத் தரமாட்டோம். கடலில் விடுவோம் என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. (த-108)

## கைக்குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ. 30
யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியரின் வீட்டுக்கு அருகாமையில் உள்ள வெற்றுக் காணியில் இருந்து பழைய கைக்குண்டு ஒன்று இராணுவத்தினரால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டுள்ளது.
யாழ். கச்சேரி காட்டுக் கந்தோர் வீதியில் உள்ள காணியைத் துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டவர்கள் கைக்குண்டைக் கண்டு யாழ்.பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.
அந்த தகவலைப் பொலிஸார் இராணுவத்தினருக்கு தெரிவித்து இராணுவத்தின் குண்டு செயலிழக்கும் பிரிவினர் அதனை மீட்டனர். (த-106)

## ஆணின் சடலம் கிணற்றில் மீட்பு

கிளிநொச்சி, டிசெ. 30
கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் உள்ள கிணறு ஒன்றினுள் இருந்து ஆண் ஒருவரின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.
கிளிநொச்சி தர்மபுரம் 7 ஆம் யுனிற் பகுதியில் உள்ள கிணறு ஒன்றினுள் ஆண் ஒருவரின் சடலம் காணப்படுவதாக பொது மக்கள் வழங்கிய தகவலை அடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.
இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் தர்மபுரம் 6ஆம் யுனிற்றைச் சேர்ந்த பொன்ராசா ஜெகதீஸ்வரன் (வயது-38) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.
கிளிநொச்சி மாவட்ட பதில் நீதிவான் எஸ்.சிவபாலசுப்பிரமணியம் சடலத்தை பார்வையிட்டு உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.
குறித்த நபர் கடந்த 25ஆம் திகதி காணாமற் போயிருந்ததாகவும், நேற்று முன் தினம் பிற்பகல் கிணற்றினுள் சடலம் காணப்பட்டதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர். (த-55)

## மழையினால் பயிரழிவு; தகவல் தரக் கோரிக்கை

வவுனியா, டிசெ. 30
வவுனியா மாவட்டத்தில் கருணைக் கிழங்கு, நெல், உழுந்து, இஞ்சி, பப்பாசி பயிரிட்டவர்கள் தற்போது பெய்து வரும் மழையினால் ஏற்பட்ட பாதிப்பு குறித்து வவுனியா மாவட்ட விவசாய திணைக்களத்துக்குத் தகவல் தருமாறு வவுனியாமாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் திருமதி அ.சிகிலாபானு தெரிவித்துள்ளார்
வவுனியா மாவட்டத்தில் பப்பாசி, கருணைக்கிழங்கு, நெல், உழுந்து, இஞ்சி போன்ற பயிர்கள் பயிரிடும் முறை குறித்த பயிற்சி மற்றும் ஆலோசனைகள் வவுனியா மாவட்ட விவசாயத்திணைக்களத்தால் வழங்கப்பட்டன. இவற்றின் மூலம் அதிகளவு விளைச்சல் கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம். எனினும் தொடச்சியாக மழை பெய்கிறது. இதற்கான நட்டஈட்டை அரசின் ஊடாகப் பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது. அதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம் - என்றார். (த-402)

## மழையைப் பயன்படுத்தி வாழைக்குலைத் திருட்டு

யாழ்ப்பாணம், டிசெ.30
கொட்டும் மழையைப் பயன்படுத்தி வாழைத் தோட்டங்களில் வாழைக் குலைகள் மீது திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.
இந்தத் திருட்டுச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு சிறுப்பிட்டி மேற்கில் உள்ள வாழைத் தோட்டத்தில் இடம்பெற்றுள்ளது.
கொட்டும் மழைக்கு மத்தியில் வாகனத்தில் வந்த திருடர்கள் வாழைத் தோட்டத்துக்குள் நுழைந்து இருபதுக்கும் மேற்பட்ட கதலிக் குலைகளை வெட்டிச் சென்றுள்ளனர்.
ஒவ்வொரு குலையும் நாற்பது கிலோவுக்கு மேற்பட்ட நிறையைக் கொண்டது என்று குறித்த விவசாயி தெரிவித்தார்.
அண்மையிலும் இந்த வாழைத் தோட்டத்தில் திருடர்கள் தமது கைவரிசையைகாட்டியிருந்தனர்.
இது குறித்து அச்சுவேலி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-17)



யாழ்.கோட்டையை சூழ்ந்துள்ள அகழிஎ்யத் துப்புரவாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த அகழி புற்கள், செடிகள் மூடி காணப்பட்டதை அடுத்து கனரக வாகனங்கள் மூலம் துப்புரவு செயற்பட்டு வருகின்றது. (த-17)

## வீதியை மூடி வெள்ளம் போக்குவரத்துத் தடை

தென்மராட்சி, டிசெ.30
வீதியை வெள்ளம் மூடியதால் தென்மராட்சி தெற்குப்பிரதேச மக்களின்போக்குவரத்து பாதையொன்று தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
தென்மராட்சிப் பிரதேச மக்கள் சாவகச்சேரி செல்வதற்குக் குறுகிய வீதியாக காணப்படும் கொல்லங்கிராய் வீதியே இவ்வாறு வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.
நெல் வயல்களின் நடுவிலே காணப்படும் இந்த வீதி கொல்லங்கிராய் இந்து மயானத்துக்குச் செல்லும் வீதி, நுணாவில் மேற்கு ஏ- 9 வீதியிலிருந்து தச்சன் தோப்பு வரை செல்கிறது.
தற்போது பெய்துவரும் மழையையடுத்து அந்தப் பகுதியில் உள்ள எருக்கலம்குளம், முதலைக்கிராய்குளம், மோதிரம் போட்ட கிராய் குளம், பெரிய கிளராய்க்குளம் ஆகியவற்றில் போதிய அணைக்கட்டு வசதிகள் இல்லாததால் குளங்கள் நிறைந்து வயல்களில் காணப்படும் பயிர்களுக்கு மேலாக பாய்வதுடன் வீதியின் இரு பக்க வயல்களையும் நிறைத்துள்ளதால் வீதி வெள்ளத்தினால் மூடப்பட்டுள்ளது.
இதனால் இந்த வீதியைப் பயன்படுத்திய மக்கள் தனங்கிளப்புச் சந்தி ஊடாக சாவகச்சேரி வந்து செல்வதாகத்தெரிவிக்கப்பட்டது.
தனங்கிளப்பு-சாவகச்சேரி வீதியும் மிக மோசமாக சேதமடைந்து காணப்படுவதால் சைக்கிள், மோட்டார் சைக்கிள் போன்றவற்றில் பயணிப்போர் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## மரக்கறி விலைகள் கிடுகிடுவென உயர்வு

யாழ்ப்பாணம், டிசெ. 30
யாழ். குடாநாட்டில் மரக்கறி வகைகளின் விலைகள் என்றும் இல்லாதவாறு அதிகரித்துள்ளன.
சகல மரக்கறி வகைகளும் கிலோ 200 ரூபாவுக்கு மேல் விற்கப்படுகின்றன.
தற்போது தொடர்ந்து பெய்து வரும் அடைமழையினால் மரக்கறிப் பயிர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் மரக்கறி வகைகளுக்குப் பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.
அத்துடன் தெற்கே பெய்துவரும் கன மழையினால் அங்கும் மரக்கறிப் பயிர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் மரக்கறி வகைகளின் வருகை வெகுவாகக் குறைந்துள்ளது.
தற்போது திருவெம்பாவை பூசை காலம் ஆகையால் குடா நாட்டில் மரக்கறிப் பாவனை அதிகளவில் உள்ளது. சந்தைகளில் போதிய மரக்கறி வகைகள் வந்து சேராமையாலும், அவற்றின் பற்றாக்குறை மற்றும் விலை அதிகரிப்பாலும் நுகர்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திகள்

## நல்லூர் பிரதேச செயலக நலன்புரி சங்க ஒளி விழா




யாழ்ப்பாணம்,டிசெ.30

நல்லூர் பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தால் கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட ஒளிவிழா கடந்த 19 ஆம் திகதி பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினர் அருட்தந்தை எஸ்.ஜே. இராசநாயகம் சிறப்பு விருந்தினர் அருட்தந்தை அ.லோறன்ஸ், கிராம அலுவலர் போ.இ.ஜேசுதாசன் ஆகியோர் கிறிஸ்து பிறப்பு தொடர்பான சிறப்பு உரைகளை வழங்கினார்கள்.

நிகழ்வில் இயேசு கிறிஸ்துவின் சிறப்பை விளக்கும் பாடல்களும் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் மற்றும் உத்தியோகத்தர்கள் உட்பட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டனர். (வ-7)

## மீசாலையில் இனங்காணப்பட்ட நீரிழிவு நோயாளர்கள் 50 பேர்

### சனியன்று நடந்த மருத்துவ முகாமில்



தென்மராட்சி, டிசெ.30

சாவகச்சேரி லயன்ஸ்கழகத்தினரால் நேற்றுமுன்தினம் மீசாலையில் நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனை முகாமில் 50 இற்கும் மேற்பட்டோருக்கு நீரிழிவு நோய் ஏற்பட்டிருப்பது இனங் காணப்பட்டு அவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் மேலதிக சிகிச்சை பெற பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் கண் பரிசோதனையில் கலந்து கொண்ட 300 பேரில் 200க்குமேற்பட்டோருக்கு கண் பார்வையில் குறைபாடு காணப்பட்டுள்ளமையும் கண்டு பிடிக்கப்பட்டு அவர்களில் வறுமைக் கோட்டின்கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த 200 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி லயன்ஸ்கழகத்தின் முன்னாள் தலைவர் லயன் மருத்துவர் வே.தம்பித்துரையின் நினைவாக மீசாலை விக்னேஸ்வரா ம.வி. மண்டபத்தில் நடத்தப்பட்ட இலவச மருத்துவ பரிசோதனை முகாமில் 300 இற்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.

சாவகச்சேரி மருத்துவனை பொது மருத்துவ நிபுணர் தி.சிறிகரன் நீரிழிவு தொடர்பான கருத்தரங்கையும் நடத்தினார். லயன் மருத்துவர் வே.தம்பித்துரையின் நினைவாக அவரது குடும்பத்தினரால் பார்வையில் குறைபாடு காணப்பட்டவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டதாகக் கழகத்தலைவர் லயன் க.தர்சன் தெரிவித்தார். (வ-9)

## முதியோரைப் பராமரிப்பதில் அக்கறை செலுத்த வேண்டும்

### கைதடி முதியோர் இல்ல அத்தியட்சகர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,டிசெ. 30

முதியவர்களை மக்கள் கைவிடக் கூடாது. அவர்களை அநாதைகளாக்கி இறுதியில் முதியோர் இல்லத்தில் இணைத்துக் கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

இவ்வாறு கைதடி முதியோர் இல்லத்தின் அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:- சிலர் வேலைக்காக அவர்களை அமர்த்திவிட்டு பின்னர் அவர்கள் வயதுமுதிர்ந்ததையும் பராமரிக்க வசதி இல்லாததையும் பயன்படுத்தி அரச முதியோர் இல்லத்தில் இணைத்து வருகின்றனர். இப்படிப்பட்ட நடவடிக்கைகளை மக்கள் கைவிட வேண்டும். 'பிள்ளைகளே பெற்றோர்களை பராமரிக்க வேண்டும்' என்ற இல்ல நிர்வாகத்தின் விழிப்புணர்வு நடவடிக்கைக்கு அமைவாக இந்த முதியோர்களை எவரும் கைவிடக் கூடாது.

இப்படியாக வீடுகளில் வேலைக்கு அமர்த்தப்பட்ட முதியோர்கள் இறுதியில் பராமரிப்புக்காக கைதடி முதியோர் இல்லத்தை நாடி வருவதை சம்பந்தப்பட்டவர்கள் தவிர்க்க வேண்டும். இல்லையேல் கைதடி அரச முதியோர் இல்லம் சம்பந்தப்பட்ட முதியோர்களை வேலைக்கு அமர்த்தியோர் மீது உரிய சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது"- என்றார். (வ-17)

## வைபவ ரீதியாகத் திறப்பு சாவகச்சேரியில் சாயி இல்லம்



தென்மராட்சி,டிசெ. 30

சாவகச்சேரி பொலிஸ் நிலைய வீதியில் நிர்மாணிக்கப்பட்ட சாயி இல்லம் சனிக்கிழமை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

சாவகச்சேரி கற்குழி வீதியில் தனியார் வீடொன்றில் இயங்கி வந்த சாயி நிலையத்திலிருந்து உருவப்படங்கள் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு நிரந்தர நிலையக் கட்டடத்தில் வைக்கப்பட்டுள்ளன.

சாயி பக்தர்களால் நீண்ட காலமாக வழிபாடு செய்யப்பட்ட சாயி உருவப்படம், 2000 ஆம் ஆண்டு போர் வேளையில் நிலையம் இயங்கிய வீடு சேதமடைந்தபோதிலும் சாயி உருவப்படம் இருந்த அறை எந்தவித பாதிப்பும் இல்லாமல் உருவப்படம் கண்ணாடியுடன் காணப்பட்டமை, 2002 ஆம் ஆண்டு மீள் குடியமர்ந்த மக்களால் அதிசயமாகப் பேசப்பட்டது. இந்த உருவப் படமும் அங்கு வைக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் நாடொன்றில் வதியும் சாவகச்சேரியைச் சேர்ந்த சாயி பக்தரொருவர் தனது சொந்தக் காணியை சாயி நிலையம் அமைப்பதற்கு வழங் கியிருந்தார்.

அந்தக் காணிக்குள் சுமார் 45 லட்சம் ரூபா செலவில் புதிதாக சாயி நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. சாயி வழிபாடுகள், பஜனைகள் போன்றவையும் இடம்பெற்றன. (வ-9)

## மேய்ச்சல் தரையின்றி கால்நடைகள் அழியும் நிலை

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மேய்ச்சல் தரையின்றி கால் நடைகள் அழிவுறும்நிலைஏற்பட்டுள்ளது. கால் நடைகளுக்கான இறுக்கமான கட்டுப்பாடுகளால் கால்நடை வளர்ப்போர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கால் நடைகளுக்கென ஒதுக்கப்பட்ட மேய்ச்சல் தரைக்கான காணிகள் அரச செல்வாக்கைப் பயன்படுத்தி மக்களுக்கு வழங்கப்பட்டதாலும் சிறு குளங்களின் நீரேந்துப் பிரதேச காணிகளை மக்கள் செய்கை பண்ணி வருவதாலும் மேய்ச்சல் தரையின்றி கால் நடைகளை மேய விட இடமில்லாமல் மக்கள் நாளாந்தம் தண்டம் செலுத்தி வருகின்றனர். இதனால் கால் நடைகளை பராமரிமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ-500)

## சாவகச்சேரி நகரசபையால் புனரமைப்புக்குரிய வீதிகள்

சாவகச்சேரி நகர சபையால் அடுத்தவருடம் சபைநிதி மூலம் புனரமைப்புச் செய்ய தெரிவு செய்யப்பட்ட 13 வீதிகளின்பெயர்களும் பராமரிப்பு செய் யப்படவுள்ள 10 வீதிகளின்பெயர்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.


சபையின் 2015 ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு - செலவுத் திட்டத்தில் ஒரு கோடி எட்டு லட்சம் ரூபா செலவில் 13 வீதி கள் புனரமைப்பும் 49 லட்சம் ரூபா செலவில் 10 வீதிகள் பரா மரிப்பும் (மறு தாரிடல்) செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த வேலைத் திட்டங்களின் பிரகாரம் வீதிப் புனரமைப் புக்கென சின்ன மண்டுவில் வீதி தொடர்வேலை, மீசாலை மாவடிப்புலம் வீதி தொடர் வேலை, நுணாவில் மேற்கு யாழ். வீதி நான்காம் ஒழுங்கை தொடர்வேலை,நுணாவில்மேற்கு காண்டைக்காடு வீதி தொடர் வேலை, மீசாலை மில் வீதி, நுணாவில் மேற்கு வீர பத்திரர் வீதி, வில்பத்து ஒழுங்கை, கல்வயல் சித்தன் மாவடி வீதி தொடர் வேலை,நுணாவில்மத்திஅடைப்பு வயல் ஒழுங்கை, நுணாவில் மேற்கு தண்ணீர் சால்மூட்டு வீதி, கோயிற்குடியிருப்புகச்சாய் வீதி முதலாம் வடக்கு ஒழுங்கை, கென்ஸ்மன் வீதி வடக்கு ஒழுங்கை, சப்பச்சி மாவடி வீதி ஆகிய 13 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

இவற்றுடன் மீசாலை பங்களா வீதி, மீசாலை நெல்லியடி முருகன் வீதி, கெருடாவில் பிலான் ஒழுங்கை, கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வீதி, நுணாவில் மத்தி தாளையடி அம்மன் இரண்டாம் ஒழுங்கை, ரயில் நிலைய ஒழுங்கை, பெருங்குளம் சங்கத்தானை 2 ஆம் ஒழுங்கை, செருக்கல் பிள்ளையார் வீதி ஆகியவை மீள் தாரிடலும் கோயிற்குடியிருப்புகந்தையா வீதி திருத்தமும் என 10 வீதிகள் பராமரிப்பு திட் டத்திலும் திருத்தம் செய்யப்படவுள்ளன. (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாடியோவ்!



## இவ்வளவு போட்டிகளும் பரிசுகளும் எமக்கா?

# 30 அகவையில் உதயன்

| இல | போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு ரூ. | 2ஆம் பரிசு ரூ. | 3ஆம் பரிசு ரூ. | மட்டம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| 02 | கவிதை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| 03 | கட்டுரை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 7,000 | 5,000 | 4,000 | மாகாணம் |
| 04 | ஓவியம் | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 7,000 | 5,000 | 4,000 | மாகாணம் |
| | | C | தரம் 3, 4, 5 | 5,000 | 4,000 | 3,000 | மாகாணம் |
| 01 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 02 | கவிதை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 03 | கட்டுரை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 04 | ஓவியம் | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | B | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | C | தரம் 3, 4, 5 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |

## தமிழ் வளர்ப்போம் தமிழால் இணைவோம்!

## ஓவியங்களே!

ஆம்! மாணவச் செல்வங்களைத்தான் அழைக்கின்றோம்!!
ஒவ்வொரு மாணவரும் ஒவ்வொரு ஓவியம்தான்.
ஓவியங்கள் வரையும் ஓவியம்.

உதயன் தனது 30 ஆவது ஆண்டினை முன்னிட்டு நடாத்தும் மாணவச் செல்வங்களுக்கான மாபெரும் ஓவியத் தேர்வு.

தேர்வு செய்யப்படும் ஓவிய மாணவச் செல்வங்களுக்குப் பெரிய அளவிலான பரிசு மழை.

ஓவியத் தேர்வு தரம் 3, தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கும் நடத்தப்படவுள்ளது.

உங்கள் எண்ணங்களை வண்ணமாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 28.02.2015.

**புத்தாண்டு அன்று பரிசு மழையில் நனையத் தயாராகுங்கள்.**
**ஆம்! சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று பரிசுகள் வழங்கப்படும்.**

உங்கள் எண்ண ஓட்டங்களை வண்ண ஓவியங்களாக்கி அனுப்பிவைக்கும் போது உதயன் படிவத்திலே உங்கள் பெயர் விவரங்களை, ஓவிய ஆக்கத்துடன் சேர்த்து அனுப்ப மறந்து விடாதீர்கள். அனுப்ப வேண்டிய முகவரி

**30 ஆவது அகவையில் உதயன்,**
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உங்கள் எண்ணக் காவியங்களை வண்ணக் காவியமாக்கும் வகையில் ஓவியப் போட்டிக்கான தலைப்புகளைத் தருகின்றோம்.

| பிரிவு | வகுப்புத் தரம் | தலைப்பு |
|---|---|---|
| A | தரம் 10,11,12,13 | தமிழர் பாரம்பரிய விளையாட்டில் ஈடுபடுவோர் |
| B | தரம் 06,07,08,09 | பனை வளமும் நாமும் |
| C | தரம் 03,04,05 | பண்டிகை நிகழ்வு |

35 செ.மீ. x 45 செ.மீ. (14" x 18") அளவுடைய வெள்ளை 'பிறிஸ்டல் போட்' அல்லது வெள்ளை நிற கென்ற் (Kent) தாளில், நீர் வர்ணம், பேஸ்டல் கலர், சோக் என்பன பயன்படுத்தி வரையலாம்.

உரிய பிரிவில் ஒருவர் ஓர் ஆக்கத்துக்கு மேலாகவும், உங்கள் ஆக்கங்களை அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு ஆக்கங்களுடனும் தனித் தனி விண்ணப்பப் படிவம் இணைத்தல் வேண்டும். மாணவரது ஆக்கம் என்பதனை உரிய பாடசாலை உறுதி செய்தலும் அவசியம்.

எங்கே?

வர்ணமய உலகில் சஞ்சரித்து உங்கள் ஆக்கங்களைத் தொடங்கலாம். பாடசாலை தொடங்கியதும் உறுதிப்படுத்தி அனுப்பி வையுங்கள். தேவைப்படும் இடத்து மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வாளர்கள் மீண்டும் ஒரு ஆக்கம் ஆக்கத் தயாராக இருக்கவேண்டும். அதற்கான வளங்களை நாம் வழங்குவோம்.

***வாழ்த்துக்கள்.***

### உதயன் 30ஆவது ஆண்டு ஆக்க இலக்கியத் தேர்வுகள்

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம்
(பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)
பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறிவிடவும்)

பங்குபற்றும் மாணவர் பெயர்:-
செல்வன்/செல்வி ..........
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு
..........
கற்கும் பாடசாலை: ..........
தரம்: ..........

பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ..........
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்: ..........
ஆசிரியரின் பாடத்துறை: ..........

அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் ........ ..இல் கல்வி கற்கும் செல்வன்/செல்வி .......... அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும்
பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனைப் பாவனைக்கு

உதயன் பத்திரிகையுடன் நாளாந்தம் இணைந்திருங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## குடாநாட்டு மக்களுக்கு சுத்தமான குடிதண்ணீர்

ஒன்றைக் கொடுக்கும் இறைவன் இன்னொன்றைக் கொடுக்காமல் விட்டுவிடுகிறான் என்பது சாதாரண மக்களின் வழக்குமொழி. தாம் கொடுக்காதுவிட்டாலும் அதனைத் தேடியோ, ஆராய்ந்தோ பெற்றுக்கொள்வதற்கான அறிவையும் ஆற்றலையும் மனிதனுக்கு அந்த இறைவனே வழங்கியுள்ளான்.

தென்னிலங்கையில் அருவிகள், ஓடைகள் மற்றும் ஆறுகள் என்று தண்ணீருக்கு பஞ்சமே இல்லை. அதற்குமேலாக மழையும் அவ்வப்போது அபரிமிதமாகப் பெய்து வேளாண்மைக்கு உதவுகிறது. நீர் மின்சாரம் நாடுமுழுவதற்கும் கிடைக்கிறது. இருந்தாலும் மலைகளும் பாறைகளும் இந்த மழையினால் நிலைதளர்வதால், நிலச்சரிவும், வெள்ளப் பெருக்கும், பாரிய மரங்களின் வீழ்ச்சியும் வருடாந்தம் நிகழும் பாதிப்புக்களாகி வருகின்றன.

அதற்கு நேர் மாறான நிலப்பிரதேசங்களையும் காலநிலை மாற்றங்களையும் கொண்ட வடக்குப் பிரதேசத்தில் வாழும் நாம் நிலத்தடி நீரையே நம்பிவாழ்கிறோம்.

கோடைகாலத்தில் ஒரு சில பகுதிகளைத் தவிர ஏனைய பகுதிகள் பெரும்பாலும் வறண்டு விடுகின்றன. குடிதண்ணீருக்காக மக்கள் - எமது தாய்மார், சகோதரிகள் , இளம் பிள்ளைகள் குடங்களோடு வெகுதூரம் குடிதண்ணீர் எடுத்துவரச் செல்வது வழக்கமாகியுள்ளது.

இந்த நிலைமைகளை மாற்றி அமைக்க கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு திட்டங்களும், செயற்பாடுகளும் வெற்றியளிக்கவில்லை.

தற்பொழுது காலநிலை சீரற்றுப் போய் மழை தொடர்ந்து பெய்தாலும் அந்த நீரை முழுமையாகத் தேக்கிவைத்துப் பயன்படுத்தும் சீரான திட்டங்கள் இல்லை. அதேசமயம் குடாநாட்டின் ஒரு பகுதியில் நிலத்தடி நீரில் எண்ணெய்க்கசிவு ஏற்பட்டு மக்களது ஆரோக்கியத்துக்குப் பெரும் சவாலைத் தோற்றுவித்துள்ளது. அதுபோக பொதுவாகவே குடாநாட்டின் பெரும்பாலான பகுதிகளிலும் நிலத்தடிநீர் அசுத்தமாகி வருவதாகவே நிபுணர்கள் கண்டறிந்து உள்ளனர். மனிதக் கழிவுகள், உலோகக் கசிவுகள் மற்றும் பல்வேறு வகையான ஆரோக்கியத்துக்குதவாத இரசாயனங்கள் கலந்திருப்பதாக அவர்கள் கவலை தெரிவிக்கிறார்கள்.

இத்தகைய ஒரு நிலை ஏற்படும் என்பதை எமது பெரியோர்கள் முன்கூட்டியே அறிந்து பரிகாரம் காணாமல் போனமை இதற்கு முக்கிய காரணம் எனலாம். வெகுகாலமாக நிலத்தடி நீர் பாவனையில் இருப்பதும் அதனால் அது குறைந்து வருவதும் மனித செயற்பாடுகளினாலேயே ஆகும். இரசாயனங்களும் இதர உலோகப் பொருள்களும் பூமிக்கடியில் செல்வதும் இதற்குக் காரணமாகி வருகின்றன. இந்த அபாயகரமான நிலைமையில்தான் வடக்கு மாகாணசபை கடல் நீரைச் சுத்திகரித்து வழங்கு வதற்கான ஒரு திட்டம் குறித்து முடிவெடுத்தி ருப்பதான நல்ல செய்தியொன்றைக் கேட்க முடிகிறது.

இரணைமடுக்குளத்து நீரைக் கொண்டு வருவதில் ஏற்பட்டுள்ள சிக்கலைத் தவிர்ப்பதற்கு மட்டுமன்றி, குடாநாட்டு மக்களுக்குக் குறைந்த செலவில் சுத்தமான குடிதண்ணீர் கிடைப்பதும் அவசியம். பிந்திய தகவல்களின்படி இந்திய நிபுணர், ஒருவரின் ஆலோசனைக்கமைவாக மருதங்கேணி யில் கிடைக்கும் கடல்நீரை சுத்திகரித்து வழங்கு வதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் அறியப் படுகிறது.

இந்தத் திட்டம் அவசியமும் அவசரமுமாக நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்றாகும். அது, எமது மக்களின் ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு மட்டுமன்றி எமது எதிர்கால சந்ததியினரின் ஆரோக்கியத்துக்கும் உதவுவதாக இருக்கும்.

மக்கள் நலன் சார்ந்த இத்திட்டம் விரைவாக நிறைவேறவும் அதற்கான வளங்கள் தாராளமாகக் கிடைக்கவும் மாகாணசபையின் சகல தரப்பினரும் ஒருங்கிணைந்து செயல்படுவது அவசியம். அதுவே இன்றைய தவிர்க்க முடியாத தேவை.

# கொழும்பின் அரசியல் சகதிக்குள் புதையுண்டு போகும் தமிழினம்?

■ லோகன் பரமசாமி

இலங்கை அதிபர் தேர்தலில் வடக்கு கிழக்கு தமிழர்களின் அரசியல் விருப்புகளை ஒரு பொருட்டாகக் கொள்ளாத நிலை காணப்படுவதை தமிழ் அரசியல்வாதிகள் சுட்டிகாட்டியுள்ளனர். இந்த நிலையைப்பல கொழும்புஊடகங்களும் எடுத்துக் காட்டுகின்ற போதிலும் அதனை விபரித்துக் காரணம் காட்டுவதில் பௌத்த சிங்கள பேரினவாத சிந்தனை தமிழர்களையே மீண்டும் குற்றவாளிகளாகக் காட்ட முனைவது தெரிகிறது. முன்னணித் தரப்புக்களான இருதரப்புக்களும் தமிழர்களை இணைத்துக் கொண்டால் பேரினவாதம் பேசி சிங்கள மக்களின் வாக்குகளை வெல்ல முடியாது என்பதே உண்மை.

அதேவேளை தமிழர்களை எதிரிகளாகக் காட்டாது விட்டாலும் அவர்களைக் கைவிட்டு விடுவதே சிங்கள வாக்காளர்களைக் கவர்வதற்கு ஒரே வழியாகும். நாட்டின் முக்கிய பிரச்சினைகளான அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வு, அரச பணியகங்களில் ஊழல், அதிபர் அதிகார முறைமை ஆகியவற்றை முதன்மை அம்சங்களாக இத்தேர்தல் கொண்டிருக்கிறது.

இது தமிழர்களின் தாயகம், அவர்களின் அடையாளம் தேசிய அளவில் அவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் அனைத்தும் பின் தள்ளப்படும் நிலையை உருவாக்குவதாகும். அரச அதிகாரத்தையும் அதன் கட்டமைப்பையும் வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்கள் ஏற்றுகொள்கின்றார்கள் என்பதை அனைத்துலகுக்கும் எடுத்து காட்டவும் இந்தத் தேர்தல் உதவ உள்ளது.

அரசு ஒன்றின் அடிப்படைப் பண்புகளில் அதிகாரமும் கட்டமைப்பும் அதனை ஏற்று வழிநடத்தும் மத்திய அரசும், அந்த அரசை நடத்தும் அரசுடன் இணைந்து செயற்படுவோரும் அதன் கொள்கைகளை மறுத்து நிற்போரும் மிக முக்கியமான அங்கங்களாக உள்ளனர். அதேவேளை இதே வரிசையில் வரக்கூடிய அடுத்த அங்கமான சமூகங்கள் மத்தியிலே சமநிலையும், வேற்றுமையும் என்ற பங்கு இத்தேர்தலில் கைவிடப்பட்டுள்ளது.

சமூகங்கள் மத்தியிலே சமநிலையும், வேற்றுமையும் என்ற அங்கம் பௌத்த சிங்கள பேரினவாத நலன்களை மட்டும் கருத்தில் கொண்டு பொருளாதார நோக்கில் கையாளப்படுவதன் மூலம் இனங்களிடையே உள்ள வேற்றுமை அரசியல் நோக்கத்திற்காக மேலும் வளர்க்கப்படுகிறது.

இதனால் இலங்கை ஜனநாயக அடிப்படைகளைப் பின்பற்றும் ஒரு நாடு இல்லை என்பதை எடுத்துக் காட்டும் ஒரு தேர்தலாக இத்தேர்தல் அமையும். ஏனெனில் இனவாத வேற்றுமையின் வளர்ச்சியில் நாட்டின் தலைவர் ஒருவரைத் தேர்ந்தெடுக்க உள்ள நிலையில் எந்தத் தலைவர் பதவிக்கு வந்தாலும் இனவாதமே இறுதி வெற்றி பெற்றதாக அமையும். அத்துடன் இதர தேசிய இனங்களுக்கு தேர்தலில் முக்கியத்துவம் வழங்காத நிலை உள்ளது.

மஹிந்த தனது தேவைக்கும், பதவிக்கும் ஏற்ற வகையில் அரசியல் சட்டத்தை மாற்றி அமைத்துள்ளார். இனவாத போற்றுகையின் உச்சத்தில் இவர் மீண்டும் பதவி ஏற்பது ஜனநாயகத்துக்குப் பாதகமாக அமையும் இதனை வைத்துக் கொண்டு தான் மேலை நாடுகள் ஏற்கனவே எச்சரிக்கை சமிக்ஞைகளை காண்பிக்க ஆரம்பித்துள்ளன.

ஒருவேளை எதிர்த்தரப்பு வெற்றி காணும் நிலை ஏற்பட்டால், அதிபரின் அதிகாரத்தை இல்லாது ஒழிப்பது என்பது நாடாளுமன்றத்தில் பலம் கொண்ட பகுதிக்கும், அதிஉச்ச அதிகாரம் கொண்ட அதிபருக்கும் இடையிலான நாடாளுமன்ற தொடர் நாடகக் காட்சிகளாக அமையுமே தவிர இதில் இனவாதம் அழிந்து விடப் போவதில்லை.

பதிலாக தமிழர் பிரச்சினைகள் இந்த நாடக ஜனநாயகக் காட்சிகள் மத்தியில் கரைந்து போகலாம். பௌத்த சிங்கள தேசியப் பிரச்சினைகளுடன் தமிழர் பிரச்சினை அடிபட்டுப் போவதற்கும் பெரும் வாய்ப்புகள் உண்டு. இதனால் அதிபர் முறைமை மாறுவதன் மூலம் எமது கனவுகள் அரசியல் விருப்புகள் தீர்க்கப்படும் என்று நினைப்பதோ அல்லது வேற்றுமைகள் நீங்கி இலங்கை என்ற தேசத்துடன் வாழலாம் என்று நினைப்பதோ இவை இரண்டுமே இலவம்பஞ்சுக் கதையாக மாறிவிடும்.

இந்தத் தேர்தல் மூலம் கொழும்பு ஊடகங்கள் ஒரு விடயத்தை முக்கியமாக நோக்குகின்றன. அதாவது எவ்வாறு வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மக்களை வாக்கு சாவடிக்குப் போக வைப்பது என்பது தான் அவர்களுடைய பிரச்சினை. அதுவே அவர்களுக்குப் போதுமானது. யாருக்கு அவர்கள் வாக்களிக்கின்றார்கள் என்பது முக்கியமல்ல.

இலங்கை அரச கட்டமைப்பு தமிழ் மக்களால் அங்கீகரிக்கப்பட்டது என்று வலியுறுத்தினால் அதுவே கொழும்பு அரசியலில் தமிழர்கள் நாட்டம் கொண்டுள்ளனர் என்ற அனைத்துலகத்திற்கான செய்தியாக அமையும். இது புலம் பெயர் நாடுகளில் உள்ள தமிழர் கட்டமைப்புகளுக்கு பெரும் சவாலாக அமையும்.

புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கும், தமிழ் வாக்காளர்களின் அரசியல் மனோநிலைக்கும் பெரிய வித்தியாசம் இல்லை. இனிமேல் புலம் பெயர் தமிழர் என்றும் உள்நாட்டில் வாழும் தமிழர் என்றும் பிரித்துப் பார்ப்பது தகுதியற்ற ஒன்றாகும்.

இலங்கைத் தீவில் தமது சுயலாபத்தை கருத்தில் கொண்டு இயங்கும் சிறு முதலீட்டாளர் தொடக்கம் வங்கி நிறுவனங்கள் வரையில் வடக்கு கிழக்கில் இருந்து தம்மால் எவற்றை எல்லாம் பெற்றுக் கொள்ள முடியுமோ அதற்கு ஏற்றாற் போல விளம்பரங்களும், செய்தித் திரிபுகளும் செய்து வருகின்றன. இதனால் வடக்கு கிழக்கு செழிப்படைந்து விட்டது போல் தெரிகிறது.

அடிப்படையில் போரால் பாதிக்கப்பட்டு ஏராளமானவர்கள் நாட்டை விட்டுப் புலம் பெயர நாதியற்ற இலட்சக் கணக்கான மக்களே வடக்கு கிழக்குப் பகுதியில் வாழ்கின்றனர்.

இவர்கள் வெளிநாடுகளில் வாழும் தமது உறவினர்களின் தயவிலும் சில சமூக சேவை நிறுவனங்களின் தயவிலுமே தமது வாழ்வை ஓட்டி வரு கின்றனர்.


அரச கட்டமைப்பினால் உருவாக்கப்பட கூடிய social welfare என்று அழைக்கப்படக்கூடிய எந்த சமூக நலன்களுக்குள்ளும் உட்பட்டவர்களாக வடக்கு கிழக்கு மக்கள் இல்லை. ஒருசில தேவைக்கு ஒவ்வாத நலன்கள் புள்ளி விபர நோக்கத்திற்காகவும் அரசியல் லாபத்திற்காகவும் ஆங்காங்கே பத்திரிகை விளம்பரத்தின் மத்தியில் இடம் பெற்றிருக்கலாம். அடிப்படையில் இவர்கள் கைவிடப்பட்ட மக்களாகவே பார்க்கப்பட வேண்டிய நிலை உள்ளது.

இதனால் புலம்பெயர் தமிழரையும், ஈழத்தில் வாழும் தமிழ் மக்களையும் பிரதிநிதித்துவப் படுத்துவோர் இணைந்த ஒரே தேசிய நோக்கம் கொண்ட மாநாடுகள் நடத்த வேண்டி உள்ளன. இது இனவாதத்தை சிந்திக்க வைக்கும்.

இராணுவ ஆக்கிரமிப்பின் உச்சத்தில் இருக்கும் நிலப்பகுதியும் அதன் குடித்தொகையும், அரசியல் அதிகாரங்கள் அற்று அற்ப விடயங்களுக்காக தம்மைத் தாமே அடித்துக்கொள்ளும் மாகாண சபை அரசியல் தலைமையும், கொழும்பு அரசியல் நாடகத்துக்குள் ஏற்கனவே சிக்குண்டு தவிக்கின்றன.

இவற்றைக் கருத்தில் கொண்டு கொழும்பு அதிகாரத்தையும் கட்டமைப்பையும் தமிழர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை உலகறியச் செய்யும் வண்ணம் செயற்படத் துணியுமிடத்து எந்த நேரத்திலும் நில ஆக்கிரமிப்பும் படைக் குவிப்பும் திசை திரும்பும். இந்த நிலை பல்வேறு நில ஆக்கிரமிப்பின் கீழ் உட்பட்ட சமுதாயங்களின் அனுபவங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சரியான நேரத்தில் சரியான முடிவு

தீஸன்

எப்போதுமே சரியான நேரத்தில் எடுக்கப்படும் ஒரு சரியான முடிவு வெற்றியை நோக்கியே இட்டுச் செல்வதுண்டு. அதேவேளை, பிழையான தருணத்தில் எடுக்கும் சரியான முடிவு கூடப் பெரும் பின்னடைவை ஏற்படுத்திவிடும். ஆனால், சரியான ஒரு தருணத்தில் எடுக்கக் கூடிய ஒரு பிழையான முடிவு சில சந்தர்ப்பங்களில் எம்மை மீள முடியாத அதல பாதாளத்திலேயே தள்ளி விடக்கூடிய சாத்தியம் உண்டு.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் ஆரம்பமான காலம் தொட்டு இன்றுவரை வரலாறு முழுவதுமே இதற்கு ஏராளமான உதாரணங்கள் உள்ளன.

இப்போது மீண்டும் ஒரு முறை தமிழ் மக்கள் முடிவு எடுக்க வேண்டிய தருணத்தில் வந்து நிற்கவேண்டியுள்ளது. அது தொடர்பாக சரியான தீர்க்க தரிசனமான ஒரு முடிவை எடுக்கவேண்டிய கட்டாயமும் உண்டு.



ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பரப்புரை நடவடிக்கைகள், வன்முறைகள், கட்சித் தாவல்கள் எனத் தேர்தல்களம் கொதி நிலையை அடைந்து கொண்டிருக்கிறது. தபால் மூல வாக்களிப்பும் நிறைவுபெற்று விட்டது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் சார்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், எதிரணியின் சார்பில் மைத்திரிபால சிறிசேனவும் களத்தில் இறங்கியுள்ளனர். அவர்கள் தமது தேர்தல் விஞ்ஞாபனங்கள் மூலம் தமது எதிர்கால வேலைத்திட்டங்களை முன்வைத்துள்ளனர்.

எனினும் இந்த இருவரில் எவருமே தேசிய இனப் பிரச்சினை தொடர்பாக எந்தவிதமான ஒரு தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்கவில்லை. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தற்சமயம் சமாதானமும் நல்லிணக்கமும் நிலவுவதாகவும் வடக்குக் கிழக்கு அபிவிருத்தி செய்யப்பட்டு வேகமாக முன்னேறி வருவதாகவும் தெரிவித்து வருகிறார். அவரைப் பொறுத்த வரையில் தேசிய இனப் பிரச்சினை என்பது ஒரு தீர்க்கப்பட்டுவிட்ட பிரச்சினை போலவே கருத்துகள் வெளிவருகின்றன.

அதேவேளை, மைத்திரிபால சிறிசேனவோ இனி அமைக்கப்படப் போகும் ஒரு தேசிய அரசின் மூலம் இனப்பிரச்சினை ஆராயப்படும் எனப் பந்தைத் தனது கைகளிலிருந்து எறிந்து விட்டுள்ளார்.

தமிழ் மக்களைப் பொறுத்த வரை இந்த இரு முக்கிய வேட்பாளர்களிடமும் இனப்பிரச்சினை தொடர்பாகத் திட்டவட்டமான எந்தவொரு வழிமுறையும் இல்லை என்பதைப் புரிந்து கொள்ளமுடியும். அதேவேளை, எந்த வொரு சிங்கள ஆட்சியாளர்களும் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்கத்தாகவே முன்வந்ததுமில்லை. அதற்கான ஒரு நியாயமான தீர்வுத் திட்டத்தைக் கொண்டிருக்கவுமில்லை.

எந்த வேட்பாளரும் தேசிய இனப் பிரச்சினை தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தாத நிலையில் எந்த வொரு வேட்பாளரையுமே தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டியதில்லை என்றஒருமேலோட்டமான பார்வை எழவும் கூடும். அதில் நியாயம் இல்லை எனச் சொல்லிவிட முடியாது.

ஆனால், நாங்கள் விரும்பினாலென்ன, விரும்பாவிட்டாலென்ன ஆதரித்தால் என்ன, ஆதரிக்காவிட்டால் என்ன இந்தத் தேர்தலில் தெரிவு செய்யப்படும் ஒரு ஜனாதிபதி தான் எங்களை ஆட்சி செய்யப் போகிறார். அவரது அதிகாரம் எங்களின் ஒவ்வொரு விடயங்களிலும் ஆதிக்கம் செலுத்தத் தான் போகிறது. அதாவது, நாம் ஒதுங்கி நின்றாலும் அதிகாரம் எம்மை ஒதுக்கிவிடாது.

எனவே, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக சரியான தருணத்தில் சரியான ஒரு முடிவை எடுத்து எமக்குச் சாதகமான ஒரு சூழலை ஏற்படுத்த இந்தத் தேர்தலைப் பயன்படுத்துவது முக்கியமானதாகும்.

எந்தவொருஆளுந்தரப்பும்எமது உரிமைகளைத் தாங்களாகவே தந்துவிடப் போவதில்லை. எம்மிடம் உள்ள ஒரே ஒரு வழி எமது உரிமைகளைப் பெற ஒன்றிணைந்து செயற்படுதலாகும். எமது உரிமை களுக்கான போராட்ட வடிவம் களத்துக்கேற்ப எப்படியும் அமையலாம். ஆனால், உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சி என்பது மாற்று வழி இல்லாத ஒரு பாதையாகும்.

கடந்த காலங்களில் கூட போராட்டங்கள் மட்டுமே இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பான சாதகமான நிலைமைகளை உருவாக்கின என்பது வரலாறு. தந்தை செல்வா தலைமையிலான தமிழ் மக்களின் அஹிம்சைப் போராட்டங்களே பண்டா–செல்வா ஒப்பந்தம், டட்லி–செல்வா ஒப்பந்தம் போன்றவை ஏற்பட வழி வகுத்தன. இளைஞர்களின் ஆயுத மேந்திய போராட்டமே ராஜீவ்–ஜேஆர் ஒப்பந்தம் உருவாக வழி கோலியது.

விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான போராட்டங்களே பல பேச்சுகள், ஒப்பந்தங்கள், சர்வதேச மயப்படுத்தப்படல், தமிழ் மக்கள் ஒரு சக்தியாக நிலை பெற்று நிற்றல் போன்ற ஆரோக்கியமான நிலை உருவாகக் காரணமாக அமைந்தன.

எனவே, ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின்பும் கூட நாம் போராடியே தான் எமது உரிமையைப் பெற முடியும் என்பதற்கு மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அதனால் நாம் தேர்தலில் ஒதுங்கிநின்றுவிட முடியுமா? இல்லை நிச்சயமாக அப்படி இருந்து விடமுடியாது. எமது போராட்டங்களை வெற்றியை நோக்கி முன்கொண்டு செல்ல ஒரு வாய்ப்பான சூழலை உருவாக்க இந்தத் தேர்தலை எப்படி நாம் பயன்படுத்துவது என்பது பற்றியே சிந்திக்க வேண்டியுள்ளோம்.

அப்படி ஒரு முடிவை எடுக்கும் போது நாம் கடந்த கால அனுபவங்களைக் கவனத்தில் எடுப்பது பொருத்தமானதாகவே இருக்கும்.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றபோது தமிழ் மக்கள் தேர்தலைப் புறக்கணித்து வாக்களிக்காமல் விட்டனர். ரணில் விக்கிரமசிங்க விடுதலைப்புலிகளுடன் பேச்சுகளை நடத்தியவாறே விடுதலைப்புலிகள் அமைப்பைப் பிளவுபடுத்தும் சதியை மேற்கொண்ட காரணத்தால் தமிழ் மக்கள் ரணிலுக்கு ஆதரவளிக்க மறுத்து விட்ட னர். அதன் காரணமாக மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி பீடமேற நேர்ந்தது.

இலங்கையின் ஒட்டுமொத்த அரசியலில் நாம் ஒரு பலவீனமான தரப்பாயுள்ள அதே வேளை, வடக்குக் கிழக்கில் நாம் மிகவும் பலம் வாய்ந்த தரப்பாகும்.

எனவே, நாம் எமது பலத்தில் தங்கி நின்று பலவீனத்தை வெற்றிகொண்டு முன்செல்ல வேண்டும். இன்று ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரு தரப்பிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒரு மிகப் பலமான சக்தி என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்க முடியாது. அதிகார பலம், அரச நிர்வாக பலம், இராணுவ பலம், எனப் பல்வேறு பலங்களைக் கொண்டவராக அவர் விளங்குகிறார். நிறை வேற்று அதிகாரம் மூலம் நீதித் துறை, சட்டம், ஒழுங்கு என்பவற்றைத் தான் நினைத்த வகையில் கையாளுமளவுக்கு அதிகாரம் கொண்ட வராக விளங்குகிறார்.

அதேவேளை, மஹிந்த ராஜபக்ஷவுடன் ஒப்பிடும்போது மைத்திரிபால சிறிசேன ஒரு பலவீனமான தரப்பேதான். அது மட்டுமன்றி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதன் மூலம் அவரின் அதிகாரங்களும் மட்டுப் படுத்தப்படும். அவரது நாடாளுமன்றம் கூடப் பல கட்சிகளின் ஒரு கூட்டு அதிகாரமாகவே இருக்கமுடியும். அவருக்கு பல சந்தர்ப்பங்களில் தமிழ், முஸ்லிம், மலையகத் தரப்பினரின் ஆதரவும் தேவைப்படும்.

இதேவேளையில் தமிழ் மக்கள் அனைவரும் தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் மூலம் தமது ஐக்கியத்தையும், இரு தரப்பின் மீதுமான தமது நம்பிக்கையின்மையையும் வெளிப்படுத்த வேண்டும் எனச் சிலர் கூறி வருகின்றனர். தமிழ் மக்கள் தமது ஐக்கியத்தைப் பல முறை நிரூபித்து விட்டனர். தொடர்ந்தும் தமிழ் மக்கள் தமது ஐக்கியத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.

சர்வதேசம் ஒரு நாட்டின் விவகாரங்களில் தலையிடுவதற்கு ஒரு வரையறை உண்டு. அது மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் என்பன தொடர்பாகவே அக்கறை காட்டும். எவர் ஆட்சியில் இருந்தாலும் இந்த நடவடிக்கைகள் தொடரும். அதற்கு ஓர் எல்லை உண்டு. ஆனால், தேசிய இனப்பிரச்சினை போன்ற உள்நாட்டு விவகாரங்களில் சர்வதேசம் தலையிடப் போவதில்லை.

ஆனால், தமிழ் மக்கள் சரியான நேரத்தில் சரியான முடிவுகளை எடுப்பதன் மூலம் எமது உரிமைப் போராட்டம் முன்செல்வதற்கு வாய்ப்பான களத்தை உருவாக்குவார்கள் என்பது மட்டும் நிச்சயம்.

> ❝ ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் சார்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் எதிரணியின் சார்பில் மைத்திரிபால சிறிசேனவும் களத்தில் இறங்கியுள்ளனர். அவர்கள் தமது தேர்தல் விஞ்ஞாபனங்கள் மூலம் தமது எதிர்கால வேலைத்திட்டங்களை முன்வைத்துள்ளனர்.
> எனினும் இந்த இருவரில் எவருமே தேசிய இனப் பிரச்சினை தொடர்பாக எந்தவிதமான ஒரு தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்து

## வாசகர் திருமுகம்

### வீதிக்கு எப்போது விமோசனம் கிடைக்கும்

வவுனியாவிலிருந்து மன்னார் செல்லும் வீதியில் பூவரசங்குளம் கிராமத்தின் இடையில் வடக்கு நோக்கிச் செல்லும் இரணை இலுப்பைக்குளம் வீதி சுமார் 30 வருடங்களுக்கு மேலாக எவ்வித புனரமைப்புமின்றி மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது. இந்த வீதியானது வவுனியா பிரதேச சபைக்கும் மன்னார் பிரதேச சபைக்கும் உரிய வீதியாகும்.

பூவரசங்குளத்திலிருந்து புலவனார் ஊர், மடுக் குளம், கோவில் மோட்டை, வேலங்குளம், செங்கற்படை, கருங்காலிக்குளம், தெகிளங்குளம், குஞ்சுக்குளம், கோவிற் புளியங்குளம், பூசாரி குளம் சந்தி ஆகிய பகுதிக் கிராமங்கள் வவுனியா மாவட்டத்தினுள் அடங்குகின்றன.இரணை இலுப்பைக்குளம், காக்கையன் குளம், பெரியகுளம், விளாத்திக் குளம், வலைஞன்கட்டு ஆகியன மன்னார் மாவட்டத்துக்கு உரியன.

மழை காலத்தில் இந்த வீதியில் பல பகுதிகளில் வெள்ளம் குளம் போன்று தேங்கி நிற்பதால் அதனூடாகப் பயணிப்பவர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். மேலும் இந்த வீதியின் ஏனைய பகுதிகளும் சேதமடைந்து காணப்படுவதுடன் பலத்த மழை பெய்யும் போது இந்தவீதியில் வெள்ளம் தேங்கி நிற்பதையும் காண முடிகின்றது. உரிய தரப்பினர் இந்த வீதியைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்காது விட்டால் எதிர்காலத்தில் மக்களின் சிரமங்கள் அதிகரிக்கவே செய்யும். ஏற்கனவே சேதமடைந்த நிலையில் காணப்பட்ட இந்த வீதி அண்மையில் பெய்த மழை காரணமாக மோசமாகச் சேதமடைந்து பயன்படுத்த முடியாத அளவுக்கு மாறியுள்ளது. இந்த வீதியைப் பயன்படுத்தும் மக்கள் அனுபவிக்கும் சிரமங்கள் வார்த்தைகளால் கூற முடியாதஅளவுக்குமோசமானவை? எனவே உரிய அதிகாரிகள் இனியும் காலத்தைக் கடத்தாது இந்த வீதியையும் அதனுடன் இணைந்த கழிவு வாய்க்கால் மதகுகளையும் புனரமைத்துத் தரவேண்டுமென இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.


*ஓர் அன்பர்,*
*கோவிற்புளியங்குளம்,*
*வேலங்குளம்.*

### வாகனங்கள் அகற்றப்படுமா?

ஒட்டுசுட்டான்ஆறுமுகம்வித்தியாலயவளாகத்தில் போர்க் காலத்தில் கைவிடப்பட்ட வாகனங்கள் அகற்றப்படாததால் அங்கு பற்றைகள் புல் பூண்டுகள் வளர்ந்து காணப்படுகின்றன. பாம்புகளும் ஏனைய விஷ ஜந்துக்களும் அங்கு காணப்படுகின்றன. அத்துடன் நுளம்புகளின் பெருக்கமும் காணப்படுகின்றது. இதனால் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மேலும் மாணவர்கள் விளையாடும் இடமாக இது உள்ளதால் அச்சமான சூழ்நிலை காணப்படுகின்றது. பெற்றோர்களும் ஆசிரியர்களும் இது தொடர்பாக பலமுறை தெரிவித்த போதிலும் எவ்வித பயனும் ஏற்படவில்லை. மேலும் இந்த வாகனங்கள் பாடசாலை மைதானத்துக்குப் பெரும் இடையூறாக உள்ளதாலும் அவற்றை அகற்றுவதற்கு உரியவர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்

*பெற்றோர்கள் மற்றும்*
*நலன்விரும்பிகள், ஒட்டுசுட்டான்.*

### கேலிச் சித்திரம்



நன்றி [illegible]

## யாரெல்லாம் பொறுப்பு?

இந்தோனேசியாவின் சுரபயா விமான நிலையத்தில் இருந்து ஞாயிற்றுக்கிழமை அதிகாலை புறப்பட்ட விமானம் பயணம் தொடங்கிய 42 நிமிடங்களில் சரியாக காலை 7.42 மணிக்கு கட்டுப்பாட்டு தொடர்பிலிருந்து திடீரென மாயமானதாக சிங்கப்பூர் சிவில் விமான போக்குவரத்து ஆணையம் தெரிவித்துள்ளது.

சுரபயா விமான நிலைய மேலாளர் திரிகோரா ரஹா ரஜியோ, மாயமான ய320-200 என்ற பயணிகள் விமானத்தில் சிங்கப்பூர், பிரிட்டன், மலேசியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 6 சிறுவர்கள், ஒரு குழந்தை உட்பட 155 பயணிகள் மற்றும் 7 பேர் கொண்ட விமானப் பணிக்குழுவினர் இருந்தனர் என்றும் விமானத்துக்கு என்ன நடந்தது என்பது குறித்த தேடுதல் பணி தொடங்கியுள்ளது என்றும் ஏ.பி. செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

இதேபோல கடந்த மார்ச் மாதம் 8ஆம் திகதி மலேசிய தலைநகரான கோலாலம்பூரில் இருந்து சீனத் தலைநகர் பீஜிங்குக்கு 239 பேருடன் சென்று கொண்டிருந்த மலேசியா ஏயார்லைன்ஸ் விமானம் நடுவானில் மாயமானது. இந்த விமானம் என்ன ஆனது என்பது இதுவரை மர்மமாகவே உள்ளது.

கடந்த ஜூலை 17ஆம் திகதி நெதர்லாந்தின் தலைநகர் ஆம்ஸ்டர்டாமில் இருந்து மலேசிய தலைநகர் கோலாலம்பூருக்குச் சென்ற மலேசியா ஏயார்லைன்ஸ் விமானம் உக்ரைன் வான் பரப்பில் பறந்தபோது மர்மமான முறையில் சுட்டு வீழ்த்தப்பட்டது. இதில் 298 பேர் உயிரிழந்தனர்.

மேலே தரப்பட்டவைகள் கடந்த சில மாதங்களில் அதிர்ச்சியை உண்டாக்கிய செய்திகள். அதுவும் மலேசியாவின் விமானத்துறையில் மட்டுமே மீண்டும் மீண்டும் நடந்த அதிர்ச்சிதரும் செய்திகள். இவ்வளவு பெரிய மக்கள் தொகையுடன் விமானங்கள் கடத்தப்படுதல், அது தொடர்பில் எந்தத் தகவலும் வெளித் தெரியாமல் மறைத்துவிடல் என்பன விரல் நுனியளவில் சுருங்கிவிட்ட உலகத் தொழில் நுட்ப வளர்ச்சியையும், தொடர்பாடலையும் தொடர்ந்தும் சந்தேகத்துக்குட்படுத்துபவை. நாம் எந்த நூற்றாண்டில் வாழ்கிறோம் என்று அடிக்கடி சிந்திக்க வைப்பவையாக இந்தக் கடத்தல்கள் அமைந்துவிட்டன.

ஆகவே இந்த ஆண்டுக்கும், நூற்றாண்டுக்கும் பெரும் அவமானமாக அமைந்துவிட்ட விமானக் கடத்தல்களுக்கு யார் பொறுப்பு?

முதலில் மலேசிய அரசே இதற்கு முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும். தவறு, முதல் தடவை நடக்கையில் மட்டும்தான் அது தவறு. பொது மக்களிடம் மன்னிப்புக் கோரவும் முடியும். ஆனால் தொடர்ச்சியாக, சில மாத இடைவெளிகளில் கடத்தல்கள் நடந்திருக்கின்றன. ஆனால் இன்னமும் அதற்கான காரணத்தைக் கண்டறியவில்லை. கடத்தியவர்கள் தொடர்பில் ஆதாரமான தகவல்களை இன்னமும் வெளியிடவில்லை. எனவேதான் இந்தக் கடத்தல்களுக்குப் பின்னால் மலேசிய அரசு தனது மக்களுக்குக் கொடுக்கும் பாதுகாப்பு குறித்து சந்தேகம் எழுகின்றது.

அடுத்த பொறுப்பாளி அமெரிக்கா. தானே உலக வல்லரசு என்று இன்றுவரை மார்தட்டிக் கொண்டு, அனைத்து நாடுகளது செயற்பாடுகளிலும் மூக்கை நுழைத்துக் கொண்டிருக்கும் அமெரிக்காவினால், அடுத்தடுத்து நடந்த இந்தக் கடத்தல்களுக்கான சூத்திரதாரிகளை கண்டுபிடிக்க முடியவில்லை. கண்டுபிடித்தாலும் அதனை வெளியிட முடியவில்லை. தீவிரவாதிகள் தான் கடத்திக் கொண்டிருக்கிறார்கள் எனக் கொண்டால் அதனைப் பொது மக்களுக்கு வெளிப்படுத்தினால் அனைவரும் தங்கள் பயணங்களில் தம் பாதுகாப்புக்குறித்து அவர்களே கவனமெடுப்பார்கள். குறித்த நாடுகளின் அரசையும், அந்த விமானத்தைச் செலுத்தும் விமானியையும் நம்பித்தான் இவ்வளவு உயிர்கள் வானில் பறக்க தயாராகின்றன. அதற்கே பாதுகாப்பு வழங்க முடியவில்லையெனில், விமான சேவைகள் எதற்கு,? அதை நடத்தும் அரசுகள் எதற்கு?

**பத்தி எழுத்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளுக்கு நுளம்பு கடிக்காமல் பூசும் மருந்து



தென்மராட்சி,டிசெ.30

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கு நுளம்பு கடிக்காமல் இருப்பதற்காக உடலில் பூசுவதற்கான மருந்தை சனிக் கிழமை வழங்கினர். 500 வில்லைகள் அடங்கிய மருந்துப் பொதியை கழகத் தலைவர் லயன் க.தர்சன், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் க.தயாளனிடம் கையளித்தார். அருகில் கழக உறுப்பினர்கள் காணப்படுகின்றனர். (வ-9)

# வைகுண்ட ஏகாதசி

யாழ்ப்பாணம், டிசெ.30

வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் ஆலயத்தின் வைகுண்ட ஏகாதசிப் பெரு விழா எதிர்வரும் முதலாம் திகதி வியாழக் கிழமை இரவு நடைபெறவுள்ளது.

அன்றைதினம் இரவு 2 மணிக்கு வைகுந்த வாசல் திறக்கப்பட்டு இறந்த முன்னோர்களுக்கு மோட்ச அர்ச்சனை நடைபெறும். இரவு முழுவதும் பஜனை நிகழ்வுகள், சமயச் சொற்பொழிவுகள், கலை நிகழ்வுகள் வழிபாட்டின் இடையே இடம்பெறும். அதன் பின் திருப்பாவை உற்சவம் இடம்பெற்று ஏகாதசி விரத உணவு வழங்கலுடன் விழா நிறைவடையும். (வ)

## குடும்பஸ்தரை வழிமறித்து தாக்குதல்

தென்மராட்சி,டிசெ.30

வீதியில் சென்ற குடும்பஸ்தரை வழி மறித்த கும்பலொன்று அவரைச் சரமாரியாகத் தாக்கி விட்டுத் தப்பி யோடியது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் தச்சன்தோப்பு கோவிலாக்கண்டியில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த கந்தசாமி புண்ணியானந்தம் (வயது – 55) என்பவர் தாக்குதலுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (வ-9)


**பெயர்மாற்றம்**

D4 மருதநகர் கிளிநொச்சியில் வசித்துவரும் சுப்பையா கோபாலசிங்கம் ஆகிய நான் 30.12.2014 இல் இருந்து சுப்பையா கார்த்திகன் எனப் பெயர்மாற்றம் செய்து கொள்கின்றேன்.

சு.கார்த்திகன்

**வீடு வாடகைக்கு**

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டம், இல.105இல் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. மூன்று பேர் கொண்ட குடும்பம் விரும்பத்தக்கது.

(55387) (12.3.6) தொடர்பு: 077 662 7041

**செல்லா சினிமா** யாழ்ப்பாணம்

இப்பொழுது காண்பிக்கப்படும்
ஆர்யா, ஹன்சிகா நடிப்பில்
25முதல்
மீகாமன்
(தினசரி 4 காட்சிகள்)
10.30, 2.30, 6.30, 9.30
AC / DTS
தைப்பொங்கல் வெளியீடு
விக்ரம் நடிப்பில் ஐ




**பரிசுத்த ஆவிக்கு செபம்**

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நானடைய வழிகாட்டும் பரி சுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப் படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரையும் நான் மன்னிக்க அருள் புரிபவரே, என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்துக்கும் நன்றி கூறித் துதிக்கின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் என்றென்றும் உம்மிலிருந்து விலகாமல் உம்மில் நிலைத்திருப்பேன் என உறுதி கூறுகிறேன். என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவிலா மகிமையில் பங்கு பெற வேண்டுகிறேன்.

ஆமென்.

அடியாள்.

**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை**

**வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல் - 2015**

எமது சபையின் வழங்குநர்களையும் ஒப்பந்தக் காரர்களையும் பதிவு செய்வதற்கு 20.11.2014ஆம் திகதி உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது. அதற்கமைய விண்ணப்பங்கள் 20.12.2014ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டன. தற்போது பதிவு செய்வதற்கான கால எல்லை 05.01. 2015ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

தலைவர்,
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.

(சி18471) (12.7)


**எதிர்க்கட்சிகளின் பொது ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்து நடைபெறும்**

**மாபெரும் பொதுக்கூட்டம்.**



இக்கூட்டத்தில்
- எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன
- ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான கௌரவ ரணில் விக்கிரமசிங்க
- முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க
- இவர்களுடன் ஏனைய எதிர்க்கட்சிகளின் முக்கிய பிரமுகர்களும் கலந்து சிறப்பிப்பார்கள்.

இடம்: "சங்கிலியன் பூங்கா" - முத்திரைச்சந்தி, நல்லூர்.
காலம்: இன்று (30.12.2014) செவ்வாய்
நேரம்: பிற்பகல் 2.00 மணி

இன்றைய தினம் உலகப்புகழ் பெற்ற கொழும்பு "சித்தார" இசைக்குழுவின் பிரபல பாடகர்கள், பாடகிகள் கலந்து சிறப்பிக்கும் மாபெரும் இசை மழை நிகழ்ச்சியும் அங்கு நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
-கூட்ட ஏற்பாட்டாளர்கள்

மைத்திரிபால சிறிசேன X

**பொருளியற் கல்லூரி**

நாவலர் றோட் யாழ்ப்பாணம் | K.K.S றோட் இணுவில்
(இரு இடத்திலும்)
யாழ். முன்னணி ஆசிரியர் குழுவினால்

**A/L 2017**
கலை → வர்த்தகம்
தொழில்நுட்பம்
ஜனவரி 02 வெள்ளிக்கிழமை 8.00AM
உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்

Note : எமது மற்ற நிறுவனமான BARATHY சித்தன்கேணியிலும் இதே திகதியில் ஆரம்பமாகின்றது.

A/L DAY CLASS ஜனவரி 05 எமது 3 நிறுவனத்திலும் ஆரம்பமாகின்றது.


**அறிவித்தல்**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 2015 ஆம் ஆண்டுக்கான முதலாம் தவணை எதிர்வரும் 12.01.2015 திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.


**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS

A/L பரீட்சை பெறுபேறுகளின் பின்னர் உங்களின் எதிர் கால நலன் கருதி

**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

**Diploma in English** 2 1/2 Months

- எமது கற்றை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
- O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
- Excellent Teacher's Panel & Individual Attention.

No.15, Sirambiyady Lane (Off Stanley Road) ,Jaffna.
(Above Sathosa SM)
Telephone 021-2224550
Hotlines : 0777585913, 0777222422, 0714299935

Batch1 :03.01.2015
Batch2 :07.01.2015
Batch3 :10.01.2015
Batch4 :14.01.2015

கிழமை நாள்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்.

இன்னும் 02 நாள்களே மட்டுமே

ARPICO

**வருட இறுதி அமோக மலிவு விற்பனை**

Mangala

NIPPON DAMRO Piyestra Nilkamal Phoenix

போன்ற நிறுவனங்களின் அனைத்துத் தளபாட பொருள்களுக்கும் மூங்கில், மரம், உருக்கு, வெளிநாட்டுத் தளபாடங்கள் மின்சாதனப் பொருள்கள் அனைத்துக்கும் அமோக விலைக் குறைப்பு



steal mirror cupboard 6x3 14,500/- 8,500/- 6x4 15,600/- 9,990/-
Office cupboard 14,500/- 8,000/-
3 door steal cupboard 19,500/- 14,900/-
Arpico Rolling Chair XL 12,500/- 6250/- L 10,500/- 4800/- M 6,000/- 3000/-
Glass Dining Table set 24,900/- 14,900/-
New Table Mate 4,000/- 2,400/-
Iron Board 1,600/- 1000/-
Kitchen Rack SU - XL 2,000/- 1,500/- SMKR 2,800/- 2,000/-

10% ⇒ 50% தள்ளுபடி
முந்துங்கள்! கையிருப்பு உள்ளவரை மட்டுமே!!

Open 8 AM - 8 PM

**மங்களா காட்சியறை**
இல. 536, கே.கே.எஸ். வீதி, மனோகரா சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 8366, 8367, 0777 286069


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சைப் பெறுபேறுகள்

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பெறுபேறுகள்

*2014 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த சனிக்கிழமை வெளியாகின. இதனடிப்படையில் பாடசாலை அதிபர்களால் அனுப்பிவைக்கப்பட்ட சித்தியடைந்த மாணவர்களின் பெறுபேறுகள் வருமாறு.*

### யாழ். வேம்படி மகளிர் கல்லூரி

**உயிரியல் பிரிவு**
சி.நர்மதா – 3ஏ, தே.மாதுமை – 3ஏ, நா.ரோஜனா – 3ஏ, தி.மதுசோபிகா – 3ஏ, அ.அன்ட்லின்சலா – 3ஏ, மகிருஸ்ணி – 2ஏ பி, ரா.ஞானகி – 2ஏ பி, கா.சௌஜா – 2ஏ பி, ந.கம்சவாகினி – 2ஏ பி, ரா.டக்சாயினி – 2ஏ பி, ஜெ.லைசத்தகி – 2ஏ பி, ச.வைஸ்ணவி – 2ஏ பி, பு.நிசாந்தினி – 2ஏ பி, ப.திலக்சனா – 2ஏ பி, ஸ்ரீ.சமித்திகா – 2ஏ பி, ஸ்ரீ.சாந்தராணி – 2ஏ பி, த.சண்சிகா – 2ஏ பி, ர.சிந்துஜா – 2ஏ பி, எஸ்.அபிராமி – 2ஏ சி, ச.சபாநாயகம் – 2ஏ சி, ப.டயானி – 2ஏ சி, அ.யாழினி – 2ஏ சி, ப.விசாகயா – 2ஏ சி, அ.சரண்யா – ஏ 2பி, க.அபேக்ஷா – ஏ 2பி, அ.யதுஸ்னா – ஏ 2பி, என்.சாம்பவி – ஏ 2பி

**கணிதப் பிரிவு**
க.அபிதர்சி – 3ஏ, ந.பிருந்தா – 3ஏ, ப.வினுசிகா – 3ஏ, வி.அனுசோ – 3ஏ, ச.திலக்சி – 3ஏ, தே.தேவிகா – 2ஏ பி, செ.காஞ்சனா – 2ஏ பி

**வர்த்தகப் பிரிவு**
சா.மதுரிகா – 3ஏ, பி.சோபனா – 3ஏ, சி.கோகுலா – 3ஏ, எஸ். சாமினி – 3ஏ, எஸ்.துவாரகா – 3ஏ, ஆர்.வரணிகா – 3ஏ


**கலைப் பிரிவு**
எஸ்.எழிலரசி – 3ஏ

### கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி சந்திரவதனி தவராஜா அவர்களின் அன்பு மகளும், எமது கல்லூரியின் மாணவியுமான
அமரர் செல்வி.
**தவராஜா மஞ்சுஷா**
**(2014 கலைப்பிரிவு மாணவி)**
அன்னாரின் திடீர் மறைவினால் மிகுந்ததுயரம் அடைவதோடு, பிரிவுத் துயரினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், SDC,OSA, கல்விசாரா ஊழியர்கள்.
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.

### கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி சந்திரவதனி தவராஜா அவர்களின் அன்பு மகளும், எமது கல்லூரியின் மாணவியுமான
அமரர் செல்வி.
**தவராஜா மஞ்சுஷா**
**(2014 கலைப்பிரிவு மாணவி)**
அன்னாரின் திடீர் மறைவினால் மிகுந்ததுயரம் அடைவதோடு, பிரிவுத் துயரினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர் கழகம்,
யா/கொக்குவில் இந்துக்கல்லூரி.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 . 11 . 1956



மறைவு 09 . 01 . 2014

**அமரர் ஜயாத்துரை பாஸ்கரன்** (நயினாதீவு)
திதி நவமி (30.12.2014)
(ஆசிரியர் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)

“அம்பிகையின்அருளுடன் இவ்வுலகில்
வாழ்ந்திருந்து அன்னையின் தாள் சேர்ந்து
ஆண்டொன்று மறைந்தாலும்
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
மறையுமா உங்கள் நினைவின் பாசம்
காலங்கள் ஆயிரம் போனாலும்
உங்கள் தூய அன்பின் நினைவுகள்
எங்கள் உயிர் உள்ளவரை தொடரும்.....

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

481, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். குடும்பத்தினர்

### கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி

**விஞ்ஞானப் பிரிவு**
நிலாவினி – 3சி, க.மலினி – பி2சி, ரி.டயானா – 3சி

**கலைப் பிரிவு**
தமிழ்வாணி – 2ஏ பி

### கிளிநொச்சி ம.வி.

**கலைப் பிரிவு**
வ.தாளி – 3ஏ, து.தவப்பிரியா – 3ஏ, கு.வசந்தன் – 2ஏ பி, ஞா.இந்துஜா – 2ஏ பி, கி.கிறிஸ்டீன் ஜூலி – 2ஏ பி, வி.விஜயசுமங்கலி – ஏ 2பி, மோ.புஸ்பரோஸி – ஏ 2பி, அ.ஜெனிசியா – ஏ 2பி, ச.விதுபா – ஏ பி சி, பா.அபர்ணா – ஏ பி சி

**வர்த்தகப் பிரிவு**
அ.புவிந்திரன் – 3ஏ, ச.பிரசாந்தி – ஏ 2பி, ந.காயத்திரி – ஏ 2பி, பு. லக்ஷிகன் – ஏ பி சி, பே.திவ்யகாந் – ஏ 2பி

### முரசுமோட்டை முருகானந்தா கல்லூரி

**வர்த்தகப் பிரிவு**
ரி.சயந்திகா – 3ஏ, யோ. பிரியங்கன் – 2ஏ பி, ஆர்.நதுஷன் – 2ஏ பி, ரி.பிரவீனா – ஏ 2பி

**கலைப் பிரிவு**
ச.கேரா – ஏ 2பி

**கணிதப் பிரிவு**
பா.கபில்காந் – 3சி

### கிளி. தருமபுரம் மத்திய கல்லூரி

**வர்த்தகப் பிரிவு**
நா.தனுசியா – 3ஏ, கோ.அனுஷியா – 3ஏ, க.பாதுஷன் – ஏ 2பி

**கலைப் பிரிவு**
த.துஷ்யந்தன் – ஏ பி சி

### கிளி. வட்டக்கச்சி மத்திய கல்லூரி

**கலைப் பிரிவு**
ம.பாமினி – 2ஏ பி

**வர்த்தகப் பிரிவு**
எஸ்.சிநேகா – ஏ 2பி

**உயிரியல் பிரிவு**
ந.நிதர்சனா – பி 2சி

### வவுனியா தமிழ் மத்திய ம.வித்தி.

**கணிதப் பிரிவு**
எம்.வினோசாந் – 2ஏ பி, பி.அரியகன் – 2ஏ பி

**உயிரியல் பிரிவு**
எஸ்.மேகலாதன் – 3ஏ, ரி.வைஸ்ணவன் – 3ஏ

### கிளி/ பூநகரி மத்திய கல்லூரி

**கலைப் பிரிவு**
வி.சரண்யா – 2ஏ பி, க.கஜீபன் – 2ஏ பி, க.வேணுகா – ஏ பி சி, உ.நிரோஜன் – ஏ பி சி

**வர்த்தகப் பிரிவு**
செ.துர்க்கா – ஏ பி சி



## திருவெம்பாவை

ஒள் நித்தில நகையாய் இன்னம் புலர்ந்தின்றோ?
வண்ணக் கிளி மொழியார் எல்லாரும் வந்தாரோ?
எண்ணிக் கொடுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே!
விண்ணுக்கொரு மருந்தை வேத விழுப் பொருளைக்
கண்ணுக்கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயே வந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம் பாவாய்!

### பொருள் விளக்கம்:

"அடி தோழி! ஒளி பொருந்திய அழகான பற்களையுடையவளே! இன்னும் உனக்குப் பொழுது விடியவில்லையா?" என்று எழுப்ப வந்தவள் கேட்க உள்ளே படுத்திருப்பவள் சொல்கிறாள்: "அழகான கிளிபோலப் பேசுகின்ற நம் தோழிமார் எல்லோரும் வந்துவிட்டார்களோ?" என்று. அதற்குப் பதிலாக வந்தவள் கூறுகின்றாள்: "ஓ! அதை எண்ணிப் பார்த்துத்தான் சொல்ல வேண்டும். அதற்கு இப்போது நேரமில்லை. நீ உள்ளே வீணே கண் உறங்கிக் கொண்டு காலத்தைக் கழிக்காதே! உடனே எழுந்து வா!" என்று சொல்லி விட்டு இன்னும் சொல்கின்றாள். "தோழியே! தேவர்களுக்கும் மேலான தேவாதி தேவனான சிவபெருமானை, ஒப்பற்ற அமுதம் போன்றவனை, மருந்தாக இனிக்கின்ற வேதத்துக்கும் மேலான பொருளை, கண்ணுக்கு இனியவனைப் பாடிக் கசிந்து உள்ளம் உருகி மனமுடைந்து நிற்கின்றோம். ஆகவே, எண்ணிச் சொல்ல முடியாதவர்களாக ஆகிவிட்டோம். நீயே வந்து எண்ணிப் பார்த்துக் கொள்! நீ வந்து எண்ணும் போது எண்ணிக்கை குறைந்து விட்டால் மீண்டும் போய்படுத்து உறங்குவாயாக!" என்கிறாள் என்பதாம்.

இராசையா ஸ்ரீதரன்

### மன். சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி

**உயிரியல் பிரிவு**
ரி.பாணுசங்கர் – 2ஏ பி

**கணிதப் பிரிவு**
சங்கரநாராயணன் – 2பி சி

### மன். முருங்கன் மகாவித்தியாலயம்

**வர்த்தகப் பிரிவு**
எஸ்.கவிந்தன் – 3ஏ

**கலைப் பிரிவு**
எஸ்.நிருசிகா – 2ஏ பி

### வங்காலை புனித அன்னாள் மத்திய ம.வி.

**கலைப் பிரிவு**
ஐஸ்வர்யா சோசை – 2ஏ பி, எஸ்.ஜேந்திரன் – 2ஏ பி

**வர்த்தகப் பிரிவு**
எஸ்.தாமரைச்செல்வி – 2பி சி

### ம.புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி

**உயிரியல் பிரிவு**
நில் றொசின்ரன் – 2ஏ பி

**கணிதப்பிரிவு**
ஸ்ரீகாந்தன் தர்சன் – 2பி சி, பெஞ்சமின் – 2பி சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 50ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
07 . 11 . 1922

மறைவு
11 . 11 . 2014

### அமரர் கணபதிப்பிள்ளை–பொன்னம்மா

அம்மா நீ
பதினொருவர் பிள்ளைகளாய்ப் பெற்றாய்–நீ
அகவை தொண்ணூற்றை கடந்த போதும்
எமை விட்டு அகலும் வரை அடுத்தவர்.மேல் கொள்ளும்
அன்பும் அக்கறையும் குன்றாது வாழ்ந்தாய்
எங்கள் குலத்தலைவி என்றும் அழியாது– நிற்பாய்
எங்கள் மனங்களிலே

எமது அன்புத்தாயின் மறைவுச் செய்தி கேட்டு ஆறுதல் அளித்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் பல்வேறு வழிகளில் உதவிகள் நல்கிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (30.12.2014) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மாசாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மருத்துவபீட முகரி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (55392)(4.3.6)

**குடும்பத்தினர்.**

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
13 . 07 . 1946



உதிர்வு
21 . 12 . 2012

### திருமதி லீலாவதி கணேசலிங்கம்

*திதி: 30.12.2014 (பூர்வபட்ச நவமி)*

ஈராண்டு காலம் ஓடி மறைந்திடினும்,
ஆறாது எம் துயர் எம் அன்னையே!
பண்பான மனையாளாய் பாசமிகு தாயாய்
அன்பான மாமியாய் அருமைப் பாட்டியாய்
பன்முகம் காட்டி நேசமுடன் அரவணைத்து
எமையெல்லாம் காத்திட்ட எம் தெய்வமே!
என்றென்றும் நிலைத்திருக்கும்
உங்கள் நினைவு எம் மனங்களில்.

உங்களது ஆத்மா சாந்தியடைய
அரன்பாதம் பணிகின்றோம்.

(55393)(12.7)

இல.80, சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

**குடும்பத்தினர்.**

## 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சிவசுப்பிரமணியம் இராசசேகரம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/குரும்பசிட்டி பொன் பரமானந்தர் வித்தியாலயம்)

தோற்றம்
*13.03.1931*

மறைவு
*27.12.1998*

ஆருயிர் அப்பா
ஆண்டுகள் பதினாறு ஆனதுவோ இன்று - நாம்
ஆளாகும் முன்பே
ஆண்டவனுக்கு உங்கள் மேல்
ஆறாத ஆசையோ
ஆருயிர் பிரிகையிலே - எமை எண்ணி
ஆரைத்தான் நொந்தீர்களோ
ஆலமரம் சாய்ந்தாலும் - நாம்
ஆல்விழுதுகள் அல்லவா
ஆழ்ந்த உங்கள் அறிவுரைகளால்
ஆழாகி விட்டோம் இன்று - இனி
ஆகிடுவீர்கள் ஆத்ம சாந்தி
பிரிவுறும்.

(54131)
(12.7)

**மனைவி, பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகச் செய்திகள்

## இந்திய எல்லைப் பகுதியில் சீன கலாசார மையங்கள்



புதுடில்லி, டிசெ. 30
நேபாளம் மற்றும் பூட்டான் நாடுகளோடு இணைந்துள்ள இந்திய எல்லைப் பகுதிகளில், சமீபகாலமாக சீன கலாசார மையங்கள் மற்றும் பௌத்த மடாலயங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றன. இதனால் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்று இந்தியா கவலை தெரிவித்துள்ளது.

அவ்வப்போது நிகழும் சீன ஊடுருவல்களால், ஏற்கனவே ஜம்மு காஷ்மீர் எல்லையில் சீனாவுடன் இந்தியாவுக்குத் தகராறு உள்ளது. இந்த நிலையில், நேபாளம் மற்றும் பூட்டான் நாடுகளோடு இந்தியா பகிர்ந்துகொண்டிருக்கும் எல்லைப் பகுதிகளில் சீன கலாசார மையங்கள் மற்றும் பௌத்த மடாலயங்கள் பெருகி வருகின்றன.

இந்தக் கலாசார மையங்கள் இந்தியாவுக்கு எதிரான கருத்துக்களை மக்கள் மனதில் விதைக்கின்றன என்று சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் இதனால் தேசிய பாதுகாப்புக்கு ஏதேனும் ஆபத்து நேரிடுமோ என்று எல்லைப் பாதுகாப்புக் குழு தனது சந்தேகத்தை வெளிப்படுத்தியுள்ளது. (ஒ-ரி)


# ஜம்மு காஷ்மீரில் தொங்கு சட்டசபையா?

## கட்சிகளுக்கிடையேயான பேச்சுக்களில் முன்னேற்றம்

சென்னை, டிசெ. 30
ஜம்மு காஷ்மீரில் புதிய தொங்கு சட்டசபையை அமைப்பது தொடர்பாக மக்கள் ஜனநாயக கட்சிக்கும் பாரதிய ஜனதா கட்சிக்கும் இடையே நடைபெற்று வரும் பேச்சில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பி.டி.பி கட்சியின் முப்தி முகமது சையதுக்கு முதல்வர் பதவியும், பா.ஜ.கவுக்கு துணை முதல்வர் பதவியும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பா.ஜ.கவுடன் இணைந்து கூட்டணி ஆட்சி அமைப்பது தொடர்பான பேச்சுவார்த்தை இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதாகவும் இதுதொடர்பாக விரைவில் ஒப்பந்தம் கையெழுத்தாகவுள்ளதாகவும் பா.ஜ.கவைச் சேர்ந்த ஒருவருக்கு துணை முதல்வர் பதவி வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. பி.டி.பி கட்சியைச் சேர்ந்த 6 பேரும் பா.ஜ.கவைச் சேர்ந்த 8 பேரும் அமைச்சரவை அங்கீகாரம் கொண்ட அமைச்சர்களாக பொறுப்பேற்பார்கள். இந்த ஏற்பாடு சட்டசபையின் பதவிக்காலமான 6 ஆண்டுகளுக்கு நீடிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு கட்சிகளும் தேர்தலில் அதிக பெரும்பான்மையை பெறாததையடுத்து இரு கட்சிகளும் இணைந்து ஆட்சியமைக்கும் நிலை உருவாகியுள்ளது. எனவே தொங்கு சட்டசபை ஆட்சியை அமைப்பது குறித்து ஆலோசனை நடத்த வருமாறு பி.டி.பி மற்றும் பா.ஜ.க ஆகிய கட்சிகளுக்கு மாநில ஆளுநர் என்.என்.வோரா தனித்தனியாகக் கடிதம் எழுதியுள்ளார். (ஒ-ரி)



மாலைதீவுகளில் கடலின் நடுவே 5 மீற்றர் ஆழத்தில், அதாவது கடலுக்கு 16 அடி கீழே ஒரு வித்தியாசமான உணவகம் ஒன்று அமைந்துள்ளது.

## வட மாநிலங்களில் நிலவும் கடும் குளிர்

### சாவடைந்தோர் எண்ணிக்கை 160 ஆக உயர்வு

புதுடில்லி, டிசெ. 30
இந்தியாவின் வடமாநிலங்களில் கடும் குளிர் நிலவுகிறது. காஷ்மீர், இமாசலபிரதேசம், ராஜஸ்தான், பஞ்சாப், அரியானா, உத்தரபிரதேசம், பீகார் உட்பட வட மாநிலங்களில் கடந்த சில நாள்களாக குளிர் மிகவும் அதிகமாக இருக்கிறது. தலைநகர் டில்லியில் கடந்த 5 வருடங்களாக ஏற்பட்டிராத அளவுக்கு வெப்ப நிலை குறைந்துள்ளது. நேற்று ஒரு நாளில் மட்டும் இங்கு 21 பேர் குளிரால் உயிர் இழந்தனர். உத்தரப் பிரதேச மாநிலத்தில் இதுவரை குளிருக்கு சாவடைந்தோரின் எண்ணிக்கை 160 ஆக உயர்ந்துள்ளது. ராஜஸ்தான், இமாச்சலப் பிரதேசத்திலும் வெப்ப நிலை 1 டிகிரியாக உள்ளதால் மக்கள் கடுமையான பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

## லிபியாவில் தீவிரவாதிகள் கடும் ராக்கெட் தாக்குதல்



லிபியாவில் எண்ணெய் சேமிப்புக் கிடங்குகளைக் கைப்பற்றும் முயற்சியில் தீவிரவாதிகள் மேற்கொண்ட ரொக்கெட் தாக்குதலில் ஏற்பட்ட தீ விபத்தில் 5 எண்ணெய் கிடங்குகளில் தீபரவியுள்ளது.

அல்–ஸித்ரா எண்ணெய் கிடங்கைக் கைப்பற்றும் ஆயுதக் குழுவினரின் முயற்சி முறியடிக்கப்பட்டபோதிலும், 5 எண்ணெய் சேமிப்பு கிடங்குகளில் தீ வேகமாகப் பரவியுள்ளது.

முக்கிய எண்ணெய் சேமிப்பு நிலையங்கள் அமைந்துள்ள அல்–ஸித்ராவில் இந்தத் தாக்குதலை பஜர் லிபியா என்ற இஸ்லாமிய தீவிரவாதக் குழு நடத்தியுள்ளதாகத் தெரிய வருகிறது.

எண்ணெய்க் கிடங்குகள் மீது தீவிரவாதிகள் நடத்தியுள்ள தாக்குதலுக்கு ஐ.நா. கடும் கண்டனம் தெரிவித்தது. இது தொடர்பாக, லிபியாவுக்கான ஐ.நா. உதவிக்குழு சார்பில் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், எண்ணெய் சேமிப்புக் கிடங்கு மீது நடத்தப்பட்ட இந்த வன்முறையினால் பெரும் சுற்றுச்சூழல் பாதிப்பும், பொருளாதார இழப்பும் ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ரி)

## மெக்சிகன் உச்ச நீதிமன்றில் பார்வையற்ற நீதிபதி கடமை

டெட்ராய்ட், டிசெ .30
கடுமையாக உழைத்து நீதிபதியாகும் தனது இலட்சியத்தையடைந்ததன் மூலம் ரிச்சர்ட் பேர்ன்ஸ்டீன் என்பவர் சாதனை படைத்துள்ளார். 41 வயதாகும் ரிச்சர்ட் எதிர்வரும் புத்தாண்டு அன்று மெக்சிகன் உச்ச நீதி மன்றத்தில் நீதிபதியாகப் பொறுப்பேற்கவுள்ளார்



பிறக்கும் போதே பார்வையற்றவராக பிறந்த இவர் இந்த உயர் நிலையை அடைய கடுமையாக முயற்சித்து வந்துள்ளார். பத்து வழக்குகளை, தனது உதவியாளர் மூலம் வாசித்து அந்தந்த வழக்கின் முக்கியசட்டநுணுக்கங்களை அசாதாரணமாகச் சொல்லி அனைவரையும் ஆச்சரியப்படுத்தியுள்ளார்.

பெரும் சாதனைகள் கொண்ட இவரதுபின்புலமே நீதிபதிகளுக்கான தேர்தலில் இவரை வெற்றி பெறச் செய்தது என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கமரூனில் தாக்குதல்; 100 தீவிரவாதிகள் சாவு



யாவுன்டே, டிசெ.30

நைஜீரியா எல்லைப்பகுதியில் அமைந்துள்ள டோபிள் பகுதியில் நேற்றுமுன்தினம் கமரூன் நாட்டு ராணுவம் தீவிரவாதிகள் மீது அதிரடித் தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலை கமரூன் விமானப்படை மேற்கொண்டுள்ளது. தாக்குலில் தீவிரவாதிகள் 100க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாகவும், 200 பேர் கைது செய்யப்பட்டு உள்ளதாகவும் கமரூன் நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.ஆபிரிக்க நாடான நைஜீரியாவில், ஒரு குறிப்பிட்ட மத அரசை அமைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் போகோ ஹரம் தீவிரவாதிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர். அங்கு கடந்த ஏப்ரல் மாதம் சிபோக் நகரில் உள்ள ஒரு பாடசாலையில் அவர்கள் நுழைந்து 200 மாணவிகளைக் கடத்திச் சென்ற சம்பவம் உலக நாடுகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியிருந்தது. அவர்கள் இதுவரை மீட்கப்படவில்லை.

நைஜீரியாவின் அயல் நாடான கமரூனிலும் தீவிரவாதிகள் தொடர்ந்து நாசவேலைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களை ஒடுக்கும் நடவடிக்கையை அந்த நாட்டு இராணுவம் தீவிரப்படுத்தி உள்ளது.

இந்த நிலையில் தீவிரவாதிகளுக்கு எதிரான இந்தத் தாக்குதல்மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-ரி)



# கிரீஸ் பயணிகள் கப்பலில் தீ விபத்து

எதென்ஸ்,டிசெ.30

கிரீஸ் நாட்டு துறைமுகமான பட்ராஸிலிருந்து 466 பேருடன் புறப்பட்ட நார்மன் அட்லாண்டிக் பயணிகள் கப்பலில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

பட்ராஸ் துறைமுகத்திலிருந்து 411 பயணிகள் மற்றும் 55 பணியாளர்களை ஏற்றிக்கொண்டு இத்தாலி நாட்டில் உள்ள அன்கோனா துறைமுகத்துக்கு நார்மன் அட்லாண்டிக் கப்பல் சென்றுகொண்டிருந்த போது அது தீப்பிடித்துள்ளது.

இந்த விபத்து ஏற்பட்ட போது கிரீஸ் தீவுப்பகுதியான ஓத்தோனோய் அருகே அந்தக் கப்பல் சென்றுகொண்டிருந்தது.

உடனடியாக இது குறித்து எச்சரிக்கைவிடுத்தகப்பலின்மாலுமி பயணிகள் அனைவரையும் வெளியேற்றுமாறு உத்தரவிட்டார்.

இதையடுத்து சம்பவ இடத்திற்கு தீயணைப்புக் கப்பல்கள், இத்தாலி மற்றும் கிரேக்க நாட்டு விமானங்கள் விரைந்துள்ளன.

கப்பல் உள்ள பகுதியிலும் வானிலை மோசமாக உள்ளதால் மீட்பு முயற்சிகளில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது வரை கப்பலில் இருந்து 55 பயணிகள் வேறு கப்பலுக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும்,மேலும் 150 பேர் உயிர்காக்கும் படகில் ஏற்றப்பட்டிருப்பதாகவும் மீட்பு பணிகள் தொடர்ந்து இடம் பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ரி)

# ராணியின் காவலர்களை தாக்க ஐ.எஸ். திட்டம்



இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத்தின் பாதுகாவலர்களை தாக்குவதற்கு ஐ.எஸ்.தீவிரவாதிகள் திட்டம் தீட்டியுள்ளதாக திடுக்கிடும் தகவல் வெளியாகி யுள்ளது.

ராணியின் பாதுகாவலர்களில் ஒருவரைக் கடத்திச்சென்று கொன்றுவிட அவர்கள் திட்டம் தீட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உளவுத்துறையினர், ஐ.எஸ். தீவிரவாதிகளின் இணையதள உரையாடல்களை தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.. ராணி குடும்பத்தினரை தாக்குவது கடினம் என்று ஐ:எஸ். தீவிரவாதிகள் அறிந்துள்ளனர். எனவே ராணியின் பாதுகாவலர்களில் ஒருவரை அவர்கள் தமது தாக்குதல் இலக்காக கொள்ளக்கூடும் எனக் கூறப்பட்டுள்ளது.

இதையடுத்து ராணியின் பாதுகாவலர்கள் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக செயின்ட் ஜேம்ஸ் அரண்மனை, கிளாரன்ஸ் இல்லம் ஆகியவற்றிலுள்ள ராணியின் பாதுகாவலர்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## ஏர் ஏசியா இந்தோனேசியாக் கடலில் விழுந்ததா?

மாயமான ஏயர் ஏசியா விமானம் இந்தோனேஷிய கடலில் விழுந்ததை இந்தோனேஷிய அரசு உறுதிப்படுத்தியுள்ளது. விமானம் கடலில் விழுந்ததை இந்தோனேஷிய அரசு உறுதிப் படுத்தியதையடுத்து, இதில் பயணித்த 162 பேரும் உயிரிழந் திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ரி)



சீனாவில் பனி உலக விழாவில் அழகாக பனியால் செதுக்கப்பட்டுள்ள அழகான சிற்பங்கள்.

# உக்ரைனுடன் போர் நிறுத்த பேச்சுக்கு ஜேர்மனி தயார்

பேர்லின் டிசெ 30

ஜேர்மன் ஜனாதிபதி அங்கேலா மேர்க்கெல் போர் நிறுத்தப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக உக்ரைனுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

மேலும், , மேர்க்கெல் தெரிவிக்கையில் கைதிகள் பரிமாற்றத்தை வரவேற்பதாகவும், அதில் 150 அரச துருப்புக்களும் 220க்கும் அதிகமான கிளர்ச்சியாளர்களும் விடுதலை செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார். (ஒ-ரி)



# கொலையா? தற்கொலையா? என்பது பல ஆண்டுகள் கடந்தும் தெரியும்

ஒருவர் சாவடைந்தால் அவர் கொல்லப்பட்டுள்ளாரா அல்லது தற்கொலை செய்துள்ளாரா என்பதை நூற்றாண்டுகள் பல கடந்தாலும் கண்டுபிடித்து விடலாம் என்பதை ஆராய்ச்சியாளர்கள் நிரூபித்துள்ளனர்.

4,000 ஆண்டுகளுக்கு முன் சாவடைந்த ஒருவரின் உடல் [illegible] தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. சேறு, எண்ணெய் கலந்த இடத்தில் அந்த உடல் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அங்கு கிடைத்த பழமையான உடலை பரிசோதித்துப் பார்த்த போது, அது கொலை செய்யப்பட்ட உடல் என்றும் பலரால் மிதிக்கப்பட்டதால் சேற்றுக்குள் புதைந்து உயிரிழந்த ஒருவரின் உடல் என்றும் தெரிய வந்துள்ளது. காஷல் பிரதேசத்தில் கிடைத்த அந்த உடலுக்கு, காஷ்ல் மேன் என்று ஆராய்ச்சியாளர்கள் பெயர் சூட்டியுள்ளனர்.

சேற்றுடன், கறுப்பு எண்ணெயும் கலந்து இருந்ததால் தான், பல நூற்றாண்டுகள் ஆகியும் அந்த உடல் முழுவதுமாக அழியவில்லை என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்சுவை

## பக்தியின் நோக்கம் இறைவனே

## விவேகானந்தர் சிந்தனையிலிருந்து....



பக்தி அல்லது வழிபாடு அல்லது ஏதேனும் ஒரு வழியில் அன்பு செய்தல் மனிதனுக்கு மிக எளிய, மிக இனிய, மிகவும் இயல்பான முறையாகும். பக்தியின் நோக்கம் இறைவனே. அன்பு செய்பவரும் அன்பை ஏற்பவரும் இன்றி அன்பு உண்டாக முடியாது. மேலும் நமது அன்பை ஏற்பவர் முதலில் அந்த அன்புக்குப் பதிலாக எம்மீது அன்பைச் செலுத்துபவராக இருக்க வேண்டும். அன்புக் கடவுள் ஒருவகையில் மனிதத் தன்மை உடையவராயிருக்க வேண்டும். நெஞ்சில் அன்புள்ளவர்களுக்கு பிரம்மம் அன்புத் தெய்வமாக உருவக் கடவுளாக வருவது உண்மையே ஆகும்.

## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | முல்லைத் தீவு | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 120 | 140 | 80 | – | 100 | 160 | – | 80 | 70 |
| கத்தரி | 300 | 240 | 300 | 350 | 260 | 240 | 240 | 300 | 180 |
| கரட் | 150 | 240 | 240 | 200 | 180 | 260 | 240 | 300 | 200 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 60 | 40 | 60 | 80 | 60 | 15 |
| பயிற்றை | 300 | 250 | 240 | 300 | 260 | 240 | 220 | 280 | 250 |
| பாகல் | 350 | 350 | 300 | 250 | 350 | 280 | 160 | 280 | 200 |
| கருணைக்கிழங்கு | 50 | 60 | 50 | 80 | 60 | 80 | 200 | 120 | 45 |
| பெ.வெங்காயம் | 120 | 120 | 110 | 140 | 120 | 140 | 120 | 160 | 110 |
| சி.வெங்காயம் | 60 | 100 | 50 | 100 | 100 | 160 | 140 | 160 | 90 |
| பூசணி | 40 | 40 | 40 | 50 | 35 | 60 | 60 | 80 | 25 |
| தக்காளி | 350 | 220 | 300 | 320 | 280 | 320 | 200 | 320 | 150 |
| வாழைக்காய் | 70 | 60 | 70 | 100 | 70 | 90 | 80 | 140 | 80 |
| கீரை | 40 | 60 | 50 | 30 | 40 | 50 | 30 | 50 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 50 | – | – | 30 | 30 | 30 | 20 | 15 |
| மிளகாய் | 600 | 400 | 450 | 450 | 500 | 800 | 650 | 1000 | 350 |
| புடோல் | 180 | 120 | 150 | 140 | 140 | 140 | 120 | 160 | 90 |
| கோவா | 120 | 130 | 120 | 140 | 120 | 160 | 200 | 180 | 130 |
| வெண்டி | 200 | 140 | 200 | 160 | 140 | 140 | 180 | 160 | 80 |
| போஞ்சி | 200 | 220 | 240 | 200 | 260 | 180 | 240 | 300 | 180 |
| லீக்ஸ் | 360 | 300 | 250 | 280 | 300 | 320 | 220 | 320 | 350 |
| தேங்காய் | 50 | 40 | 70 | 50 | 35 | 45 | 50 | 50 | 45 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 80 | 80 | 100 | 90 | 100 | 160 | 70 |
| தேசிக்காய் | 100 | 100 | 100 | 100 | 80 | 60 | 150 | 120 | 40 |
| வல்லாரை | 15 | 20 | – | – | 30 | 20 | 20 | 20 | 15 |
| கறிமிளகாய் | 400 | 300 | 250 | 240 | 300 | 320 | 200 | 400 | 150 |
| இராசவள்ளி | 120 | 140 | 160 | 160 | 140 | 160 | 140 | 180 | 120 |

## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | முல்லைத் தீவு | வவுனியா | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | – | 1000 | 700 | – |
| நண்டு | 350 | 400 | 400 | 400 | 400 | 300 |
| கணவாய் | 550 | 600 | 500 | 600 | 500 | – |
| பாரை | 600 | 600 | 500 | 600 | 500 | 380 |
| சுறா | – | 550 | 600 | 600 | 800 | 420 |
| சீலா | 350 | 500 | 400 | 400 | 300 | – |
| விளை | 600 | 400 | 500 | 400 | 500 | 350 |
| முரல் | 300 | 400 | 400 | 400 | 400 | – |
| கும்பிளா | 350 | 350 | 400 | 400 | 600 | – |
| கிழாக்கன் | 250 | 500 | – | 300 | – | – |
| ஓரா | 450 | 300 | 500 | 200 | 600 | 230 |
| திரளி | 250 | 300 | 200 | 200 | 150 | 230 |
| நகரை | 250 | 300 | – | 150 | – | – |
| சூடை | 150 | 100 | 180 | – | 150 | 120 |
| ஒட்டி | 350 | 300 | 300 | 200 | 400 | – |
| திருக்கை | 150 | 400 | – | 200 | 200 | – |
| பாலை | 350 | 300 | – | 250 | 200 | – |
| கெழுறு | 150 | 150 | 60 | 200 | 250 | 200 |
| கொய் | 150 | 200 | 60 | 150 | 100 | – |

## நாளை

**மார்கழி-16**
**புதன்கிழமை**
**31.12.2014**

திதி: தசமி
மு.ப.11.57 வரை
நட்சத்திரம்:
அச்சுவினி
மு.ப.08.31 வரை
சுபநேரம்:
04.59-06.29
வரை
இராகுகாலம்:
12.29-01.59
வரை

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 4 | | | | | 2 | |
| 6 | | | 5 | 1 | | | | 7 |
| 5 | | 7 | 6 | 2 | | 4 | | |
| | 5 | | | | | | 7 | 9 |
| | | 2 | 3 | 9 | 1 | 6 | | |
| 9 | 6 | | | | | | 4 | |
| | | 5 | | 6 | 9 | 3 | | 2 |
| 1 | | | | 7 | 3 | | | 8 |
| | 3 | | | | | 7 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 4 | 2 | 1 | 9 | 5 | 7 | 3 | 8 |
| 5 | 8 | 7 | 4 | 3 | 6 | 1 | 9 | 2 |
| 1 | 3 | 9 | 8 | 2 | 7 | 4 | 6 | 5 |
| 4 | 2 | 3 | 6 | 5 | 1 | 9 | 8 | 7 |
| 8 | 1 | 5 | 9 | 7 | 2 | 6 | 4 | 3 |
| 7 | 9 | 6 | 3 | 8 | 4 | 2 | 5 | 1 |
| 3 | 6 | 8 | 2 | 1 | 9 | 5 | 7 | 4 |
| 2 | 7 | 4 | 5 | 6 | 8 | 3 | 1 | 9 |
| 9 | 5 | 1 | 7 | 4 | 3 | 8 | 2 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப் பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்க னவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




சிலருக்கு வயிற்றில் கொக்கிப் புழு, நாடாப் புழு போன்ற வைகள் உருவாகும். இதற்காக பெரிதாக கவலைப்பட வேண்டாம். மல்லிகைப் பூக்கள் சிலவற்றை தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து, அதனை வடிகட்டி அருந்தி வந்தால் போதும், குடற்புழுக்கள் தானாக வெளியேறி விடும். புழுக்களைத்தான் வெளியேற்றும் என்று நினைக்காதீர்கள், சிறுநீரகக் கற்களையே கரைய வைக்கும் தன்மை இந்த மென்மையான மல்லிகைப் பூக்களுக்கு உண்டு. மல்லிகைப் பூக்களை நிழலில் நன்கு உலர்த்தி பொடி செய்து, காலை மாலை தேநீர் அருந்துவது போல் தண்ணீரில் கலந்து அருந்தி வந்தால் போதும், சிறுநீரகக் கற்கள் காணாமல் போய்விடும். இவை அனைத்துக்கும் மேலாக ஒன்றிரண்டு மல்லிகைப் பூக்களை தினமும் உட்கொண்டால் உடம்பில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும்.

## வாய்ப்புண்ணுக்காக வீட்டு வைத்தியம்






தேன், சுத்தமான நெய் அல்லது கிளிசரின் ஆகியவற்றை வாய்ப்புண் உள்ள இடத்தில் தடவுவது பலன் தரும். வாழைப் பழத்தைத் தயிருடன் கலந்து, காலை உணவாக உட்கொண்டால், வாய்ப்புண் மூலம் ஏற்படும் எரிச்சல் மறையும். தக்காளிப் பழத்தை சிறு துண்டுகளாக்கி வாயில் போட்டு மென்று தின்பது வாய்ப்புண்ணை ஆற்ற உதவும். மிதமான சூடுள்ள நீரில் உப்பு மற்றும் எலுமிச்சைச் சாற்றைக் கலந்து வாய் கொப்பளிப்பது பலன் அளிக்கும். மஞ்சள் தூளை நீரிட்டுக் கொதிக்க வைத்து, சிறிது ஆறிய பின்னர் மிதமான சூட்டில் வாய் கொப்பளித்தால் பலன் கிடைக்கும். மாதுளம்பழத் தோலை நீரில் கொதிக்க வைத்து, வடிகட்டிய நீரைக் கொண்டு வாய் கொப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உங்களுக்கு எப்படி?

## 2 கூட்டெண் பலன்கள் 2-6

சந்திரனுடன் சுக்கிரன் சேர்ந்த பலன் உண்டாகும். இவர் சராசரி உயரத்துக்கும் அதிகமாக வளர்ந்த தோற்றமிருக்கும். கவர்ச்சியாகவும் மிக்க அழகான வடிவமும் இவர்களுக்கு இருக்கும்.

கண்களின் புருவம் அடர்த்தியாக அமைந்திருக்கும்.

சிலருக்கு இலேசான மாறுகண் இருக்கலாம். பெண்மை கலந்த தோற்றம் இவர்களுடையது. இவர் அகன்ற நெற்றியும், பரந்து விரிந்த மார்பும், எடுப்பான பின்டக்கமும்வஞ்சனையில்லாத சரீரம் கம்பீரமும், கவர்ச்சியும் கொண்டவராக இருப்பார்.

கருணையும் அன்பும் நிறைந்தவராக இருப்பர். இவருக்கு கற்பனை, மகிழ்ச்சி, கலையுள்ளம் அதிகமாக இருக்கும். குளிர்ச்சியான மனமும், உடலும் இருக்கும். நல்ல ரசிகராக எதையும் நுட்பமாக ஆழ்ந்து ரசித்து மகிழ்வார். இவர்களுக்கும் இவர்களோடு இருப்பவருக்கும் சாப்பாடு, வசதிகளுக்கு, பொழுது போக்குகளுக்கு குறைவிருக்காது.

அபூர்வ வித்தைகள், அற்புதச் சங்கதிகளை அறியத் துடிப்பார். உணர்ச்சிவசப்படுவர். மிகவும் அதிர்ஷ்டமுள்ளவர். இசை, சுவையான சாப்பாடு, நல்ல பட்டாடை, பாதுகாப்பு, வசதியான வாழ்க்கை அமைய வேண்டும் என்று நினைப்பவர்.

பெண் தன்மையுடன் செயலிலும் எண்ணத்திலும் நளினம் உடைய இவர்கள் குடும்ப வாழ்க்கையைப் பெரிதும் விரும்புவர். குடும்பத்தைக் காப்பாற்ற அதிகமாக உழைப்பார்கள். அலுவலகங்களில் கூடப் பெண்களின் போட்டியைச் சந்திக்க நேரும்.

மென் தொழில்களான கலை சார்ந்த தொழில்கள் சிறப்பாக அமையும்.

கவி இயற்றுதல், கதை, கட்டுரை எழுதுதல், நடித்தல், படம் எடுத்தல், பத்திரிகையில் பணி புரிதல் போன்ற தொழில் அமையும்.

நீரிழிவுநோய், கண் கோளாறுகள் தாக்கக் கூடும். வயிற்றுவலி, அஜீரணக் கோளாறு ஏற்படும். வாதம், கபம் தொடர்பான நோய்களில் ஏதாவது உண்டாகலாம்.

## 2 கூட்டெண் பலன்கள் 2-7

சந்திரனில் கேது சேர்ந்த பயன் இவர்களுக்கு உண்டாகும். இவர் சதைபிடித்த கன்னமும், எடுப்பான மூக்கு, வட்ட முகம் கொண்டவராக இருப்பார். நிறம் சற்று மாநிறமாகவும், முடி நீண்டும் அடர்த்தியாகவும் காணப்படும். இவரது கண்கள் இலேசாக மாறுகண் உண்டு. உடலில் பலமிராது. பார்வைக்கு போர்வீரர் போல் காட்சியளிப்பார்.

குணத்தில் நல்லவரான இவர் இயற்கையிலேயே தீய நடத்தைகளுக்கு எதிரானவர். மனித நேயம் மிக்கவர். பெரியவர்களை மதித்து நடப்பவர். மதிப்பு, மரியாதை, மானம் எனப் பார்த்து ஒழுங்காக நடப்பர். தெய்வ நம்பிக்கை சற்று அதிகமாகவே இருக்கும்.

மனச்சாட்சிக்குத் துரோகம் செய்யாமல் நடக்கும் குணம் கொண்டவர்.

தூய ஆடை அணிவர். பேச்சுத் திறமை சற்று அதிகமாகவே இருக்கும். அதிக விளம்பரப் படுத்திக்கொள்ள அறியார். பொது நல சங்கதிகளையும் அரசியலையும் நன்கு பேசி அலசுவர். சண்டை சச்சரவுகளிலிருந்து விலகிப் போய் விடுவர். எந்தக் காரியத்தை எடுத்தாலும் திட்டம் போட்டு கச்சிதமாகச் செய்து முடிப்பார். தோல்வி ஏற்பட்டாலும் ஒப்புக் கொண்டு விடுவார். சிறு துன்பம் நேர்ந்தாலும் பெரிதாகத் தோன்றும், ஆதலால் மிகவும் கவலைப் படுவார். யாருக்கும் தம்மால் துன்பம் நேர்ந்துவிடக் கூடாதெனக் கவனமாக இருப்பார்.

அடிப்படைச் செலவுக்கு உழைத்திடுவார். ஆனாலும் செலவாளியான இவர்களுக்குப் பொருள் பற்றாக்குறை இருக்கும். புகழும் பிரபலமும் இவருக்கு உண்டாகும். இவருக்கு அமையும் வாழ்க்கைத் துணைவியோடு சிறு சிறு பிரச்சினைகள் தோன்றி மறையும். சொந்த வீடு, வாசல், வசதி என அனைத்தும் பிற்பாதி வாழ்க்கையில் அமையும். வெளிநாடு செல்லும் வாய்ப்பு வரும்.

உயர் இரத்த அழுத்தம், ஆஸ்துமா, மூட்டுக்களில் வலி, தலைவலி போன்ற உபாதைகளுக்கு ஆட்படலாம். காய்ச்சல், கண் தொடர்பான பிரச்சினைகள் அடிக்கடி வந்து மறையும்.

# பெண்கள் ஆண்களிடம் பழகும்போது...

அனைத்துப் பெண்களுக்கும் நண்பர்கள் உள்ளனர். அவர்களில் சிலர் நல்லவர்களாகவும், சிலர் கெட்டவர்களாகவும் இருக்கின்றனர். அவர்களிடம் என்னவெல்லாம் பேசலாம் மற்றும் என்னவெல்லாம் பேசக் கூடாது என்பதை பெண்கள் அறிந்து கொள்வது அவசியம். முதலில் அநாவசியமாக, பெண்கள் தங்கள் குடும்பப் பிரச்சினைகளை ஆண்களிடம் பகிர்ந்து கொள்வதைத் தவிர்க்க வேண்டும். இப்படிப்பட்ட பகிர்தலில் ஆரம்பிக்கும் நெருக்கமும், பரிதாப உணர்வும் பாலியல் வற்புறுத்தலுக்கு தூண்டுகோலாகவும், ஆண்கள் பெண்களிடம் வேறு மாதிரியான எதிர்பார்த்தலுக்கும் அடித்தளமாக அமைகிறது. பெண்கள் தங்களின் உண்மையான நண்பர்களிடம் பிரச்சினைகளைப் பகிர்ந்து கொண்டு அவர்களால் அப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயல வேண்டும். இரட்டை அர்த்தம் தரும்படி பேசுபவர்களிடம் இருந்து பேசுவதை தவிர்த்து விடுங்கள் அல்லது அனைத்துப் பெண்களும் சேர்ந்து அத்தகைய ஆண்களிடம் பேசுவதை தவிர்த்து விடுங்கள். பாலியல் நோக்கத்துடன் பழகுபவர்களை முதலிலேயே வெட்டி விடவும் அல்லது அவர்களிடம் எடுத்துக்கூறிக் கண்டிக்கலாம். மேலும் அனைத்துத் தோழிகளும் சேர்ந்து போய் அறிவுரை கூறலாம். அலுவலகத்தில் ஆணும் பெண்ணும் ஆரோக்கியமான நட்புடன் பழகுவது நல்லது. ஆனால் சாதாரண தோழமையின் எல்லையைத் தாண்ட ஆண்கள் முற்படுகையில், மிகுந்த கவனத்துடன் பெண்கள் இருக்க வேண்டும்.

■ பி.சுபீகா






# பெற்றோரின் கடமைகள்...

■ பி.விபிஷனா



பெற்றோர்களின் கடமை பிள்ளைகளுக்கு உணவு கொடுப்பது, படிக்க வைப்பது, நல்ல உடை வாங்கிக் கொடுப்பது, பாதுகாப்பதோடு முடிந்து விடுவதில்லை. புத்தி தடுமாறும் இளமைப்பருவத்தில் அவர்களைப் போராடி காப்பாற்றுவதும், வழித்தடம் மாறும்போது நல்வழிப் படுத்துவதும் பெற்றோரின் முக்கிய கடமையாகும். இளமைப் பருவ அசம்பாவிதம் ஏதாவது ஒன்று நடந்து விடும் போது தான் எப்படியெல்லாம் அவளை வளர்த்து ஆளாக்கினேன். ஆனால் அவள் என்னை மதிக்காமல் யாருடனோ போய் விட்டாளே என்று கூப்பாடு போட்டுக் கொண்டிருப்பதில் பிரயோசனம் இல்லை. இளமைப் பருவம் தனக்குள்ளே ஈகோவை வளர்த்துக் கொண்டு தனக்கு எல்லாம் தெரியும் என்று நினைக்கும் பருவம்.

பெற்றோர் சொல்லை மீறிப் பார்ப்போம் என்று தோன்றும் பருவம். எதிர்த்துப் பேசும் பருவம்.

மொத்தத்தில் பெற்றோர்கள் தான், தன்னுடைய மகிழ்ச்சிக்கு முதல் எதிரி என்று நினைக்கும் பருவம். அப்படி நினைத்துக் கொண்டிருக்கும் பெண்களை நல்வழிப்படுத்துவது என்று இமாலய சாதனை. அதை செவ்வனே செய்து முடிக்க பெற்றோர் பெரும் முயற்சி எடுக்க வேண்டும். எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும். இளமைப் பருவம் என்பது ஒரு சிக்கலான பருவம்.

காதல் கண்ணை மறைக்கும். அப்போது அறிவு மங்கும். கடந்து வந்த பிறகு தான் விழவிருந்த அதல பாதாளத்தின் அளவு தெரியும். பிள்ளைகள் இளமைப் பருவத்தை அடையும் போது தான் பெற்றோருக்கு பொறுப்புகள் அதிகமாகின்றன. பொறுமையும் அவசியமாகிறது. பிள்ளைகள் கண்முன் இருக்கும் ஆபத்தை உணராமல் நினைத்ததைச் செய்வார்கள். ஆபத்தை உணர வைத்தாலும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். வாழ்க்கை ஒன்றுதான். அறிவு தான் வெவ்வேறு விதமாகச் செயல்படுகிறது. பக்குவப்பட்ட அறிவு எம்மை வழிநடத்துகிறது. பக்குவப்படாத அறிவு எம்மைப் படுகுழியில் தள்ளி வேடிக்கை பார்க்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்

தோற்றம்
19 . 07 . 1965



மறைவு
30 . 11 . 2014

### அமரர் நடராசா நிர்மலாதேவி

கடந்த 30.11.2014 சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவியின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனுதாபச்செய்தி அனுப்பியவர்கள் மற்றும் பல வழிகளில் உதவியவர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (30.12.2014) செவ்வாய்க்கிழமை மு.ப.10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

தன்னாச்சி வீதி,
இயக்கச்சி. (51316) (4.6.3)
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
1926



மறைவு
30.11.2014

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட

### திருமதி கனகபூசணி அம்மா தேவராசா

[முன்னாள் உரிமையாளர் - ஜெயக்குமார் ரெக்ஸ்ரைல், யாழ்ப்பாணம்]

கடந்த 30.11.2014 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது தாயாரின் வீட்டுக்கிரியைகள் இன்று (30.12.2014) செவ்வாய்க்கிழமை காலை கந்தையாவீதி, சாவகச்சேரியில் அமைந்திருக்கும் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் டச்சுவீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள ஐங்கரன் மண்டபத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மகள் - திருமதி விக்கினேஸ்வரி பாலசுந்தரம்
மருமகன் - காலஞ்சென்ற அம்பிகாவதி பாலசுந்தரம்
(உள்ளகக் கணக்காய்வாளர் - வவுனியா நகரசபை, முன்னாள் எழுதுவினைஞர் சங்கத்தலைவர் வடகிழக்கு உள்ளூராட்சி)
பேர்த்தி - செல்வி பாலரேவதி
(முன்னாள் முன்பள்ளி ஆசிரியை - வவுனியா)
பேரன் - பாலசுரேஸ் - வீரதர்சினி (ஜேர்மனி)
பூட்டப்பிள்ளைகள் - வைசா, விபிசன்,
பேர்த்தி - திருமதி விஜயபாலினி - மணிவேல்ராஜ் (சுவிஸ்)
பூட்டப்பிள்ளைகள் - யானு, யாழவன்
பேரன் - அகிலன் - சர்மினி (பிரான்ஸ்)
மற்றும் - கனகரத்தினம் கனகாம்பிகை (கரன் ஆட்ஸ்)
- ஜெயராணி மகேந்திரன்
(யாழ்.போதனா வைத்தியசாலை, அரசஊழியர்),
- ஜெயக்குமார் விமலேஸ்வரி
- விமலேஸ்வரி வேலாயுதம் (தபாலதிபர் - கனடா)

கொழும்பு பஸ் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
077 896 0239

தகவல்:
திருமதி விக்கினேஸ்வரி பாலசுந்தரம் (மகள்).

## கண்ணீர் அஞ்சலி



நல்லூர் பிரதேச செயலக வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி சங்க முகாமையாளர் திருமதி ராகினி யோகராஜா அவர்களின் அன்புத் தாய்

### திருமதி கந்தையா சிவயோகம்

கடந்த 15.12.2014 அன்று இயற்கை எய்தியுள்ளார். அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர் நலன்புரிசங்கம்,
பிரதேசசெயலகம், நல்லூர். (55395)(4.7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்



அமரர்

### சின்னையா துரைராஜா

கடந்த 29.11.2014 கனடாவில் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச்செய்தி அறிந்து எமது இல்லத்திற்கு விரைந்து வந்தும் தொலைபேசி மூலமும் ஆறுதல் அளித்த அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் அன்பான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (சி/18449)(4.7)
குடும்பத்தினர்.

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சொக்கலிங்கம் துரைஐயா

(உரிமையாளர்-கமலாஸ்ரோர்ஸ், சந்திரன் பான்சி பலஸ்)

தோற்றம் 30.04.1934 மறைவு 20.12.2004

திதி: மார்கழி பூர்வபக்க நவமி 30,12,2014

அன்புடன் எம்மை வளர்த்து
நல்வாழ்வு வாழ வழிகாட்டிய
எமது ஆருயிர்த் தந்தையே!
நீங்கள் மறைந்து ஒரு
தசாப்தம் கடந்தாலும் எம் துயரம்
நீங்கவில்லையே!
என்றும் உங்கள் நினைவுகளுடன்
ஆத்மாசாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சந்திரன் பான்சிபலஸ்,
துரைஐயா திருமண மண்டபம்,
நவாலிவீதி, ஆனைக்கோட்டை.
(55314)(4.3.6)

குடும்பத்தினர்.
சங்கரப்பிள்ளை வீதி.
ஆனைக்கோட்டை.

## நினைவலைகள்

10 ஆம் ஆண்டு

தோற்றம்
30 . 04 . 1934



மறைவு
20 . 12 . 2004

திதி:
30.12.2014

27 ஆம் ஆண்டு

தோற்றம்
12 . 07 . 1959



மறைவு
19 . 10 . 1987

அமரர் சொக்கலிங்கம் துரைஐயா

அமரர் துரைஐயா பாலச்சந்திரன்

(உரிமையாளர்கள்– கமலாஸ்ரோர்ஸ், சந்திரன் பான்சி பலஸ்)

ஈன்றோரைச் சான்றோராக்கி இல்லை என்ற சொல்லை நீக்கி
இமையாணன் பதிதனிலே இலக்கணமாய் வாழ்ந்துவிட்டு
இமையளவும் எண்ணாது எங்கே மறைந்தாயோ எங்கள் ஐயா?
சிறீமுருகன் அடிசேர சித்தம் கலங்கியே நித்தம் வணங்குகிறோம்.

(55373)(4.7)

கமலாஸ்ரோர்ஸ்,
நவாலி வீதி, ஆனைக்கோட்டை

உங்கள் நினைவுடன் வாழும்
குடும்பத்தினர்.

# பொதுக்கிணற்றிலிருந்து ஆலய பரிபாலன சபைத் தலைவர் சடலமாக மீட்பு

தென்மராட்சி, டிசெ.30

கச்சாய் ஒட்டங்கேணிப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபைத்தலைவர் கொடிகாமம் கச்சாய் வீதியில் உள்ள பொதுக் கிணற்றில் சடலமாக மீட்கப்பட்டார்.

ஆலயத்தில் இடம்பெறும் திருவெம்பாவை பூசைக்காக காலையில் நடந்து சென்றதாகவும் நீண்ட நேரம் காணாததால் தேடிச் சென்றவேளையில் கச்சாய் வீதியில் உள்ள பொதுக்கிணற்றில் இவர் சடலமாகக்காணப்பட்டதாகத்தெரிவிக்கப்பட்டது.

கொடிகாமம் கச்சாய் வீதியைச் சேர்ந்த கந்தையா நவரத்தினம் (வயது-76) இளைப்பாறிய ஆசிரியரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

சடலம் கொடிகாமம் பொலிஸாரால் மீட்கப்பட்டுசாவகச்சேரி மருத்துவமனையில் ஒப்படைக் கப்பட்டது. கொடிகாமம் பிரதேச திடீர் சாவு விசாரணை அதிகாரியின் பணிப்பின் பெயரில் உடற்கூற்றுப் பரிசோதனை மேற் கொள்ளப்பட்டு சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ-9)

# புதுச் சைக்கிளை பறிகொடுத்தார் உயர் வகுப்பு மாணவி

தென்மராட்சி, டிசெ.30

பாடசாலைக்குச் செல்வதற்காக அண்மையில் கொள்வனவு செய்த புதிய சைக்கிளை ஆலயப் பகுதியில் நிறுத்திவிட்டு சென்றவேளையில் அது திருட்டுப்போய் விட்டது. இந்தச் சம்பவம் கடந்த ஞாயிறன்றுதென்மராட்சிப் பகுதியில்இடம்பெற்றது. சாவகச்சேரியில் உள்ள பாடசாலையொன்றில் உயர் கல்வி கற்கும் மாணவியே சைக்கிளைப் பறிகொடுத்துள்ளார்.

பாடசாலை, தனியார் வகுப்புகளுக்கு செல்வதற்காக பெற்றோருக்கு கரைச்சல் கொடுத்ததால் வறுமை நிலையிலும் அண்மையில் புதிய சைக்கிள் வாங்கி கொடுக்கப்பட்டது.

அருகில் உள்ள ஆலயத்துக்குச் சென்ற அவர் பூட்டிவிட்டு, பூஜை முடிந்து வெளியே வந்தபோது தமது சைக்கிள் காணாமற்போயிருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்.

பெற்றோரால்கடன்பட்டுவாங்கிக்கொடுத்த சைக்கிள் திருட்டுப் போனதால் விரக்தி அடைந்த மாணவி உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றுள்ளார். இந்த மாணவி சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (ஓ-9)

# மானிய உரம் விநியோகம்

ஒட்டுசுட்டான் கமநல சேவைக்குஉட்பட்ட தண்டுவான், ஒட்டுசுட்டான்,முத்துஐயன்கட்டு பிரதேச விவசாயிகளுக்கான மானிய உர விநியோகம் நடைபெற்று வருவதாக ஒட்டுசுட்டான்கமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தர்.அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

குறித்த பகுதிகளிலுள்ள உரக்களஞ்சியங்களிலிருந்து எவ்வித தடையுமின்றிவிரைவான உர விநியோகம் நடைபெற்றுவருவதாகவும்அவர்மேலும் குறிப்பிட்டார் (வ-600)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திகள்

After O/Levels
சர்வதேசதரம் வாய்ந்த
இரட்டை டிப்ளோமா
கற்கைநெறி 4 மாதங்களில்




IT + ENGLISH
எதிர்கால தொழில்வாய்ப்பிற்கு அத்தியாவசிய திறன்கள்

பதிவுகளை மார்கழி 31ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுங்கள்

Diploma in Information Technology
Duration : 4 Months
Course Fee : Rs. 24,500

Diploma in English
Duration : 4 Months
Course Fee : Rs. 19,500

சேமிப்பு Rs. 15,875

Dual Diploma Usual Price Rs. 44,000
Dual Diploma With Discount Rs. 28,125

25% off* for the 1st Diploma 50% off* for the 2nd Diploma
*Conditions Apply

SMS your Details to Jaffna : 077 309 9 308
Kilinochchi : 077 55 888 95

New Batches
New 02 JAN 2015

ESOFT — Shaping Lives, Creating Futures
ESOFT METRO CAMPUS
No. 137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Hotline : 077 309 9 308 | Tel : 021 222 4142
இலங்கையின் மிகப்பெரிய உயர்கல்வி வலையமைப்பு

## தேர்தல்

நிகழ்வுகள் மிக அதிகளவாக 421 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்றும் அதனடிப்படையில் இதுவரை 567 முறைப்பாடுகள் மீறல் தொடர்பில் பதிவாகியுள்ளன என்றும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

தாக்குதல் தொடர்பான வன்முறைகள் 50 ஆகப் பதிவாகியுள்ளன. சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தல் தொடர்பில் 12 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. இந்த வன்முறைகள் அதிகளவாக கொழும்பில் 112 முறைப்பாடுகளும், அநுராதபுரத்தில் 87 முறைப்பாடுகளும், கேகாலையில் 39, களுத்துறையில் 38 ஆகவும் பதிவாகியுள்ளன.– என்றும் தெரிவிக்கப்பட்டது.

சுகாதார அமைச்சு ஏற்பாடு செய்திருந்த சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்கில் தற்போதைய ஜனாதிபதிக்குச் சார்பான செயற்பாடுகள், அவரது கட்சியைப் பிரதானப்படுத்திய வாசகங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. பொது எதிரணியின் வேட்பாளரது மினுவாங்கொட அலுவலகம் தாக்கப்பட்டுள்ளது. பொது எதிரணியின் ஆதரவாளர் ஒருவர் கடத்தப்பட்டுள்ளார். மட்டக்களப்பு அமைப்பாளர், தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த குழுவினரால் தாக்கப்பட்டுள்ளார். மற்றொருவர் கடத்தப்பட்டுள்ளார் – என்றும் அந்த அமைப்பு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ந–4)

## தமிழ்க்

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் நாடு திரும்பியிருந்தார். கட்சியின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை உடனடியாக நேற்று முன்தினம் இரவே அவர் கூட்டியிருந்தார்.

அதில் ஆட்சிமாற்றம் வேண்டும் என்ற நிலைப்பாடு வலியுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் கூட்டமைப்பு எடுக்கும் முடிவால், பாதிப்பு வருமா என்பது தொடர்பிலும் மேற்படி கூட்டத்தில் நீண்ட நேரம் ஆராயப்பட்டுள்ளது. இறுதியில், இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவை அறிவிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இன்று காலை 10.30 மணிக்கு, கொழும்பு ஜானகி விடுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் ஊடகவியலாளர் சந்திப்பு ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது. அதில், பொது எதிரணி வேட்பாளரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏன் ஆதரிக்கின்றது என்பது தொடர்பிலான அறிக்கை வெளியிடப்படவுள்ளது. (ந–5)

விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி
இல.475 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்
(வண்ணார் பண்ணை சிவன்கோவிலடி)
A/L தொழில்நுட்பப் பிரிவு
பிரிவு } 2015 2016 2017
ஆரம்பம் 01.01.2015
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன
தொடர்புக்கு : 077 24 87 774

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி
**இராமலட்சுமி கிருஷ்ணன்**

அன்னை மடியில்
29.05.1959

அரன் அடியில்
30.11.2014

**திதி: வளர்பிறை நவமி**

ஆயிரம் உறவுகள் எம்மோடு இருந்தபோதும்
துணையீரம் என்பது தரணியில் மேலானதே
பாயிரம் போல் விளங்கும் பண்பான அறிவுரைகள்
ஓராயிரம் பிறப்பெனினும் ஒளி விளக்காய் வழிகாட்டும்

எம்மையெல்லாம் வாழ்வாங்கு வாழவைத்து கடந்த 30.11.2014 ஞாயிற்றுக்கிழமை எம்மை விட்டுப் பிரிந்த எமது குலதெய்வத்தின் அந்தியேட்டிக்கிரியை இன்று (30.12.2014) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெற உள்ளதால் தாங்களும் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச் செய்தியறிந்து மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எமது குடும்பத்தின் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

வன்னியசிங்கம் வீதி,
இணுவில் தெற்கு.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுவர்




## தந்திரமும் தவறும்

ஒரு நாள் ஒரு நரி கிணற்றில் தவறி விழுந்து விட்டது. விழுந்த அந்த நரி, யாராவது வந்து தன்னை காப்பாற்றுவார்கள் எனக் காத்திருந்தது. ஆனால், ஒருவரும் அந்தப் பக்கம் வரவேயில்லை. அதனால், சாப்பிடவும் முடியாமல், தூங்கவும் முடியாமல் தண்ணீருக்குள்ளேயே தவித்துக்கொண்டிருந்து நரி. இவ்விதம் பத்து நாள்கள் கடந்து போனது. அன்று அந்தப் பக்கமாக ஓர் ஆடு, மே... மே...ன்னு கத்திக்கொண்டு வந்தது. உடனே நரி உஷாரானது. இந்த ஆட்டை வைத்து எப்படியாவது மேலே வந்துவிட வேண்டும் என்று நரி நினைத்துக்கொண்டது. 'ஆடு அண்ணா, இங்கே வாயேன்' என்று அன்போடு அழைத்தது நரி. கிணற்றில் இருந்து வந்த குரலைக் கேட்டதும், ஆடு எட்டிப் பார்த்தது. 'என்ன நரியாரே... தவறி விழுந்துட்டீரா?' என்று கேட்டது ஆடு. 'சே... சே... நானாவது விழுவதாவது. நான் வேணும் என்று தான் கிணத்துக்குள்ளே இறங்கினேன். இந்தக் கிணத்துத் தண்ணீர் ரொம்ப சுவையாக இருக்கு. நீ வேணும் என்றால் இறங்கி வந்து குடிச்சிப் பாரேன்' என்றது நரி. ஆடு கொஞ்சமும் யோசிக்கவில்லை. உடனே கிணற்றுக்குள் குதித்தது. 'நரியே... இந்தத் தண்ணீர் சுவையாக இல்லையே... உன்னை நம்பி வந்தேன் பாரு... இப்போ எப்படி வெளியில போறது?' என்று கேட்டது ஆடு. 'முதலில் உன் மேலே ஏறி நான் வெளியே போறேன். அதன் பின் கையை நீட்டுகிறேன் கையைப் பிடித்துக் கொண்டு நீயும் வெளியே வந்து விடு' என்றது நரி. ஆடும் ஒப்புக்கொண்டது. ஆடு மீது ஏறி நரி வெளியே வந்தது. ம்..கையைக் கொடு.. என்னைச் சீக்கிரமா காப்பாத்து...' என்றது ஆடு. 'உன்னை நான் எப்படிக் காப்பாற்றுவது? எதைச் செய்தாலும் விவேகமா, புத்திசாலித்தனத்தோட செய்யணும். இப்போதாவது புரிந்துகொள் என்று சொல்லி விட்டு நரி கிளம்பியது. தனது முட்டாள்தனத்தை நினைத்து ஆடு வருந்தியது.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஜெயசீலி பீலிக்ஸ்



குருநகரைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் நாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயசீலி பீலிக்ஸ் (ஆனந்தராணி) கடந்த 25.12.2014 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான றோமன் - யோசேப்பின் தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான குருசுமுத்து - சிசிலியா தம்பதியரின் மருமகளும், பிரான்ஸ் நாட்டில் வசிப்பவர்களான முன்னாள் விளை யாட்டுத்துறை அதிகாரி குருசுமுத்து பீலிக்ஸ் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி சுதர்சன் பிருந்தா, யுறேய், ஜெவ்றி ஆகியோரின் பாசமிகு தாயாரும், அல்போன்ஸ் சுதர்சன் (பிரான்ஸ்), திருமதி யுறேய் சரோஜினி ஆகியோரின் மாமியாரும், திருமதி யூடா இமாக்குலற் (லண்டன்), கிறிஸ்ரியன், காலஞ்சென்றவர்களான ஜெயரெட்ணசிங்கம், திருமதி இராயப்பு லூர்துநாயகி மற்றும் கில்பேட், ஒலிவர், காலஞ்சென்ற அன்ரனி மற்றும் ஸ்ரனிஸ்லோஸ் (நோர்வே), டயஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற வர்களான கிளமென்ற் - குணகுந்தம்மா, பிரான்சீஸ் மற்றும் திருமதி அன்னமலர், திருமதி அழகேந்திரன் - லைலா, இராயப்பு, புஸ்ப ராணி, கமலா, ராசேஸ், காலஞ்சென்ற இமாக்குலற் மற்றும் கொன்சி, கமலினி (நோர்வே), றெனி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (31.12.2014) புதன்கிழமை பிரான்ஸில் நல்லடக்கம் செய்யப்படவிருப்பதால் அந்நாளை நினைவுகூர்ந்து 31.12.2014 புதன்கிழமை காலை 6.00 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியிலும், தொடர்ந்து எமது இல்லத்தில் நடை பெறும் வழிபாட்டிலும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், அறிமுகமானவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

165, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

(55388)(12.7)

தகவல்: உறவுகள் சார்பாக
கு.இராயப்பு

### திருமதி நாகம்மா நாகமுத்து



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், அம்பலவாணர் வீதி, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா நாகமுத்து 28.12.2014 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குரும்பசிட்டியைச் சேர்ந்த ஐயாமுத்து - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகமுத்துவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற சிவபாலசுந்தரம் (சோந்தி - முன்னாள் இ.போ.ச. சாரதி) மற்றும் கமலாதேவி, மேரியோகேஸ்வரி, குணமணி, மனோன்மனி, திருச்செல்வம் ஆகியோரின் அன்புத் தாயும், சோதிமலர், காலஞ்சென்றவர்களான தேவராசா, ஞானப்பிரகாசம் மற்றும் சற்குணநாதன், பாலசுப்பிரமணியம், சுகந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், சிறீதரன், சிறீகினி, சுபாசினி, இளங்கோவன் (சுதன்), நிஷானி, துஷ்யந்தினி, சுகேஸ், தாட்சாயினி, மதுரா, சிவம், நம்யா, வாசுகி, றதன், சர்மிலன், சயந்தன், சாருயன், பிரதீஸ், தனுதீஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திலக்சன், திவ்யா, பகீர், றோகிதன், மயூரிகா, டக்சிகா, ஹரிவர்சன், அபிர்னா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2014) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லாத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்பலவாணர் வீதி,
தொம்பை வளவு, உடுவில்.

(5555389)(12.7)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### கந்தப்பு பாலசுப்பிரமணியம்

(கிழக்கு மாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம்-DPMG-Eastern Province)



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட கந்தப்பு பாலசுப்பிரமணியம் நேற்று (29.12.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவயோகத்தின் பாசமிகு கணவரும், பார்வதி, விக்கினேஸ்வரன், வீரபாகு, கணேசன், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுப்பிரமணியம், கணபதிப்பிள்ளை, சிவஞானம், சிவக்கொழுந்து, கமலாதேவி, கெங்காதரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2014) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

### கந்தையா நவரத்தினம்



கச்சாய் வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நவரத்தினம் 28.12.2014 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் பாக்கியலீலா (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் பாசமிகு கணவரும், நெடுமாறன்(கனடா), முகில்வண்ணன் (நோர்வே), அன்பழகன் (ஆசிரியர்-யா/போக்கட்டி றோ.க.த.க பாடசாலை), நவஜீவன் (வைத்திய கலாநிதி-ஆதார வைத்தியசாலை (கிண்ணியா), பாக்கியதீபன் (இங்கிலாந்து), வேணுகா (BBA-hons) ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற இராசதுரை, காலஞ்சென்ற அன்னரத்தினம், காலஞ்சென்ற துரைரத்தினம், மகேஸ்வரி, காலஞ்சென்ற சுப்பிரமணியம், சீவரத்தினம் ஆகியோரின் சகோதரரும் நந்தினி(கனடா), கலாசோதி (நோர்வே), ரஞ்சினிதேவி, மணிறஜனி(DO-திருகோணமலை), கமலினி (இங்கிலாந்து), மனுசுதன்-B.Com(இங்கிலாந்து) ஆகியோரின் மாமனாரும், மகீஸ், கஜானா, காடினியா, டேனுஷன், கபிஷன், பிரியங்கன், புருஷோத், விக்னன், விஷ்னி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.12.2014) புதன்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பாலாவித்தாள் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"நவஜீவனம்,"
கச்சாய் வீதி,
கொடிகாமம்.

(51860) (4.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

### உங்களுக்கு தெரியுமா

வரிக்குதிரையின் ஆயுள்காலம் – 22 வருடங்கள், அணிலின் ஆயுள்காலம் – 82 வருடங்கள், செம்மறி ஆட்டின் ஆயுள்காலம் – 16 வருடங்கள், சிம்பன்சியின் ஆயுள்காலம் – 41 வருடங்கள், பெருங்கரடியின் ஆயுள்காலம் – 20 வருடங்கள், தீக்கோழியின் ஆயுள்காலம் –50 வருடங்கள், பென்குயினின் ஆயுள்காலம் – 22 வருடங்கள், திமிங்கிலத்தின் ஆயுள்காலம் –500 வருடங்கள், கடலாமையின் – ஆயுள்காலம் 200 வருடங்கள், சிரிக்கத் தெரிந்த விலங்கு – மனிதன் மூக்கில் பல் உள்ள விலங்கு – முதலை பாலைவனக் கப்பல் என அழைக்கப்படும் விலங்கு – ஒட்டகம் ஈருடகவாழிகள் யாவை – ஆமை, தவளை, சலமந்தா, முதலை பறக்கமுடியாத பறவைகள் – கிவி, ஏமு, பெஸ்பரோ, தீக்கோழி, பென்குயின் பௌத்தரின் புனித நூல் – திரிபீடகம் களுகங்கையின் நீளம் – 120 கி.மீற்றர் தோலில் நச்சுச் சுரப்பிகள் உள்ள விலங்கு – தேரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்



## கந்தையா கதிரவேற்பிள்ளை

துன்னாலையைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கதிரவேற்பிள்ளை நேற்று (29.12.2014) திங்கட்கிழமை காலமனார்.

அன்னார் துன்னாலை மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், இந்திராதேவி (கனடா / முன்னாள் ஆசிரியை, காசிநாதர் வித்தியாலயம், துன்னாலை), ரவிச்சந்திரன் (சுவிஸ்), Dr.சந்திராதேவி (ஆஸ்திரேலியா), சிவச்சந்திரன் (உதவித் திட்டப்பணிப்பாளர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), அருட்சந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் பாச மிகு தந்தையும், அருணகிரிநாதன் (கனடா), சர்வநாயகி (சுவிஸ்), Dr.சிவக்குமார் (ஆஸ்திரேலியா), கலாநிதி சிவமதி (பீடாதிபதி, விவ சாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்), விஜிதா (சவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பொன்னையா, மாதரசி, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரபிக்காந் - உமாசங் கரி, ரதினா, ராகேஸ், ஆதவன், நவீனன், அஸ்வினி ஆகியோரின் பாசமிகு பேரனும், ஆதவியின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.12.2014) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் திருநெல்வேலியில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயா னத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

தகவல்: க.சிவச்சந்திரன் (மகன்)
72/27, பணிக்கர் லேன்,
திருநெல்வேலி.

(55332)
(12)

## திருமதி செல்லம் சிவப்பிரகாசம்



நீர்வேலி வடக்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாக வும், காவில் கரணவாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம் சிவப்பிரகாசம் (28.12.2014) ஞாயிற் றுக்கிழமை மாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவப்பிரகாசத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை- சின்னக்குட்டி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்ற பூமணியின் அன்புச் சகோதரியும், ஆனநத ராசா, காலஞ்சென்ற தேவராசா ஆகியோரின் அன்புத் தாயும், பரமேஸ்வரி, செல்வமலர் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், பகிரதன், முகுந்தன் (கனடா), பார்த்தீபன் (கனடா), பிரதீபன் (கனடா), நிரோஜா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2014) செவ்வாய்க் கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காவில், கரணவாய்,
கரவெட்டி.

தகவல்: மகன், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பெறாமக்கள்.

## மயில்வாகனம் கதிர்காமத்தம்பி

(இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர்-சிலோன் பேப்பர் கோர்ப்பரேஷன், (முன்னாள் செயலாளர்-நல்லூர் லயன் கழகம்)



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், இல.677, பருத்தித்துறை வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் கதிர்காமத்தம்பி நேற்று (29.12.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி மயில்வாகனம் தம்பதியரின் மகனும், ராஜலட்சுமியின் அன்புக் கண வரும், முகுந்தனின் (கொமர்ஷல் வங்கி- யாழ்ப்பாணக் கிளை) பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2014) செவ்வாய்க் கிழமை மாலை 3.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயா னத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 677,
பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

தகவல்:
முகுந்தன் (மகன்)
தொ.இல: 077 235 9545

# மரண அறிவித்தல்கள்

பிறப்பு
11
09
1948



இறப்பு
29
12
2014

## திருமதி T. ஜெயச்சந்திரா (சந்திரா)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் மருதனார் மடம் அருளகம் சிறுவர் இல்லத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி T. ஜெயச்சந்திரா (சந்திரா) நேற்று (29.12.2014) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரை யடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற தாமு (வைத்தி)-மேரி சற் குணம் தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், போல் தர்ம லிங்கம் (லண்டன்), டிக்சன் அரசரட்ணம் (கொழும்பு), துரைரட்ணம் (அரியாலை), காலஞ்சென்ற யோகரட்ணம் மற்றும் விமலாவதி (கண்டி), மகாரட்ணம் (திருகோண மலை), ராஜரட்ணம் (கனடா), வைடூரியம் (கொழும்பு) ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் யாழ். பிரதான வீதியில் அமைந் துள்ள வைட் ஹவுஸ் (White House)இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நல்லடக்க ஆராதனை நாளை (31.12.2014) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அதே இடத்தில் நடை பெற்று, பின்னர் தெல்லிப்பழை C.A.C.M. சேமக்காலை யில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தாமு துரைரட்ணம்
(சகோதரன்)

## தில்லையம்பலம் (சின்னையா) கணேசமூர்த்தி

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நயினாதீவு 4ஆம் வட்டாரத்தில் வசித்தவரும், தற்போது புங்கங்குளம் வீதி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் கணேச மூர்த்தி நேற்று (29.12.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் (சின்னையா)- தங்கமுத்து தம்பதியரின் சிரேஷ் புத்திரனும், காலஞ்சென்றவர்களான இராசையா- காமாட்சி தம்பதியரின் மருமகனும், தனலட்சுமியின் அன்புக் கணவரும், கோபாலசாமியின் (சின்னத்துரை) பாசமிகு சகோதரனும், தவ ராஜா, அருந்ததி, தேவராணி, காலஞ்சென்ற துளசிதாசன் மற்றும் தர்ம ராணி, தேவாஅமிர்ததேவி, சறோஜினி தேவி ஆகியோரின் மைத்துன ரும், உதயகுமாரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2014) செவ்வாய்க் கிழமை புங்கங்குளம் வீதி, அரியாலையில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக அரியாலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: கோபாலசாமி
(சின்னத்துரை)

## சங்கரன் இராசதுரை



திக்கம்புரை வசாவிளானைப் பிறப் பிடமாகவும் மல்வம் உடுவிலை வசிப்பிட மாகவும் கொண்ட சங்கரன் இராசதுரை நேற்று (29.12.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரன் - முத்தி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதி -சின் னாச்சி தம்பதியரின் மருமகனும், காலஞ் சென்ற வள்ளியம்மையின் பாசமிகு கண வரும், தவம், இராசமணி, சின்னத்துரை (ஜேர்மனி), பரமேஸ்வரி, இராஜேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோ தரனும், ஜெகதீஸ்வரன் (பிரான்ஸ்), ஜெயசீலன் (ரவி எலக்ரோனிக்ஸ், இணுவில்), ஜெகனேஸ்வரன், ஜெயகௌரி (பிரான்ஸ்), நிறோஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், வதந்தினி (பிரான்ஸ்), யூடிற்றா, சிவநேசம், கமலேஸ்வரன் (பிரான்ஸ்), விஜிகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், நிறோஜன் (பிரான்ஸ்), சிஷாளினி (பிரான்ஸ்), டிலக்சனா, கனிஸ்டன், சர்திகா, சாருஜன், ரிஸ்திகா, ஆயிஷா (பிரான்ஸ்), அச்சு (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2014) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப. 10.00 மணி யளவில் தகனக்கிரியைக்காக இணுவில் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மயான வீதி, மல்வம், உடுவில்.

தகவல்: குடும்பத்தினர்.
075 041 5080, 077 401 3968

# செய்திகள்

## திருவெம்பாவை பூசைகள்

யாழ்ப்பாணம்,டிசெ.30
கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட விநாயகர் ஆலயத்தில் திருவெம்பாவை பூசை வழிபாடுகள் காலை 5 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. விஷேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் திருவெம்பாவை படிப்பு என்பன நடைபெற்று வருகின்றன. (து-17)

* * *

யாழ்பாணம், டிசெ.30
கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் திருவெம்பாவை பூசையை முன்னிட்டு விஷேட பூசை மற் றும் வழிபாடுகள் நடைபெற்று வருகின் றன. (து-17)

* * *

யாழ்பாணம், டிசெ.30
நீர்வேலி தெற்கு மனோன்மணி அம்மன் ஆலயம் மற்றும் ஞானவைரவர் ஆலயத் திலும் திருவெம்பாவை பூசைகள், திரு வெம்பாவை படிப்பு என்பன இடம்பெற்று வருகின்றன. (து-17)

## தொடர்ச்சிகள்

### ஆதரவை

என்னை வெற்றி பெறச் செய்யுங்கள். நான் உங்களுக்கு விடுதலை அளிக்கின் றேன்.- என்றும் அவர் அங்கு மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பு, சிவானந்தா விளையாட்டு மைதானத்தில் நேற்று திங்கட்கிழமை காலை நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டுஉரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மக்களது பணத்தைக் கொண்டு மக்க ளுக்கு சேவை செய்யாமல் மறைந்த அவற்றைதனது பைக்குள் போட்டுக்கொள் கிறார். அரச ஊழியர்களையும் நீதித்து றையையும் தனது கட்டுப்பாட்டில் வைத் துக்கொண்டு அவர்களைச் சுதந்திரமாகச் செயற்பட முடியாமல் செய்வதுடன் ஒரு சர்வாதிகாரியாகவும் செயற்படுகிறார்.

எனவே, மக்களே! நீங்கள் இப்படிப்பட்ட ஜனாதிபதியைக் காப்பாற்றப் போகிறீர் களா? அல்லது எமது நாட்டைக் காப்பாற் றப் போகிறீர்களா? சிந்தியுங்கள். எந்த விதமான எதிர்பார்ப்புகளும் இன்றியே எனக்கு ஆதரவு வழங்கி எங்களது கட்சி யில் வந்து சகல மக்களும் ஒன்று சேர்கி றார்கள்.

எங்களுக்கு ஆதரவு வழங்குகின்ற எந்தக் கட்சியுடனும் எந்த உடன் படிக்கையை யும் நாங்கள் செய்யவில்லை. அவர்கள் எந்த எதிர்பார்ப்பும் இன்றியே எமக்கு ஆதரவு வழங்குகின்றனர். ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகளுடன் நாங் கள் எந்த உடன்படிக்கையையும் செய்ய வில்லை. – என்றும் அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார். (ற-5)

### வடக்கில் இன்று

மனோகணேசன் ஆகியோர் வரவுள்ளனர். இன்று காலை 8.30 மணிக்கு மன்னார் ஆயர் இராயப்பு யோசப்பை ஆயர் இல் லத்தில் சந்தித்துக்கலந்துரையாடும் பொது எதிரணியினர் அதன் பின்னர் மன்னார் நகரசபை மைதானத்தில் 9 மணிக்கு இடம் பெறும் பரப்புரைக் கூட்டத்தில் பங்கெடுக் கவுள்ளனர். தொடர்ந்து 10 மணிக்கு வவு னியா கலைமகள் விளை யாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறும் பரப்புரைக் கூட்டதில் பங்கெடுக் கவுள்ளனர்.

இதன் பின்னர் வவுனியா நெல்லி விடுதி யில் மதியபோசனத்தை முடித்துக் கொண்டு பொது எதிரணியினர்,முல்லைத்தீவு மாவட் டத்துக்குச் செல்லவுள்ளனர். அங்கு பரப் புரைகளை முடித்துக் கொண்டு கிளிநொச் சிக்கு பி.ப. 3 மணிக்கு பொது எதிரணி யினர் செல்வார்கள். இறுதியாக மாலை 4 மணிக்கு நல்லூர் கிட்டுப் பூங்காவில் இடம்பெறும் தேர்தல் பரப்புரைக் கூட்டத் தில் பங்கேற்கும் பொது எதிரணியினர் இரவு 7.30 மணிக்கு வர்த்தக சங்கத்தின ருடன் சந்திப்பை நடத்தவுள்ளனர்.(ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திகள்

## திருமலை முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு செயலமர்வு



திருமலை, டிசெ. 30
திருகோணமலை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சில முன்பள்ளி நிலையங்களின் ஆசிரியர்களுக்கான செயலமர்வொன்று கடந்த வாரம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

குறிப்பாக கஷ்டப் பிரதேசங்களில்கடமையாற்றும் முன்பள்ளி ஆசிரியைகளே இதற்காக அழைக் கப்பட்டிருந்தனர்.

முன்பள்ளி மாணவர்களுக்குக்கற்றுக்கொடுக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய பல பிரயோக ரீதியிலான செயற்பாடுகள் இதன்போது வளவாளர்களால் தெளிவு படுத்தப்பட்டன. இதனூடாக மாணவர்களின் செயற்றிறனை அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும்.

இதில் வளவாளர்களாக ஆசிரிய ஆலோசகர் அருள்பாஸ்கரன், நன்னடத்தை உத்தியோகத்தர் தீபால் பாலித, மாவட்ட முன்பள்ளி அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரசன்ன பிரதீப் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (த)

# உள்ளூர் கலைஞர்களுக்கு குருநாகலில் அடி உதை

## இந்தியக் கலைஞர்களுக்கு வரவேற்பு

கொழும்பு, டிசெ. 30
'ஏமாற்றத்திலிருந்து மீள்வோம்' என்னும் தொனிப் பொருளில் வீதி நாடகம் நடித்து கொண்டிருந்த உள்ளூர் கலைஞர்கள் மீது நேற்றுக் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பொலிஸார் முன்னிலையிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

உள்ளூர் கலைஞர்கள் மீது, ஆளும் கட்சியினர் தாக்குதல் நடத்திய அதே வேளை இந்திய பொலிவூட் நடிகர் சல்மான்கான் உள்ளிட்ட இந்தியக் கலைஞர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நேற்று வரவேற்கப்பட்டுள்ளனர்.

பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவாக உள்ளூர் கலைஞர்களால் வீதி நாடகம் நடத்தப்பட்டது. ஏமாற்றத்திலிருந்து மீள்வோம்' என்ற தொனிப் பொருளில் அந்த வீதி நாடகம் இடம்பெற்றது.

குருநாகல் மாவட்டத்தின் கும்புகெடே என்னும் இடத்தில் வைத்து, ஆளும் கட்சியினர் என்று கூறப்படுவோரால் திடீரென வீதி நாடகக் கலைஞர்கள் மீது தாக் குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி மஹிந்தவின் படம் பொறிக்கப்பட்ட ரீசேர்ட் அணிந்திருந்த நீலப் படையைச் சேர்ந்த இளைஞர்கள். சிலராலேயே கலைஞர்கள் கடுமையாக தாக்கப்பட்டதுடன், தூஷிக்கப்பட்டனர். சம்பவ இடத்திலிருந்த பொலிஸார் முன்னிலையில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது பொலிஸாரை தள்ளி வீழ்த்தி கலைஞர்கள் மீது தாக்குதலை நடத்தியுள்ளனர்.

4 கலைஞர்கள் வரை இதில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்பட்டது. (த-5)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு நடமாடும் வைத்திய முகாம்

களுவாஞ்சிகுடி, டிசெ. 30
மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுப் போக்குவரத்து தடைப்பட்டுள்ள மட்டக்களப்பு மாவட்டம் திக்கோடை கிராம மக்களின் சுகாதாரத் தேவையைக் கருத்தில் கொண்டு நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடமாடும் வைத்திய முகாம் ஒன்று இடம்பெற்றது.

திக்கோடை கிராம மக்களின் சுகாதார தேவையைக் கருத்தில் கொண்டு திக்கோடை கிராமத்தின் கிராம சேவை உத்தியோகத்தர் எஸ்.சத்திய சோதியின் வேண்டுகோளுக்கமைய இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளை, களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையுடன் இணைந்து இந்த நடமாடும் வைத்திய முகாமை நடத்தியிருந்தது.

இதன்போது திக்கோடைக் கிராமத்தை சேர்ந்த 110 நோயாளர் பயனடைந்துள்ளனர். (த-32)

## பைசர் முஸ்தபா நேற்று மைத்திரியுடன் சந்திப்பு

கொழும்பு, டிசெ. 30
சிங்கப்பூரிலிருந்து நாடு திரும்பிய, பிரதியமைச்சர் பைசர் முஸ்தபா பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனாவைச் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தியுள்ளார்.

பொது எதிரணியில் இணைந்து கொள்ளும் அறிவிப்பை அவர் இன்று விடுக்கக் கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில், முதலீட்டு ஊக்குவிப்புப் பிரதி அமைச்சராக இருந்த பைசர் முஸ்தபா, பொதுபலசேனா ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குமாக இருந்தால் ஆளும் கட்சியில் இருந்து வெளியேறுவேன் என்று தெரிவித்திருந்தார். இந்த நிலையில் கடந்த 26 ஆம் திகதி, ஜனாதிபதி மஹிந்தவுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவதாகப் பொது பல சேனா அறிவித்திருந்தது.

அன்றைய தினமே, சிங்கப்பூருக்குச் சென்றிருந்த பிரதியமைச்சர், நேற்றுக் காலை நாடு திரும்பினார். நாடு திரும்பியதும் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை நேரடியாகச் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தினார். இதனடிப்படையில், பொது எதிரணி வேட்பாளரை ஆதரிக்கும் முடிவை பிரதியமைச்சர் இன்று வெளியிடுவார் என்று தெரிவிக்கப்படுகிறது. (த-5)



ஜனாதிபதித் தேர்தலின் ஒரு பரப்புரை உத்தியாக, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கையெழுத்துடனான கைக்கடிகாரங்களை இளைஞர், யுவதிகளுக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகளை ஆளுந்தரப்பு மேற்கொண்டுள்ளது. (த-5)

## அடை மழை காரணமாக கால்நடைகள் உயிரிழப்பு

களுவாஞ்சிக்குடி, டிசெ. 30
தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக வாழைச்சேனை, நாவலடி பிரதேசத்தில் கால்நடைகள் உயிரிழந்து வருகின்றன.

ஆதம்பாவா சவரியத்து என்பவரின் 11 மாடுகளும், அலியார் பௌசியா என்பவரின் 8 ஆடுகளும், அப்துல் கனி பதுறு நிஸா என்பவரின் 15 ஆடுகளும், வாஹித் என்பவரின் 6 ஆடுகளும் மேலும் பலரின் கால் நடைகளும் நோய் வாய் பட்டுள்ளன.

இப்பிரதேசத்தில் வாழும் மக்கள் விவசாயம், கால்நடை வளர்ப்பில் ஈடுபடுபவர்கள். தற்போதைய அடை மழை காரணமாக இவர்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. இது இவர்களின் வருமானத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (த-32)

## சுகாதாரத் தொழிற் சங்கங்கள் நாளை வரை சுகவீன விடுமுறை

தென்மராட்சி, டிசெ. 30
சுகாதார திணைக்கள தொழிற் சங்கங்கள் அனைத்தும் (மருத்துவர் சங்கம் தவிர்ந்த) இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணி தொடக்கம் நாளை புதன் கிழமை காலை 7 மணிவரை சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக நேற்றுப்பிற்பகல் சுகாதார திணைக் கள நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளனர்.

மருத்துவமனைகளின் அவசர சிகிச்சைப் பிரிவுகள் தவிர்ந்த ஏனைய பிரிவுகள் இடம்பெறாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி மருத்துவமனையில் இன்று நடைபெறவிருந்த கிளினிக்குகளின் நோயாளர்கள் நாளை வந்து மருந்துகள் பெற்றுக்கொள்ளலாமெனவும், உத்தியோகத்தர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதால் விடுதிகளில் சிகிச்சை பெறுபவர்களுக்கு உதவியாளர் ஒருவர் மருத்துவ அதிகாரியின் அனுமதியுடன் விடுதியில் தங்கலாமெனவும் மருத்துவமனையின் சமையலறையும் இயங்காததால் விடுதிகளில் தங்கியுள்ள நோயாளர்களுக்கு உணவு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

இலங்கை தாதிய உத்தியோகத்தர் சங்கம், சிற்றூழியர் சங்கம், மருந்தாளர், மருத்துக் கலவையாளர் சங்கம், ஆய்வுகூட உத்தியோகத்தர் சங்கம் உட்பட தொழிற்சங்கங்கள் சில கோரிக்கைகளை முன்வைத்து இன்று சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

NGT GATEWAY
No. 39, College Road, Neeraviady, Jaffna.
GATEWAY CfICT



Limited Space Registration Required
New Batches Start on
Saturday, 03rd, January 2015.

ICT Classes for O/L Students
Classes for School Students as per their Government Curriculum, Evening & Week end classes can be arrange for student's convenience

Computer Classes for Kids
Introduction to ICT, Keyboarding, MS Word, MS Excel, MS Powerpoint, Internet & Techniques
Evening & Week end classes available

New ICDL Base for Job Seekers
Certifies essential skills, as the skills covered in this 4 module certification are essential for anyone who uses computers and other devices on a daily basis.
It is recommended that everyone should certify their skills to this level.

E-Citizen for O/L Students
Sets out essential concepts and skills related to the use of devices, file creation and management, networks and data security. Week days & week end classes are available

Courses available at all New Gateway Tech Branches
(Jaffna, Nelliady, Chavakacheri, Kilinochchi)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடரும் வகையில் திருத்தம்

## மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.30
ஜனாதிபதிக்கு எதிராகவும் வழக்குத் தொடரும் வகையில் அரசமைப்பு திருத்தப்படும் என்று தெரிவித்துள்ளார் பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன.



மொனராகலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பரப்புரைக் கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தற்போதைய அரசமைப்பின்படி ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடர முடியாது. ஆயினும் எதிர்வரும் 8 ஆம் திகதி இடம்பெறவிருக்கும் தேர்தலில் மக்களால் அமைக்கப் படும் ஆட்சியில் ஜனாதிபதிக்கு எதிராகவும் வழக்குத் தொடரும் வகையில் அரசமைப்பு சீர்திருத்தப்படும் என்று அவர் அங்கு குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரக் கட்சியின் ஜனநாயகத் தன்மையையும் பண்டாரநாயக்க கொள்கைகளையும் ஜனாதிபதி மஹிந்த மறந்து செயற்பட்டார். நாட்டின் சட்டம் ஒழுங்கு மற்றும் நீதித்துறையின் சுயாதீனத்தன்மையை உறுதி செய்வதன் மூலம் நல்லாட்சியை ஏற்படுத்த முடியும் - என்றும் அவர் அங்கு மேலும் குறிப்பிட்டுள்ளார். (ந)

# தேர்தலை கண்காணிப்பதற்கு தாய்வான் நாட்டினருக்கு தடை

### நுழைவிசைவு வழங்க மறுத்தது வெளிவிவகார அமைச்சு

கொழும்பு, டிசெ. 30
ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிக்கும் பணியில், தாய்வான் நாட்டவர்களை ஈடுபடுத்துவதற்கு வெளிவிவகார அமைச்சுத் தடை விதித்துள்ளது.

தாய்வானில் இருந்து 15 கண்காணிப்பாளர்களை அழைக்க, தேர்தல் கண்காணிப்பு அமைப்பு ஒன்று கோரியிருந்த அனுமதி நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்களைப் பயன்படுத்த முடியும் என்று தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்திருந்தார். அதற்கமைய பல்வேறு தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்கள், சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்களைப் பயன்படுத்தி வருகின்றது.

அதனடிப்படையில் தாய்வான் நாட்டைச் சேர்ந்த சர்வதேச கண்காணிப்பாளர்களைப் பயன்படுத்துவதற்கான கோரிக்கை விடுக்கப்பட்டது.

**தேர்தல் ஆணையாளர் மூலம் விடுக்கப்பட்ட இந்த அனுமதியை வெளிவிவகார அமைச்சு நிராகரித்துள்ளது. தாய்வான் நாட்டு கண்காணிப்பாளர்களுக்கு, நுழைவிசைவு (விசா) வழங்க முடியாது என்று கூறியுள்ளது.**

தேர்தல் ஆணையாளர் மூலம் விடுக்கப்பட்ட இந்த அனுமதியை வெளிவிவகார அமைச்சு நிராகரித்துள்ளது. தாய்வான் நாட்டு கண்காணிப்பாளர்களுக்கு, நுழைவிசைவு (விசா) வழங்க முடியாது என்று வெளிவிவகார அமைச்சு கூறி விட்டதால், தம்மால் அவர்களுக்கு அனுமதி வழங்க முடியாது என்று தேர்தல் ஆணையாளர் தமக்குத் தெரியப்படுத்தியிருப்பதாக, தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் அமைப்பின் தலைமை இணைப்பாளர் டி.எம். திசநாயக்க தெரிவித்துள்ளார்.

தமது அமைப்பால், ஆசிய மற்றும் அமெரிக்க பிராந்தியங்களைச் சேர்ந்த 68 சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் அழைக்கப்பட்டிருந்ததாகவும், தாய்வான் நாட்டவர்கள் தவிர்ந்த ஏனையோருக்கு தேர்தல் ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

# தோட்ட மக்களுக்கு நிலையான வீடுகள்

## ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு

தோட்ட மக்களுக்கு நிலையான குடியிருப்புகள் அமைத்துக் கொடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.



நுவரெலியாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நிலையானகுடியிருப்புகள் அமைப்பது தொடர்பான வேலைத் திட்டம் தம்மால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் அங்கு தெரிவித்துள்ளார்.

இன்னும் சில மாதங்கள் சென்ற பின்னர் நீங்கள் வாழும் இந்த லயன் அறைகளை அகற்றி உங்களைப் புதிய வீடுகளில் குடியமர்த்துவோம் என்றும் அவர் அங்கு குறிப்பிட்டுள்ளார். (ந)

# அளுத்கம வன்முறை எதிரணியின் நாடகமே

### இப்படிக் கூறுகின்றது பொதுபல சேனா

கொழும்பு, டிசெ. 30
ஜனாதிபதித் தேர்தலுக்காக எதிரணியால் அரங்கேற்றப்பட்ட நாடகமே, அளுத்கமையில் நடந்தேறிய முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை – என்று தெரிவித்துள்ளது பொதுபலசேனா அமைப்பு. நல்லாட்சி எனும் பெயரில் கடந்த சில வருடங்களாக செய்த சூழ்ச்சிகள் தற்பொழுது அரங்கேற்றப்பட்டு வருகின்றன என்றும் அந்த அமைப்புக் குறிப்பிட்டுள்ளது.

பொதுபல சேனா அமைப்பின் தலைமைக் காரியாலயத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அந்த அமைப்பின் நிறைவேற்று அதிகாரி டிலந்த விதானகே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நாட்டில்தற்பொழுதுஅனைத்து மதங்களும் ஒற்றுமையாக வாழும் சூழல் ஏற்பட்டுள்ளது. இந்தசூழலை இல்லாமல்செய்து, ஒன்றுக்கொன்று முரணான, ஒவ்வொரு இனங்களுக்கும்வேறான வலயங்களை அமைத்துநாட்டை மீண்டும் பாதாளத் துக்குள் தள்ள சில சக்திகள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்த சக்திகள் தமது வேலைகளை சாதித்துக் கொள்வதற்காக பொதுபலசேனாவின்பெயரை உபயோகிக்கின்றன. அளுத்கமை கலவரம் கூட இன்றைய ஜனாதிபதித்தேர்தலைமுன்னிட்டுபொது எதிரணியில் இணைந்துள்ள சக்திகளால் அரங்கேற்றப்பட்ட ஒரு நாடகம் ஆகும் – என்று அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (ந-5)

# எதிரணி அலுவலகம் மீது மஹியங்கனையில் சூடு

### மூவர் படுகாயம்

கொழும்பு, டிசெ. 30.
ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் நிலையில், தேர்தல் வன்முறைகளும் கட்டுக்கடங்காத வகையில் அதிகரித்துச் செல்லத் தொடங்கியுள்ளன. பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் பரப்புரை அலுவலகத்தின் மீது நேற்றுமுன்தினம் இரவும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

மஹியங்கனை நிதஹாங்கல சோரபொர என்னும் இடத்தில் அமைக்கப்பட்டிருந்த ஜனாதிபதி தேர்தல் நடவடிக்கை காரியாலயத்தின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வானில் வந்த 15 பேர் கொண்ட குழுவினர் சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டுவிட்டு அங்கிருந்துதப்பிச் சென்றுள்ளனர்.

இதன் போது தேர்தல் பரப்புரை அலுவலகத்தில் இருந்த அங்கவீனமான முன்னாள் இராணுவ கேணல் மற்றும் இன்னும் இருவரே காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் மஹியங்கனை வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந-5)

# அரவிந்த் குப்தாவுக்கு 100 மில்லியன் ரூபா?

### மஹிந்தவின் பரப்புரை நடவடிக்கைக்காக

கொழும்பு, டிசெ. 30
ஜனாதிபதி மஹிந்தவுக்கு ஆதரவாக, சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்திப் பரப்புரை மேற்கொள்வதற்காக, வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள இந்திய தகவல் தொழில்நுட்ப நிபுணர் அரவிந்த் குப்தாவுக்கு 100 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியாவின் ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியின் தகவல் தொழில்நுட்ப பிரிவின் தலைவரும், நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் சமூக வலைத்தளப் பரப்புரைகளுக்குப் பொறுப்பாக இருந்தவருமான அரவிந்த் குப்தா, ஜனாதிபதி மஹிந்தவுக்கு உதவுவதாக, 'தி ஹிந்து' நாளிதழ் கடந்தவாரம் செய்தி வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவான குழுவொன்று குப்தாவுக்கு 100 மில்லியன் ரூபா செலுத்தி அவரை வாடகைக்கு அமர்த்தியுள்ளதுஎன்றுகொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

கடந்த நவம்பர் மாதம் 21 ஆம் திகதி, தமது நான்கு நண்பர்களுடன், கொழும்பு வந்த அரவிந்த் குப்தா, சமூக வலைத் தளங்களைக் கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். இவற்றுள் இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு அதிகார சபையால்தடை செய்யப்பட்டுள்ளஊடகங்களும் அடங்கியுள்ளன.

ஜனாதிபதிமஹிந்தவால்பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளது உண்மையா என்று அரவிந்த் குப்தாவிடம் ஊடகம் ஒன்று கேள்வி எழுப்பியதற்கு, தான் சுதந்திரமானவர் என்றும், எவருக்காகவும் தன்னால் பணியாற்ற முடியும் என்றும் ஒரே வரியில் பதிலளித்துள்ளார். (ந-5)

# ஐ.தே.கவினர் நால்வர் ஜனாதிபதிக்கு ஆதரவு


கொழும்பு, டிசெ.30
ஐக்கிய தேசிய கட்சியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் 4பேர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளனர்.

அவர்கள் நேற்று அலரி மாளிகைக்கு சென்று ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கப் போவதாக தெரிவித்ததாக ஜனாதிபதி தேர்தல் பரப்புரை அலுவலகம் தெரிவிக்கின்றது.

மாத்தளை நகர சபை உறுப்பினர் துஷார பிரனாந்து, மாத்தளை பிரதேச சபை உறுப்பினர் அசித்த சேனாரத்ன, தொடாங்கொடை பிரதேச உறுப்பினர் பி.ஜே.எ.யு சிரிசேன, ஊவா பரணகம பிரதேச சபை உறுப்பினர் டி.எம். சிரிசேன ஆகியோரே இவ்வாறு ஜனாதிபதிக்கு ஆதரவுவழங்கத்தீர்மானித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிகவும் உண்மை போல் இருக்கும் தகவல்கள் வழமையாக நம்பத் தகுந்தனவாக இருப்பதில்லை!



## ரூ.30,000 மட்டுமே கொண்டு உலகளவில் பிரசித்தி பெற்ற நிறுவனத்துடன் இணைந்து மேலும் பணம் சம்பாதிக்கக் கூடிய அரிய வாய்ப்பு!

வீட்டிலிருந்து கொண்டே உங்கள் வசதிப்படி வேலை செய்து மாதமொன்றிற்கு ரூ.25,000 க்கு மேலான பணத்தைச் சம்பாதிக்கலாம்.

வேலை விபரம்: உலகளவில் பிரசித்த பெற்ற நிறுவனம் ஒன்றில் ஒரு தொகையான பிரத்தியேகப் பொருட்களின் விற்பனையை விருத்தி செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட பிரதிநிதி.

தகைமைகள்: க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் 3 பாடங்களில் சாதாரண சித்தி. வேலை முன் அனுபவம் தேவையில்லை.

பொருட்களின் விற்பனையை விருத்தி செய்வது மற்றும் இந்த பிரத்தியேக நிறுவனத்துடன் இணைய உங்கள் நண்பர்களை அறிமுகப்படுத்துதல் மூலமாக நீங்கள் மேலும் சம்பாதிக்க முடியும்.

மேற்கூறப்பட்ட தகவல் ஒரு உதாரணமாகும்!
பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங் ள் பல வடிவங்களில் உங்கள் வழியில் வரலாம்.

**அவை உங்களை ஏமாற்றுபவை மட்டுமல்ல அவை உங்கள் குடும்பங்களின் மகிழ்ச்சி மற்றும் நிம்மதியையும் அழிக்கின்றன!**
**நன்மையான மற்றும் பாதுகாப்பான வாய்ப்புக்களைத் தெரிந்தெடுத்து கஷ்டப்பட்டுச் சம்பாதித்த உங்கள் பணத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்!**

பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களின் அடிப்படை அம்சங்கள் உள்ளடக்குபவை

- பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பொழுது அல்லது பங்குபற்றுபவர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் அதிகரிக்கும் பொழுது உயர்ந்தவொரு வருமானம் கிடைக்கும் என உறுதிமொழி வழங்குதல்.
- நம்பமுடியாத உயர் வருமானங்கள் மற்றும் ஏனைய நன்மைகள் பற்றிய தவறான உறுதிமொழிகளை அடிக்கடி மேற்கொள்ளுதல்.
- திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படும் பொருட்களுக்குத் திடமான சந்தைக் கேள்வியோ மற்றும் இரண்டாந்தரச் சந்தையோ இல்லாதிருத்தல்.
- பொருட்களுக்கு உத்தரவாதங்களோ அல்லது விற்பனைக்குப் பிந்திய பணிகளோ வழங்கப்படுவதில்லை.
- திட்டத்திலிருந்தான வருமானம் பங்குபற்றுபவரின் விற்பனை அளவைப் பொறுத்தில்லாமல் அவன்/ அவள் கொண்டுவரும் புதிய பங்குபற்றுநர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து வேறுபடுதல்.
- பொதுவாக உயர்ந்த நுழைவுக் கட்டணத்தைக் கொண்டிருத்தல்.
- பங்குபற்றுநர் ஒருவர் திட்டத்திலிருந்து விலகிச் செல்லும் போது விற்பனை செய்யப்படாத மிகுதிப் பொருட்களை மீண்டும் வாங்கும் கொள்கை இல்லாதிருத்தல்.
- பொருட்களை விற்பனை செய்வதில் சிறிதளவு கவனத்தைக் கொண்டிருப்பதுடன் மேலும் புதிய பங்குபற்றுநர்களைச் சேர்ப்பதைப் பிரதான நோக்கமாகக் கொண்டிருத்தல்.
- மிகுந்த வருமானம் கொண்ட பேரம்பேசுதல் மூலம் புதிய பங்குபற்றுநர்களை அவசரமாகத் திட்டத்தில் சேர்ப்பதுடன் பங்குபற்றுநர்களை இரண்டாந்தரம் சிந்திப்பதற்குக் கால அவகாசம் வழங்காமல் இருத்தல்.
- திட்டத்தில் சேருவதற்கான வழமையான அழைப்பு, சிறிதளவு அல்லது முன்அனுபவம் அற்ற அல்லது தகைமைகள் தேவைப்படாத இலகுவானதொரு வேலையாக இருத்தல்.
- பொதுவாகத் திட்டத்தில் சேருவதற்கான கோரிக்கையைப் பெருமளவு உதாசீனம் செய்யமுடியாத நம்பிக்கையுள்ள ஒரு நண்பன் அல்லது குடும்ப அங்கத்தவர் ஒருவர் தான் உங்களைத் திட்டத்தில் இணைப்பதற்கு முயற்சி செய்பவராக இருத்தல்.
- திட்டம் தொடர்பான தகவல்கள், அதன் இருப்பிடம், தொடர்பு கொள்ளும் விபரங்கள் என்பவற்றைப் பொதுவாக அடையமுடியாதிருத்தல்.

குறிப்பு: பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களைத் தொடங்குதல் மற்றும் பங்குபற்றுதல் என்பன சட்ட விரோதமானதாகும். ஒருவர் குற்றவாளியாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் கடுமியச் சிறைத்தண்டனை மற்றும்/ அல்லது அபராதம் என்பவற்றிற்கு உட்படுத்தப்படுவார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

மேலதிக விசாரணைகளுக்கு:
தொலைபேசி: 2477100, 2477120, 2477129, 2398539 தொலைநகல்: 2477711

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ச்சிகள்

## வடக்கில்

அவர்கள் 100 நலன்புரி நிலையங்கள் மற்றும் உறவினர் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். யாழ்.மாவட்டத்தில் பாதிப்பு இதுவரை ஏற்படவில்லை என்று மாவட்டங்களின் இடர் முகாமைத்து நிலையத் தகவிட் பணிப்பாளர்கள் தெரிவித்தனர்.

கடந்த சனிக்கிழமை வரையில் 18 ஆயிரத்து 421 குடும்பங்களைச் சேர்ந்த 58 ஆயிரத்து 642 பேர் பாதிக்கப்பட்டிருந்தனர். 4 ஆயிரத்து 526 குடும்பங்களைச் சேர்ந்த 21 ஆயிரத்து 917 பேர் இடம்பெயர்ந்திருந்தனர். இரண்டு நாள்களில் சுமார் 30 ஆயிரம் பேர் எண்ணிக்கையில் பாதிப்பு அதிகரித்துள்ளது.

வவுனியா மாவட்டத்திலேயே பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. நேற்றுவரை 10 ஆயிரத்து 965 குடும்பங்களைச் சேர்ந்த 39 ஆயிரத்து 339 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஆயிரத்து 558 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 809 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் 57 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 30 வீடுகள் முழுமையாகவும் 117 வீடுகள் பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்டத்தில் 6 ஆயிரத்து 314 குடும்பங்களைச் சேர்ந்த 23 ஆயிரத்து 79 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 3 ஆயிரத்து 624 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 999 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களில் ஆயிரத்து 162 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 54 பேர் 20 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இடம்பெயர்ந்த ஏனைய 2 ஆயிரத்து 462 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 945 பேர் உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர். 6 வீடுகள் முழுமையாகவும் ஆயிரத்து 614 வீடுகள் பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளன.

அவர்களுக்கான உணவு உள்ளிட்ட வசதிகள் வழங்கப்படுகின்றன என்று உதவிப் பணிப்பாளர்களால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

மன்னார்

மன்னார் மாவட்டத்தில் மன்னார், மாந்தைமேற்கு, மடு, முசலி, நானாட்டான் ஆகிய 5 பிரதேச செயலர் பிரிவிலுமாக ஆயிரத்து 932 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 595 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஆயிரத்து 905 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 505 பேர் 31 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 128 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

முல்லைத்தீவு

முல்லைத்தீவிலும் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. நேற்றுவரை 4 ஆயிரத்து 371 குடும்பங்களைச் சேர்ந்த 14 ஆயிரத்து 140 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 174 குடும்பங்களைச் சேர்ந்த 514 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் 3 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதுதவிர சிலாவத்துறையில் இருந்து நேற்று முற்பகல் இடம்பெயர்ந்த சுமார் 21 குடும்பங்கள் நேற்றுப் பிற்பகல் தத்தம் வீடுகளுக்குச் சென்றுவிட்டனர். 97 வீடுகள் முழுமையாகவும் ஆயிரத்து 366 வீடுகள் பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணம்

கிழக்கு மாகாணத்தில் மட்டும் 8 லட்சத்து 29 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அதிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 4 லட்சத்து 93 ஆயிரம் பேரும், அம்பாறை மாவட்டத்தில் 2 லட்சத்து 89 ஆயிரம் பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். பொலநறுவை மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் 42 ஆயிரத்து 601 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பதுளை மாவட்டத்தில் மண்சரிவு காரணமாக சுமார் 8ஆயிரத்து 500 பேர் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர்.

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் 22 மாவட்டங்களில் நிலவும் வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு போன்ற இடர்களால் சுமார் 10 லட்சத்து 25 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டிருப்பதுடன், 24 பேர் உயிரிழந்துள்ளனர். 8 பேர் காணாமல் போயுள்ளனர். பாதிக்கப்பட்ட 31 ஆயிரத்து 188 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 9 ஆயிரம் பேர் 688 நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். நாடு முழுவதும் இதுவரை 4 ஆயிரத்து 684 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதுடன் 14 ஆயிரத்துக்கும் அதிகமான வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

பதுளை மாவட்டத்தில் மண்சரிவு காரணமாக 14 பேர் உயிரிழந்துள்ளனர். மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கால் நாடு முழுவதிலும் 18 பேர் காயமடைந்துள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

பல்வேறு குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறந்திருப்பதால் அவற்றை அண்டியுள்ள தாழ் நிலப் பகுதிகளில் வெள்ள மட்டம் அதிகரித்து வருகிறது.

எனினும், இலங்கையின் கிழக்குப் பகுதியை அண்மித்த வளிமண்டலத்தில் ஏற்பட்டிருந்த தாழமுக்கம் வடக்கு நோக்கி நகர்ந்து நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணத்தை அண்மித்த கடற்பரப்பில் நிலைகொண்டிருந்தது. இன்று மதியமளவில் யாழ்ப்பாணத்தைக் கடந்து சென்றுவிடும். இன்று சாதாரண மழைவீழ்ச்சி பதிவாகலாம். எனினும் கடலில் கடும் காற்று வீசக்கூடும் என்று யாழ்.திருநெல்வேலியிலுள்ள வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ந–4)

## தபால்மூல

தேர்தல் கடமையில் [illegible]ம் உத்தியோகத்தர்களுக்கான தபால்மூல வாக்களிப்பு இடம்பெற்றது.

இன்று, தேர்தல்கள் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான தபால்மூல வாக்களிப்பு இடம்பெறவுள்ளது. இவ்வேளை, இதுவரையில் தபால்மூலம் வாக்களிப்பதற்கு தவறவிட்ட ஏனையோரும் இன்று வாக்களிக்க முடியும். அந்தந்த மாவட்டச் செயலகங்களில் இன்று தமது தபால்மூல வாக்களிப்பைச் செலுத்த முடியும். தபால்மூல வாக்களிப்பின் இறுதி நாள் இன்று என்பது குறிப்பிடத்தக்கது. (ந–5)

## மஹிந்தவுக்காக

களமிறக்கியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னமும் 9 நாள்கள் இருக்கின்றன. பரப்புரை நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு 7 நாள்கள் மாத்திரமே இருக்கின்றன. இந்த நிலையிலேயே, இறுதிக் கட்ட தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளுக்காக இந்திய நடிகர்களை ஜனாதிபதி மஹிந்த களமிறக்கியுள்ளார்.

பொலிவுட் நட்சத்திரங்களான நடிகர் சல்மான்கான் மற்றும் நடிகை ஜெகலின் பெர்னாண்டஸ் தலைமையிலான 6 பேர் கொண்ட குழுவினர் நேற்றுக் காலை இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். இவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெறும் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் பங்கெடுக்கவுள்ளனர். (ந–5)

## ஐ.நாவுக்கு

வுக்கு ஆலோசனை வழங்குவதற்கு நியமிக்கப்பட்டுள்ள சர்வதேச நிபுணர் குழுவில் இடம்பெற்றுள்ள ஜப்பான் நாட்டுப் பிரதிநிதி மேற்படி அமர்வை கண்காணிக்கவுள்ளார்.

குறித்த அமர்வு முடிவடைந்த பின்னர் இடைக்கால விசாரணை அறிக்கையை வெளியிடும் பணியில் ஜனாதிபதி ஆணைக்குழு தீவிரமாக இறங்கவுள்ளது. இதன்படி பெப்ரவரி இறுதிவாரத்தில் அறிக்கை வெளியிடவுள்ளது.

எதிர்வரும் மார்ச்சில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரை (28ஆவது அமர்வு) இலக்கு வைத்தே இடைக்கால அறிக்கை வெளிவரவுள்ளது.

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் போர்க்குற்றம் மற்றும் மனித உரிமைமீறல்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணைக்குழு தனது விசாரணை அறிக்கையை மார்ச் மாத அமர்வின்போது வெளியிடவுள்ளது. இதற்கு பதிலளிக்கும் வகையில் மேற்படி அறிக்கையில் சில சரத்துகள் உள்ளடக்கப்படலாம் எனத் தெரியவருகிறது. எனினும், இது தொடர்பில் இன்னும் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகவில்லை.

அதாவது, சர்வதேச விசாரணையை நிராகரித்திருந்தாலும் உள்ளக விசாரணை முன்னெடுக்கப் படுகின்றது. எனவே, மேலும் கால அவகாசம் தேவை என்ற கோரிக்கையை விடுவதற்கான துருப்பாக இந்த இடைக்கால அறிக்கையை அரசு பயன்படுத்தலாம் என கூறப்படுகின்றது.

அதேவேளை, உள்ளக விசாரணைக் குழுவின் கடந்த அமர்வு வவுனியாவில் நடைபெற்றது. இதன் போதும் படையினருக்கு எதிராகவே அதிக முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. (ந–சி)

## தமிழர்களு

இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்த போது,அவரதுவெளிநாட்டுக் கொள்கைக்காக அவருக்கு நன்றி தெரிவித்தேன். நமது இரு நாட்டு உறவுகள் வலுப்பெறும் வகையில், வெளிநாட்டுக் கொள்கையை விரிவுபடுத்தியுள்ளார். இதுவே மீனவர்களை விடுதலை செய்வதற்கான முடிவெடுக்க காரணமாக இருந்தது.

மீனவர் பிரச்சினையை மனிதாபிமானத்தோடு அணுக வேண்டிய பிரச்சினையாகவே நான் பார்க்கிறேன். மீனவர்கள் தாக்கப்படுவதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை நான் மறுக்கிறேன். தாக்குதல்களுக்கும், எங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை. – என்றும் அவர் தெரிவித்துள்ளார். தமிழகத்தின் தந்தி தொலைக்காட்சிக்கு வழங்கியநேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமல்லாது நான் இலங்கை, இந்திய தமிழர்களுக்கு எதிரானவர் என்ற பரவலான பார்வை உள்ளது. நான் எப்படி தமிழர்களுக்கு எதிராக இருக்க முடியும். எனது அமைச்சரவையில் உள்ள தமிழ் அமைச்சர்களைக் கேட்டுப் பாருங்கள். என்னால் தமிழர்களுக்கு எதிராக செயல் படவே முடியாது. எனது உறவினர் ஒருவர் யாழ்ப்பாணத் தமிழர் ஒருவரை திருமணம் செய்திருக்கிறார். மற்றும் ஒரு உறவினர் கண்டியைச் சேர்ந்த, மலையகத்து இஸ்லாமியரை திருமணம் செய்துள்ளார்.

இந்தியாவை பூர்வீகமாக கொண்ட தமிழ்மக்களை எங்க அரசும் கண்டு கொள்ளவில்லை. மற்ற அரசுகள் அவர்களை கவனிக்கும் கடமையை மலையகத்தில் உள்ள நிறுவனங்களிடம் கொடுத்துவிட்டார்கள். ஆனால் நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான் அவர்களை கவனிக்கத் தொடங்கியுள்ளோம்.

நான் தமிழ் கற்க விரும்புகிறேன். நான் இன்னும் ஒரு தமிழ் மாணவன். ஒரு தலைவர் என்னை சிங்களத்தில் பேசச் சொன்னார். ஆனால் நான் மூன்று மொழியிலும் பேசினேன். இங்கு மூன்று மொழியும் உண்டு. இலங்கையில் எல்லோருக்கும் 3 மொழிகளும் தெரிய வேண்டும் என்று நினைத்தேன். அதைச் செய்கின்றோம் – என்றும் அவர் அந்த நேர்காணலில் கூறியுள்ளார். (ந–5)

## மரண அறிவித்தல்கள்

### தியாகராஜா திருநாவுக்கரசு
**(ஓய்வுபெற்ற தபாலதிபர்)**



பூநகரி, செட்டிய குறிச்சியைப் பிறப்பிடமாகவும், 55, கச்சேரி நல்லூர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராஜா திருநாவுக்கரசு 27.12.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராஜா- செல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான கனகசபை-பர்வதம் தம்பதியரின் மருமகனும், ஜெயமோகன் (U.N. மலேசியா), விஜித்தா (கொழும்பு), யசோதா (ஆசிரியர்-யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்) ஆகியோரின் அருமைத் தந்தையும், சாந்தாதேவி (U.N. மலேசியா), கைலைவாசன் (SEAMEN), பிரேம்குமார் (R.I.நல்லூர் பிரதேச சபை) ஆகியோரின் அன்பு மாமனும், நக்கீரன் (Queen Mery University-London), வைஷ்ணவி (Sayfol International School-Malaysia), ஆரூரன் (Royal International School - Colombo), சானுஜன் (J.H.C), தர்மிதன் (J.H.C.), கிஷோபிகா (J/SJB) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.12.2014) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

55, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2340, 077 9080 354

தகவல்:
குடும்பத்தினர்.

### சின்னவர் அழகக்கோன் பாசிங்கம் (S.A.பாலசிங்கம்)
(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், விலைமதிப்பீட்டுத் திணைக்களம், கொழும்பு பிரதம இலிகிதர், கச்சேரி, யாழ்ப்பாணம்)



பிரம்படி கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், நந்தாவில் ஒழுங்கை தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னவர் அழகக்கோன் பாலசிங்கம் நேற்று (29.12.2014) திங்கட்கிழமை காலமானார்.

அனானர் காலஞ்சென்றவர்களான அழகக்கோன் - நாகரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ் சென்றவர்களான வல்லிபுரம் - தையல்முத்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற விஜயமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற குலதேவி மற்றும் சாந்தினி, அபிராமி (பிரான்ஸ்), பானுமதி (காணி மாவட்ட பதிவகம் - யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற முரளிகிருஷ்ணன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தருமகுலசிங்கம் (சுவிஸ்), ஞானசீலன் (பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி பிராந்திய அலுவலகம், யாழ்ப்பாணம்), மனோகரன் (பிரான்ஸ்), தயாளன் (ஆதவன் றேடர், தாவடி) ஆகியோரின் அன்பு மாமனாரும், வாகீசன், காருண்யா, இந்துஜா, அபிஷன், சாதுரியன், பிரணவி ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2014) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் தாவடி இந்துமயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நந்தாவில் ஒழுங்கை,
தாவடி, கொக்குவில்.
021 205 3048

(55399)(12)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டு



# நியூஸிலாந்து அபார வெற்றி

நியூஸிலாந்து மற்றும் இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டு டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதல் டெஸ்ட் ஆட்டம் நேற்றையதினம் நியூஸிலாந்தின் கிறைஸ்ட் சேர்ச் மைதானத்தில் நிறைவுக்கு வந்தது.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கையணி முதலில் நியூஸிலாந்தை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. இதன்படி நியூஸிலாந்தின் தலைவர் மக்கலத்தின் அதிரடி கைகொடுக்க தனது முதல் இன்னிங்ஸிற்காக சகல இலக்குகளையும் இழந்து 441 ஓட்டங்களைக் குவித்தது. அதிக பட்சமாக மக்கலம் 195 ஓட்டங்களைப் பெற்றார்.
பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக லக்மல் மற்றும் மத்தியூஸ் தலா 3 இலக்குகளையும் எரங்க, பிரசாத் மற்றும் கௌசல் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணிக்கு அதன் முன்னணி வீரர்கள் உட்பட எவருமே தாக்குப்பிடிக்க முடியாமல் பத்து ஓட்டங்களுக்கு ஒரு இலக்கு என்ற சீரான இடைவெளியில் இலக்குகள் வீழ்த்தப்பட இலங்கையணி தனது முதல் இன்னிங்ஸிற்காக சகல இலக்குகளையும் இழந்து 138 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதனால் களத்தடுப்பினை தொடர்வதற்கான தகுதியினை இழந்து தொடர்ந்து துடுப்பெடுத்தாடுமாறு பணிக்கப்பட்டது.
பந்துவீச்சில் நியூஸிலாந்து சார்பாக பொல்லாட் மற்றும் வோல்க்னர் தலா 3 இலக்குகளையும் சௌத்தி மற்றும் நீஸம் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமானால் 303 ஓட்டங்களை பெறவேண்டும் என்ற கட்டாயத்தில் தமது இரண்டாவது இன்னிங்ஸிற்காக களமிறங்கிய இலங்கை அணிக்கு அதன் ஆரம்ப வீரரான கருணாரத்ன நிதானத்தை வெளிப்படுத்தி சதத்தினை பூர்த்திசெய்ய ஆட்டத்தின் மூன்றாம் நாள் நிறைவில் இலங்கை அணி 293 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்திருந்தது. ஆட்டத்தின் நான்காம் நாளான நேற்றையதினம் மேலதிகமாக பத்து பந்துப்பரிமாற்றங்கள் வீசப்பட்ட நிலையில் மத்தியூஸ் 66 ஓட்டங்களுடனும் கௌசல் 12 ஓட்டங்களுடனும், பிரசாத் 4 ஓட்டங்களுடனும் வெளியேறி ஏமாற்றம் கொடுக்க மென்பான இடைவேளையில் இலங்கை அணி 8 இலக்குகள் இழப்புக்கு 329 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இறுதியில் இலங்கையணி சகல இலக்குகளையும் இழந்து 407 ஓட்டங்களை மட்டுமே பெற்று 105 ஓட்டங்களை வெற்றியிலக்காக நிர்ணயித்தது. அதிகபட்சமாக கருணாரத்ன 152 ஓட்டங்களைப் பெற்றார்.
பந்துவீச்சில் நியூஸிலாந்து சார்பாக சௌத்தி மற்றும் பொல்லாட் தலா 4 இலக்குகளையும் கிறைக் மற்றும் நீஸஹம் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
105 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனும் இலகுவான இலக்கினை நோக்கி தமது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த நியூஸிலாந்து அணி 2 இலக்குகளை இழந்து வெற்றியீட்டியது. வில்லியம்சன் 31 ஓட்டங்களுடனும் ரெய்லர் 39 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.
பந்துவீச்சில் இலங்கை சார்பாக கௌசல் மற்றும் எரங்க தலா ஒரு இலக்கைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக மக்கலம் தெரிவானார். இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரில் நியூஸிலாந்து அணி 1:0 என்ற அடிப்படையில் முன்னிலையில் உள்ளது.
இந்த இரண்டு அணிகளுக்குமான இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் சனிக்கிழமை வெலிங்ரனில் நடைபெறவுள்ளது. (த-ரி)

# உலகக் கிண்ண அணியில் யுவராஜ்?



அரியானா, மகாராஸ்டிரா அணிகளைத்தொடர்ந்து, சவுராஸ்ரா அணிக்கு எதிராகவும் அசத்தி ஹட்ரிக்' சதம் விளாசினார் பஞ்சாப் வீரர் யுவராஜ் சிங்.
இந்திய அணி வீரர் யுவராஜ் சிங் கடந்த 2011 உலகக்கிண்ணத் தொடரில் தொடர் நாயகன்' விருது வென்றார். இதன் பின் இவருக்கு இறங்கு முகம் தான்.
2015 உலகக்கிண்ணத் தொடருக்கான 30 பேர் கொண்ட உத்தேச அணியில் சேர்க்கப்படவில்லை. ஐ.பி.எல்., தொடரில் கடந்த ஆண்டு ரூபா 14 கோடிக்கு வாங்கப்பட்ட இவரை, இந்த ஆண்டு பெங்களூர் அணி கழற்றி விட்டது. சமீபத்தில் இந்தியக் கிரிக்கெட் சபை ஒப்பந்தப் பட்டியலில் இருந்தும் நீக்கப்பட்டார்.
இருப்பினும் மனம் தளராத இவர் ரஞ்சிக் கிண்ணத் தொடரில் அசத்தி வருகிறார். அரியானா (130), மகாராஸ்ரா (136) அணிகளுக்கு எதிரான ரஞ்சி கிண்ண லீக் ஆட்டங்களில் சதம் அடித்திருந்தார்.
தற்போது, சவுராஸ்ரா அணிக்கு எதிரான லீக் ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய யுவராஜ் ஆட்டமிழக்காது 127 ஓட்டங்களைப் பெற்று முதல் தர கிரிக்கெட்டில் 23ஆவது சதம் கடந்தார்.
தொடர்ச்சியாக மூன்று சதம் அடித்த யுவராஜ் தற்பொழுது நல்ல நிலையில் உள்ளதனாலும் யுவராஜின் சிறப்பான சாதனைகளில் பெரும் பாலனவை ஆஸ்திரேலிய மைதானங்களில் பதிவுசெய்யப் பட்டுள்ளதனாலும் அடுத்த ஆண்டு உலகக்கிண்ணம் ஆஸ்திரேலியா மற்றும் நியூஸி லாந்து மைதானங்களில் நடைபெறவுள்ளதனா லும் மீள் பரிசீலனை முறைமூலம் மீண்டும் உலகக் கிண்ண அணியில் இடம்பெறுவேன் என்ற நம்பிக்கையில் காத்துள்ளார். (த)

## கபடி போட்டியில் சர்ச்சை; விசாரணைக்கு உத்தரவு

உலகக்கிண்ண கபடி இறுதி ஆட்டத்தில் சர்ச்சை நடந்தது என எழுந்த சர்ச்சை குறித்து விசாரிக்க பஞ்சாப் அரசு உத்தரவிட்டுள்ளது. இதனால் பாகிஸ்தான் அணி தொடர்ந்து இந்தியாவில் தங்கியுள்ளது.
உலகக்கிண்ண கபடி இறுதி ஆட்டம் கடந்த 23ஆம் திகதி பஞ்சாப்பில் நடந்தது. இந்த இறுதி ஆட்டத்தில் இந்திய அணி பாகிஸ்தானை வீழ்த்தியது. இது குறித்து பாகிஸ்தான் அணியின் தலைவர் அகமது சபிக் கூறுகையில இறுதி ஆட்டத்தில் இந்தியாவுக்கு ஆதரவாக நடுவர்கள் செயல் பட்டனர். ஒருங்கிணைப்புக் குழு நிர்வாகிகள், எங்கள் வீரர்களை மிரட்டும் வகையில் செயல்பட்டனர். இதை நிறுத்தவில்லைஎனில் எதிர்காலத்தில் பாகிஸ்தான் அணி இத்தொடரில் பங்கேற்காது, என்றார்.
இதையடுத்து இந்த சர்ச்சை குறித்து விசாரிக்க பஞ்சாப் முதல்வர் தனிக்குழு அமைத்துள்ளார். இந்த குழு இறுதி ஆட்டத்தில் நடந்த சர்ச்சைகள் குறித்து விசாரித்து அறிக்கை தரும். இதனால் பாகிஸ்தான் அணியின் நாடு திரும்பும் திட்டம் சற்று தள்ளி [illegible] (த-ரி)

## கிராமங்களில் அவலத்தை மாற்ற விரும்புகின்றேன்

பல கிராமங்களுக்கு இன்னமும் மின்சார வசதி இல்லை. இதை மாற்ற விரும்புகிறேன் என்று சச்சின் டெண்டுல்கர் கூறியுள்ளார்.
ஸ்டார் ஸ்போர்ட்ஸ் தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியதாவது,
பல கிராமங்களுக்கு இன்னமும் மின்சார வசதி இல்லை. சூரியன் மறைந்த பிறகு, மின்சார வசதி இல்லாத கிராமங்களின் வாழ்க்கை அப்படியே செயலற்ற நிலையில் உள்ளது. இதை மாற்ற விரும்புகிறேன். இதற்கு நிறையப் பேருடைய ஆதரவு தேவைப்படுகிறது. அது கிடைக்கும் என்று நம்புகிறேன் என்றார் சச்சின். துடுப்பாட்டத்தில் இருந்து ஓய்வுபெற்ற சச்சின் தற்பொழுது பலவேறுபட்ட சமூக சேவை நலத்திட்டங்களில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-ரி)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹோக்லி, ரஹானே இணைப்பாட்ட சாதனை

மெல்போர்ன்டெஸ்டில்கோஹ்லி, ரஹானே இணைந்து 4ஆவது இலக்குக்காக 262 ஓட்டங்கள் குவித்தனர். இதன் மூலம் கடந்த 10 ஆண்டுகளில் ஆசிய கண்டத்துக்கு வெளியே அதிக ஓட்டங்கள் சேர்த்த 2ஆவது இந்திய இணைப்பாட்டம்என்றபெருமை கிடைத்தது. இதற்கு முன் சச்சின், லக்ஸ்மன் ஜோடி 4ஆவது இலக்குக்காக 353 ஓட்டங்கள் (சிட்னியில் 2004) சேர்த்திருந்தனர்.

ஆசிய கண்டத்துக்கு வெளியே, எந்தவொரு இலக்குக்கும் 250 ஓட்டங்களுக்கு மேல் குவித்த 4ஆவது இந்திய ஜோடி என்ற பெருமைபெறப்பட்டது. இதிலும் முதலிடத்தில் சச்சின்–லக்ஸ்மன் ஜோடியே (353 ஓட்டங்கள் சிட்னியில் 2004) உள்ளது.

மெல்போர்ன் மைதானத்தில் 4ஆவது இலக்குக்காக 200 ஓட்டங்களுக்கு அதிகமாக சேர்த்த முதல் ஜோடி என்ற பெருமையை கோஹ்லி – ரஹானே பெற்றனர்.

கோஹ்லி, ரகானே ஜோடி 262 ஓட்டங்கள் குவித்தது. இதன் மூலம், இந்த மைதானத்தில் 90 ஆண்டுகளுக்குப் பின் 200 ஓட்டங்களுக்கு மேல் சேர்த்த முதல் ஜோடி என்ற பெருமை பெற்றது. இதற்கு முன் கடந்த 1925இல், இங்கிலாந்தின் ஆரம்ப ஜோடியான ஜாக் ஹொப்ஸ், ஹெர்பர்ட் 283 ஓட்டங்கள் குவித்தது.

இத்தொடரின் முதல் டெஸ்டில் இரண்டு சதம் (115,141) அடித்த கோஹ்லி மூன்றாவது டெஸ்டில் மூன்றாவது முறையாக சதம் (169) கடந்தார். இதன் மூலம் ஆஸ்திரேலியாவில் நடந்த ஒரு டெஸ்ட் தொடரில் மூன்று சதம் அடித்த இரண்டாவது இந்திய வீரரானார். முன்னதாக 1977 இல் கவாஸ்கர் மூன்று சதம் அடித்தார்.

மெல்போர்ன் டெஸ்ட் ஆட்டத்தில் ஆஸ்திரேலியா, இந்தியா சார்பில் ஸ்ரீவன் ஸ்மித் (192), கோஹ்லி (169) சதம் அடித்தனர். இதன் மூலம் ஆஸ்திரேலியாவில் நடந்த, ஒரே டெஸ்டில் நான்காம் இலக்க வீரராக களமிறங்கி, 150 ஓட்டங்கள் எடுத்தனர். இதற்கு முன் 1985இல் நியூஸிலாந்தின் மார்டின் குரோவ், ஆஸ்திரேலியாவின் ஆலன் பார்டர் இதே போல சாதித்தனர்.

மெல்போர்ன் டெஸ்ட்டில்கோஹ்லி 169 ஓட்டங்கள் குவித்தார். இதன் மூலம் டெஸ்ட் அரங்கில் தனது அதிகபட்ச ஸ்கோரை பதிவு செய்தார். இதற்கு முன் இத்தொடரில் நடந்த அடிலெய்டு டெஸ்டில் 141ரன்கள் எடுத்திருந்தார். தவிர, மெல்போர்ன் மைதானத்தில் சேவாக்கிற்கு (195, 2003, எதிர் ஆஸி.,) பின் அதிகபட்ச ஓட்டத்தினை பதிவு செய்த இந்திய வீரரானார்.


ஆஸ்திரேலியாவுக்கு எதிராக டெஸ்ட் ஆட்டங்களில் 1000 மற்றும் அதற்கு மேல் ஓட்டங்களைக் குவித்த 10வது இந்திய வீரரானார் கோஹ்லி. இவர் 11 ஆட்டங்களில் 1029 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

ஆசிய மண்ணிற்கு வெளியே, அதிக சதம் (6) அடித்த இந்திய வீரர்கள் பட்டியலில் கோஹ்லி ஐந்தாவது இடம் பிடித்தார். இப்பட்டியலில் முதல் நான்கு இடங்கள் முறையே சச்சின் (18), கவாஸ்கர் (15), டிராவிட் (14), லட்சுமண் (8) உள்ளனர். அதேவேளை தற்போது விளையாடும் இந்திய நடப்பு அணியில் ஆசிய மண்ணுக்கு வெளியே அதிக சதம் எடுத்த வீரர்கள் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார்.

மெல்போர்ன்டெஸ்டில்கோஹ்லி, ரஹானே சதம் அடித்தனர். இதன் மூலம், இந்தியா சார்பில் நான்காம் மற்றும் ஐந்தாம் இலக்க வீரராக களமிறங்கி, ஒரே டெஸ்டில் சதம் அடித்தவர்கள் என்ற பெருமை பெற்றனர். இது நான்காவது முறையாக அரங்கேறியுள்ளது.

இத்தொடரில் சிறப்பாக செயல்பட்ட ரகானே மூன்று முறை 50 ஓட்டங்களுக்கு அதிகமாக ஓட்டங்கள் குவித்துள்ளார். இதன் மூலம், ஆஸ்திரேலியாவில் நடந்த தொடரில் ஐந்தாம் இலக்க வீரராக களமிறங்கி அதிக (300) ஓட்டங்கள் குவித்த இரண்டாவது இந்திய வீரர் என்ற பெருமை பெற்றார். முதலிடத்தில் கங்குலி (504) உள்ளார்.

மெல்போர்னில் நடக்கும் பாக்சிங் டே' டெஸ்டில், இரு அணிகளும் முதல் இன்னிங்ஸில் 400 ஓட்டங்களை தாண்டுவது இது இரண்டாவது முறை. இதற்கு முன், 1983 இல் பாகிஸ்தான், ஆஸ்திரேலிய அணிகள் இதை நிகழ்த்தியிருந்தன. (த–ரி)





# அஜ்மல் விலகலால் அணி கஷ்டப்படும்

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இருந்து சுழற்பந்து வீச்சாளர் சயீத் அஜ்மல் விலகியிருப்பது பாகிஸ்தான் அணிக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்று முன்னாள் வீரர் சொகைப் அக்தர் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் சயீத் அஜ்மல் பெப்ரவரியில் தொடங்கும் உலகக் கிண்ணத் தொடரில் இருந்து விலகியுள்ளார். இதுபற்றி சொகைப் அக்தர் கூறும்போது, முழங்கையில் உள்ள குறைபாடு காரணமாக அஜ்மலால் விதிமுறைக்கு உட்பட்டு பந்துவீச முடியவில்லை. அஜ்மல் உலகக்கிண்ணத் தொடரில் கலந்துகொள்ள முடியாத காரணத்தால் பாகிஸ்தான் அணிக்கு நிச்சயம் பாதிப்பு ஏற்படும் என்றார். (த–ரி)

# தொடர் சர்ச்சையில் சிக்குகிறார் பதான்

அனுமதியின்றி குவைத்தில் துடுப்பாட்டத்தில் கலந்து கொண்டு இன்னொரு புதிய பிரச்சினையில் சிக்கியுள்ளார் யூசுப் பதான்.

சமீபத்தில் காஷ்மீர், பரோடா அணிகள் மோதிய ரஞ்சி கிண்ண லீக் ஆட்டம் வதோதராவில் நடந்தது. இதில் தன்னைக் கேலி செய்த ரசிகரை உடை மாற்றும் அறைக்கு வரவழைத்து கன்னத்தில் அறைந்து அடித்து உதைத்தார் பரோடா வீரர் யூசுப் பதான்.

இதனிடையே யூசுப் பதான் இந்திய கிரிக்கெட் சபையின் அனுமதி இல்லாமல் குவைத் சென்று ஆட்டத்தில் பங்கேற்ற போட்டோ ஒன்று இந்திய கிரிக்கெட் சபையின் மின்னஞ்சலுக்கு வந்தது. எந்த ஆட்டம் எப்போது நடந்தது என்பது குறித்த விவரங்கள் அதில் இல்லை. இருப்பினும் கடந்த மாதம் கிப்ஸ் மற்றும் அசார் முகமது ஆகிய வீரர்கள் பங்கேற்ற 20/20' போட்டியாக இது இருக்கும் எனத் தெரிகிறது. நல நிதித் திட்ட ஆட்டம் என்பதால் பதானுக்கு எவ்வித சம்பளமும் கிடைத்திருக்க வாய்ப்பில்லை எனினும் இது குறித்து விளக்கம் தருமாறு பரோடா துடுப்பாட்ட சங்கத்துக்கு இந்திய கிரிக்கெட் சபை கடிதம் அனுப்பியது. அதே நேரம் பதான் சென்றது குறித்து தங்களுக்கு எதுவும் தெரியாது என பரோடா இணைச் செயலர் ஸ்னேகல் பாரிக் கூறினார். இது குறித்து பதான் செய்தியாளருக்கு கூறுகையில் இந்திய கிரிக்கெட் சபையின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர், வெளிநாட்டு ஆட்டங்கள் தவிர ஒப்பந்த வீரர்கள் மற்றவற்றில் பங்கேற்கக் கூடாது. நான் தற்போது ஒப்பந்தத்தில் இல்லை என்பதால் இந்திய கிரிக்கெட் சபையிடம் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் பரோடா கட்டுப்பாட்டுச்சபையிடம்தொடர்புள்ளது என்பதால் இவர்கள் அனுமதி பெற்றுத்தான் குவைத் சென்றேன் என்றார்.

இருப்பினும், ரசிகருக்கு பளார்' விட்ட விவகாரம் துடுப்பாட்ட நான்காவது விதியை மீறிய செயல் என்பதால் பதான் மீது எப்படியும் நடவடிக்கை பாயும் எனஎதிர்பார்க்கப்படுகிறது. (த–ரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திகள்

## ஆஸி-இந்தியா ஆட்டம் படு சூடு



ஜாம்பவான்களின் தொடர் என வர்ணிக்கப்படும் இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான 4 டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவது ஆட்டம் தற்பொழுது ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி அணித் தலைவர் சிமித் மற்றுமொரு தலைமைச் சதத்தினை பூர்த்திசெய்ய ஆஸ்திரேலியா மீண்டும் ஒரு தடவை 500 ஓட்டங்கள் எனும் இமாலய இலக்கினை எட்டியது. இறுதியில் ஆஸ்திரேலிய அணி தனது முதலாவது இன்னிங்சிற்காக சகல இலக்குகளையும் இழந்து 530 ஓட்டங்களைப் பெற்றது.

அதிகபட்சமாக சிமித் 192 ஓட்டங்களையும், ஹரீஸ் 74 ஓட்டங்களையும் றொயேர்ஸ் 57 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இந்தியஅணி சார்பாக சமி 4 இலக்குகளையும் யாதேவ் மற்றும் அஸ்வின் தலா 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய இந்திய அணி மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் கோஹ்லியின் சதம் கைகொடுக்க 8 இலக்குகள் இழப்புக்கு 462 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆட்டத்தின் நான்காம் நாளான நேற்றைய தினம் தொடர்ந்து களமிறங்கிய யாதவ் வந்த வேகத்தில் வெளியேறினார் தொடர்ந்து சமியும் 12 ஓட்டங்களுடன் வெளியேற இந்திய அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல இலக்குகளையும் இழந்து 465 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக ஹரீஸ் 4 இலக்குகளையும் ஜோன்சன் 3 இலக்குகளையும் லியோன் 2 இலக்குகளையும் வற்சன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

65 ஓட்டங்கள் முன்னிலையுடன் தமது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸ்திரேலிய அணிக்கு அதன் ஆரம்ப வீரர்களான வோர்ணர் மற்றும் றொயேர்ஸ் சிறந்த தொடக்கத்தை அமைத்துக் கொடுத்தனர் அணியின் ஓட்டம் 57 ஆக இருந்த பொழுது முதல் இலக்காக வோர்ணர் 40 ஓட்டங்களுடன் வெளியேறினார். வோர்ணரை தொடர்ந்து வற்சன் 17, சிமித் 14 என சொற்ப ஓட்டங்களுடன் வெளியேற அணி திடீர் என சரிவு காண ஆரம்பித்தது. மறுபுறம் போராடிக் கொண்டிருந்த றொயேர்ஸும் 69 ஓட்டங்களுடன் வெளியேற ஆஸ்திரேலிய அணி 4 இலக்குகள் இழப்புக்கு 164 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. தொடர்ந்து வந்த போர்ண்ஸ் 9, கெடின் 13, ஜோன்சன் 15 என சீரான இடைவெளியில் வெளியேற நேற்றைய ஆட்டநேர நிறைவில் ஆஸ்திரேலிய அணி 7 இலக்குகள் இழப்புக்கு 261 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. மார்ஸ் 62 ஓட்டங்களுடனும் ஹரீஸ் 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் இந்தியா சார்பாக யாதவ், இசாந் சர்மா மற்றும் அஸ்வின் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் சமி ஒரு இலக்கையும் கைப்பற்றினர். ஆட்டத்தின் ஐந்தாம் நாள் இன்றாகும். ஆட்டம் இலங்கை நேரப்படி அதிகாலை 5 மணிக்கு ஆரம்பமாகும். (த-ரி)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111


### மரண அறிவித்தல்



**சிவசம்பு நாகரத்தினம்** (ரவி)

(சிவா கடைச்சல் தொழிற்சாலை உரிமையாளர், ஒட்டுசுட்டான்)

உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு நாகரத்தினம் நேற்று (29.12.2014) திங்கட்கிழமை மாலை அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இல.13 கலைப்புலவர் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்
மகன் நா. சஞ்சீவன்
தொ.பே: 077 665 0572


### பணியாளர் வெற்றிடம்

இந்தியப் புத்தகங்களை பாடசாலைகளுக்கு விற்பனை செய்யக் கூடியவர்கள் தேவை. யாழ், மன்னார், வவுனியா, கிளிநொச்சியில் உள்ள இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 071 216 3315

### A/L 2017 DAY CLASS

கலை, வர்த்தகம்
ஆரம்பம்
தை-3 8.00AM | தை-5 8.00AM
யூனிவேர்சல் கந்தர்மடம்

### NEC

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. | இரு இடத்திலும் | மணிக்கூட்டு வீதி யாழ்நகர்.

A/L Day Class

கலை, வர்த்தகப் பிரிவுகள்

ஆரம்பம்: 31-12-2014 புதன் 8.00Am

### மணமகள் தேவை

உத்தர நட்சத்திரம், பாவக்கிரகம் 52.[illegible]ம் இடத்தில் சூரியன் செவ்வாய் உள்ள 33 வயதுடைய பட்டதாரி மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு : 075 406 4454

### SPOKEN ENGLISH



O/L எழுதியோர், தொழில்புரிவோர், பல்கலை புகுமுக மாணவர்கள், இளைஞர், யுவதிகள் இணைய முடியும்.

சனி, ஞாயிறு பயிற்சிநெறி ஆரம்பம் : 03.01.2015

பிரிவு 1 : காலை 08.00-10.00 | பிரிவு 2 : மு.ப 10.00-12.00
பிரிவு 3 : பி.ப 01.00-03.00 | பிரிவு 4 : மாலை 03.00-05.00

மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.

பயிற்சிநெறி முடிவில் Diploma in English Certificate வழங்கப்படும்.

SAAMSON LANGUAGE SCHOOL
17, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 621 4567
021 320 3313

### BEACON STYDY CENTRE UDUPPIDDY

ஆரம்பம் 01.01.2015 வியாழன் 8.00 மணி

**வர்த்தகப் பிரிவு**

கணக்கீடு: திரு S. சரவணபவான்
பொருளியல்: திரு V. ஜெகதீசன்
வணிகக்கல்வி: திரு S. சிவராஜா

**கலைப்பிரிவு**

தமிழ்: திரு. K. நடராஜா
அளவையியல்: திரு A. பிரபானந்தன்
இந்துநாகரிகம்: திரு P. ஜோதீஸ்வரன்
புவியியல்: திரு. S. கிருஷ்ணராஜா
நாடகமும் அரங்கியலும்: திரு. K. கனகேஸ்வரன்

குறிப்பு:
2014 ஆம் ஆண்டு தோற்றியவர்களுக்கான மீட்டல் வகுப்புகள் DAY CLASS ஆரம்பமாகின்றன.

உடுப்பிட்டி நிர்வாகி

### NEW SCIENCE HALL

கன்னாதிட்டி யாழ்ப்பாணம்

A/L DAY CLASS

(2014 A/L பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்குரியது)

திங்கள் தொடக்கம் வெள்ளி வரை

7.00- 9.30 BIOLOGY
வழமையான ஆசிரியருடன்
திரு. T கெங்காதரன்

7.00- 8.30 COM. MATHS
திரு S. செந்தில்ராஜ்
திரு. P. செந்தில்நாதன்

9.30- 11.30 CHEMISTRY
திரு. K. சிவத்திரன்
திரு. T. சுசாந்தன்

11.30- 1.30 PHYSICS
திரு. G. பிரபா
திரு. S. சோதிலிங்கம்

வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

தொடர்பு : 0777 917 611

### வெளிவாரிப்பட்டப்படிப்பு கொழும்பு பல்கலைக்கழகம்

விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. உயர்தரப் பரீட்சைகளில் சித்தியடைந்தோர் நேரடியாகவும் ஏனையோர் அடிப்படைத் தகைமைப் பரீட்சை ஒன்றில் சித்தியடைவதன் மூலமும் பயில முடியும். விண்ணப்ப முடிவு திகதி 31 டிசம்பர் 2014. புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும் உங்கள் பெயர் விபரங்களை உடன் 772395895 என்ற எண்ணுக்கு எஸ்எம்எஸ் செய்யவும். மேலதிக விபரங்களை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு அண்மையிலுள்ள MCS நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**CIMA-UK**

புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. உயர்தரப்பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் 100வீதம் வரை வழங்கப்படவுள்ளன. விண்ணப்பிக்க விரும்புவோர் உங்கள் பெயர் சுட்டெண் என்பவற்றை உடன் 772395895 என்ற எண்ணுக்கு எஸ்.எம்.எஸ் செய்யவும்.

Operational level
Managerial level
Objective& Case study
start on 4th Jan 2015

**Engineering-USA**

நவீன தொழில்நுட்பத்தில் ஆர்வமுள்ள எவரும் பயிலலாம். உயர்தரப்பெறுபேறுகள் அவசியமில்லை. Microsoft, Cisco, Oracle நிறுவனங்களின் சான்றிதழ்களை உள்ளடக்கியது. BCS, IEEE நிறுவனங்களிடமிருந்தும் பொறியியலாளர் அங்கத்துவத்தினை பெற்றுக்கொள்ளலாம். கற்கைநெறி முடிவில் Work Permit மூலம் வெளிநாடு செல்வதற்கான வழிகாட்டல்கள் வழங்கப்படும். மேலதிக விபரங்கள் யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் உள்ள MCS நிறுவனத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.